# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 27 வெள்ளிக்கிழமை (14.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 322




14

அரசின் மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றத்தையும் கடந்தவை



21

அனு உலையை நீக்க மக்கள் போராட்டம்



25

மேதீவுகள் அதிரடி வெற்றி

### பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்த மனு நிராகரிக்கப்பட்டமை

# உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து கூட்டமைப்பு ஐ.நாவுக்கு செல்லும்

கொழும்பு, ஒக்ரோபர் 14

**அவசரகாலச் சட்ட விதிகளை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்தமையை எதிர்த்துத் தான் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்ததை எதிர்த்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவில் முறையிட உள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.**

அவசர காலச் சட்டத்தின் கீழ் இருந்த ஐந்து விதிமுறைகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டன. இதனை எதிர்த்துத் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

நேற்றுமுன்தினம் அந்த மனு விசாரணைக்கு வந்தபோது நீதிபதிகள் அதனை நிராகரித்தனர். குறித்த விதிமுறைகள் நிர்வாகத்திற்கோ அல்லது நிறைவேற்று அதிகாரத்திற்கோ உட்பட்டவை அல்லவென பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சவேந்திர பெர்னான்டோ தெரிவித்ததை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் மனுவை நிராகரித்தனர்.

பக் 28

## உள்ளூராட்சி உறுப்பினர் சொத்து விவரங்களை சமர்ப்பிக்கவில்லை

### சட்டம் பாயும் என்கிறார் உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஒக்.14

வடக்கில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் தமது சொத்து விவரங்களைத் தேர்தல் திணைக்களத்துக்குச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி நாளையாக இருந்தபோதும் நேற்றுவரை எவரும் தமது சொத்து விவரங்களை வெளியிடவில்லை.

தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தமது சொத்து மற்றும் கடன்கள் விவரங்களை அதற்குரிய படிவத்தில் நிரப்பிக் கடித உறையில் வைத்துத் தேர்தல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். வடக்கில் அந்த நடைமுறை பின்பற்றப் படவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பின்

பக் 26

## காணிப்பதிவு வடக்கு, கிழக்குக்கு மட்டுமல்ல; நாடு முழுவதற்குமே

### அமைச்சர் ஜனக பண்டார விளக்கம்

கொழும்பு, ஒக்.14

காணிப்பதிவு நடவடிக்கைகள் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் முன்னெடுக்கப் படவுள்ளன. இதில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மாத்திரம் விதிவிலக்கானவை அல்ல. தமிழர்களின் பிரச்சினைகளை இயன்றளவில் தீர்த்துவைப்பதற்கே அரசு மும்முரமாகச் செயற்படுகிறது. ஆனால், இந்த விடயத்தை ஒருசில தமிழ்த் தலைமைகள் அரசியல்

பக் 27

## செய்யாத குற்றத்துக்குப் பிடியாணையா? ஏற்கவே முடியாது என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக்.14

புலிகளின் பணத்தை எடுத்துக்கொண்டு செயற்படும் பத்திரிகைகள் ஊடாகவே செய்யாத குற்றத்திற்காக எனக்குப் பிடியாணை அனுப்பப்படுகிறது. இறுதிப் போரில் பெருமளவில் சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் எனக் கூறுவதை ஏற்க முடியாது. சிவிலியன்களை நாம் கொல்வதாக இருந்தால், இறுதிநேரத்தில் எவ்வாறு ஒன்றரை இலட்சம் சிவிலியன்கள் பாதுகாப்பாக எமது பக்கம் வந்திருப்பார்கள்?

- இவ்வாறு நேற்று கேள்வியெழுப்பினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பத்திரிகை ஆசிரியர்களை நேற்றுக்காலை அலரிமாளிகையில் சந்தித்தபோதே

பக் 26

## முல்லைத்தீவில் தேர்தலை நடத்த இதுவரை எந்த ஏற்பாடும் இல்லை

### தேர்தல் செயலகம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.14

பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தலை இந்த வருடத்துக்குள் நடத்துவது தொடர்பாக இதுவரை எவ்வித முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்குட்பட்ட பகுதிகளில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் பூர்த்தியடையாத காரணத்தினால் இந்த இரண்டு சபைகளுக்கான தேர்தல் பிற்

பக் 27

## இந்தியாவில் உள்ள ஈழ அகதிகளை வாக்காளராகப் பதிய முடியாத நிலை

யாழ்ப்பாணம்,ஒக்.14

கடந்த காலத்தில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் வாக்காளர் இடாப்பில் இடம்பெறாதவர்களைப் பதிவு செய்யும் விசேட வேலைத்திட்டம் தேர்தல் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இடம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியுள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழ அகதிகளை வாக்காளர் இடாப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவது குறித்து இதுவரை எந்த வித காத்திரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வது தொடர்பில் அதிகாரிகள் எவரும் இதுவரை அக்கறை கொள்ளவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் அவர்களின் பெயர் இந்த ஆண்டு வாக்காளர் இடாப்பில் இடம்பெறாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பக் 28

## ஒருமித்த கருத்துடன் பேசுவதற்கு கூட்டமைப்பு முன்வர வேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.14

தீர்வு குறித்த பேச்சுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருமித்த கருத்துடன் பேசுவதற்கு முன்வரவேண்டும். அவர்களிடம் இந்த விடயத்தில் ஒருமித்த கருத்து இல்லையென்றே நான் கருதுகிறேன். தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதற்கான வேலைகள் ஏற்கனவே முடிந்துள்ளன. எனவே இப்போது ஒருமித்த கருத்துடன் எம்முடன் பேசுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தயாராகவேண்டும்.

- இவ்வாறு நேற்றுப் பத்திரிகைகளின் ஆசிரியர்களைச் சந்தித்தபோது கருத்து வெளியிட்டார் ஜனாதிபதி. (த-சி)

## ஐரோப்பிய நாடாளுமன்றில் 'சிறீலங்காவின் கொலைக்களம்' மயான அமைதி! அதிர்ச்சி! அனைவரது கண்களிலும் கண்ணீர்

கொழும்பு, ஒக்.14

200இக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்த்திருக்க இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தம் தொடர்பான 'சிறீலங்காவின் கொலைக்களம்' நேற்று வியாழக்கிழமை ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஒளிபரப்பப்பட்டது.

இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி அனா கோம்ஸ் உண்மைகள் நிலைநாட்டப்படவேண்டும் என்ற முக்கியத்துவத்தை விளக்கினார். சனல் - 4 தொலைகாட்சிக்காக இந்த ஆவணப் படத்தைத் தயாரித்தவர் என்ற அடிப்படையில் அதன் தயாரிப் பாளர் இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்ட விவரத்தை விளக்கினார்.

இந்த ஆவணப்படம் திரையிடப்பட்ட போதும் அதன் பின்பும் சபையில் மயான அமைதியும் அதிர்ச்சியும் நிலவியது. அதன் பின் பேசிய அவைத் தலைவர் திருமதி அனா கோம்ஸ் கண் கலங்கிய நிலையில் பேசுவதற்கு வார்த்தைகளைத் தேடிக் கொண்டு இருந்தார்.

இந்த அவையில் பங்குபற்றிய அனைவரின் வார்த்தைகளிலும் அதிர்ச்சியும், பெண்களின் உடல்களைத் தூக்கி எறிந்து காலால் உதைக்கும் போது கோபம் அவர்களின் முகத்தில் தெரிந்தது. சிலர் இந்த

பக் 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மழைக்கான கூடுதல் சாத்தியமும் ஏனைய மாவட்டங்களில் 20 வீத சாத்தியமும் உள்ளது.

# மாகாணத் தமிழ் இலக்கிய விழா மன்னாரில் இன்று ஆரம்பமாகிறது

வலி.வடக்கு ஒக். 14

வடமாகாண பண்பாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் வட மாகாண தமிழ் இலக்கியப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு சிவத்தம்பி அரங்கில் ஆரம்பமாகிறது.

காலை அமர்வில் சமகால கலை இலக்கியங் களில் கலை, பண்பாட்டுக் கோலங்கள் என்னும் பொருளில் தலைவர் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் ஆய்வரங்கு இடம்பெறவுள்ளது.

இவ்வாய்வரங்கில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் த.ரதீஸ்வரன் நாடகங்களின் சமகாலப் பண்பாடுபற்றியும், கலாநிதி செ.யோகநாதன் புகலிட இலக்கியங்களில் சமகாலப் பற்றியும் - வணபிதா தமிழ்நேசன் அடிகளார் நவீன கவிதைகளின் சமகாலப் பண்பாடு பற்றியும் ஆய்வுகட்டுரைகளைச் சமர்ப் பிப்பதைத் தொடர்ந்து கருத் தாடலும் தொகுப்பும் இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 3 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் சவரியான் லெம்பேட் அரங்கில் மன்னார் மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன் தலைமையில் ஆரம்ப மாகவுள்ளன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந் தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. மோகநாதன் உதவி அரசாங்க அதிபர் எஸ்.பரமநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலாளர் திருமதி எ.ஸ்ரான்லிடிமெல், நானாட்டான் பிரதேச செயலாளர் அ.சந்திரஐயர், முசலி பிரதேச செயலாளர் செ.கேதீஸ்வரன் மடு உதவி அரசாங்க அதிபர் தி.திரிஸ்குமார, மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் மா.ஸ்ரீஸ் கந்தகுமார் மன்னார் உதவிப் பிரதேச செயலர் எ.சத்திய சோதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாலையில் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்வுகள் மு.ப. 9மணிக்கு மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் வித்துவான் ரகுமான் அரங்கில் ஆரம்பமாகவுள்ளன.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் தொடர் ஆய்வரங்கில் புனைக் கதை இலக்கியங்களில் சமகாலப் பண்பாடுபற்றி எஸ்.ஏ.உதயனும், செய்தித் தாள்களில் சமகாலப்பண்பாடுபற்றி எஸ்.விஜய சுந்தரமும், சடங்கு முறைகளில் சமகாலப் பண்பாடுபற்றி நா.தர்மராசாவும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பர்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 3 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் புலவர் பெஞ்சமின் செல்வம் அரங்கில் வட மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கைத் தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிசாட்பதியுதின், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள்பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் மன்னார் தமிழ் சங்கத் தலைவர் வணபிதா தமிழ்நேசன் அடிகளார், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜே.எ.குரூஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். மாலையில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (த-86)

## மின்தடை

உயர் அழுத்த மின்விநியோக வலைப்பின்னலில் அவசர திருத்த வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை பின்வரும் இடங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி கோண்டாவில், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, ஆனைக்கோட்டை, நவாலி, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, தட்டாதெரு, கோம்பயன்மணல் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன் துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இதேவேளை, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். குடாநாடு முழுவதும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களிலும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-10)

# 'ஓஸன் லேடி' விற்பனைக்கு

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 72 தமிழ் குடியேற்ற வாசிகளைக் கனடா நாட்டிற்கு ஏற்றிச் சென்ற வி.எம். ஓஸன் லேடி கப்பலை விற்க கனேடிய அரசு முடிவு செய்துள்ளது.

இதன் உரிமையாளர் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் இக்கப்பலில் கண்டு பிடிக்கப்பட்ட ஆவணங் களின் பிரகாரம் இதன் உரிமையாளரின்பெயர் எம்.வி. பிறின்ஸ்ஸஸ் ஈஸ்வரி என மத்திய நீதிமன்றின் தகவல்கள் தெரி விக்கின்றன.

இந்த நிலையில் கப்பலை விற்பதற்கான அனுமதியைத் தருமாறு கனேடிய அதிகாரிகள் மத்திய நீதிமன்றிடம் கேட் டிருந்தனர்.விற்பனைக்கான அனுமதி கிடைத்த நிலையில் அதற்கான தரகுப் பணியில் ஈடுபடுவதற்காக ஜொனெசியா கப்பல் கட்டுமான ஆலோசகர்களை கனேடிய அரசு நியமித்துள்ளது.

கனேடிய அரசு இதனைப் பராமரிப்பதற்காக ஏற்படும் செலவு உள்ளடங் கலாக இதன் அண் மைய பெறுமதி யானது 500,000 டொலர்கள் தொடக் கம் 800,000 டொலர்கள் வரையான தாகும் என நீதிமன்றத்தின் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

# உள்ளூராட்சிச் சபைத் தலைவர்களுக்கு வவுனியாவில் இரு தினங்கள் மாநாடு

யாழ்ப்பாணம், ஒக்.14

உள்ளூராட்சி சபைத் தலைவர்கள், உபதலைவர்கள் ஆகியோருக்கான இருநாள் உயர்மட்ட மாநாடு வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை. சோ.சேனாதிராஜா இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் இந்த உயர்மட்ட மாநாடு வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வடக்கு உள்ளூராட்சிச் சபைகளை பிரதி நிதித்துவப் படுத்தும் தலைவர், உப தலைவர் ஆகியோருக்கே இந்த மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் கடந்த கால அபிவிருத்தி முன்னேற்றம் மற்றும் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது. (த-302)

COLOMBO STOCK EXCHANGE
பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
ஐப்பசி 13 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,585.99↓
மிலங்கா(MPI) 5,910.50↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,207.48 Mn
பங்குகளின் அளவு(No.) 51,13Mn
வியாபாரம்(No.) 12,137
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
மேக்கன்ரைல் சிப்பிங் 342.50
ஏசியா கப்பிற்றல் 86.80
மல்வத்தை(x) 7.00
பிம்புத் லங்கா 63.20
செரன்டிவ் ஹொட்டல் 31.90
குறைவு(Top 5 losers) - விலை Rs.
சாம்சன் இன்ரநசனல் 135.00
பின்லே கொழும்பு 258.00
கென்வீனியன் பூட் 351.90
பேறுவல வோக் இன் 178.00
யூனியன் கெமிக்கல் 720.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

## மழை பெய்யும் சாத்தியம்

நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வளிமண்டலத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதன்போது இடிமின்னல் காலநிலை குறித்து மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என்று வழி மண்டலத் திணைக்களத்தின் அதிகாரி சூரியகுமாரன் கேட்டுக்கொண்டுள்ளார். (சி)

# நிகழ்வுகள்

### கற்றல் உபகரணம் வழங்கல்

மீள்குடியமர்ந்துள்ள நிலையில் கற்கும் காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாசாலை, வேரம்பிட்டிய ஸ்ரீ கணேசா வித்தியாசாலை மற்றும் யாழ்ற்றன் கல்லூரி மாணவர்களுக்கு யாழ். எயிட் நிறுவனத்தால் இன்று கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

வர்த்தகர் இ.எஸ்.பி.நாகரட்ணம், தீவக வலய அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஸ்ரேனிஸ்வரன், வர்த்தகர் செந்தூரன் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டு இவற்றை வழங்கவுள்ளனர். (ம)

### பரிசளிப்பு விழா

சாவகச்சேரி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரெட்ணம் கலந்துகொள்வார். (ம-207)

* * *

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.பாடசாலையின் அதிபர் இ.பாலகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பழைய மாணவர்கள் த.இராசலிங்கம் திருமதி நி.இராசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-313)

### நூல் வெளியீட்டு விழா

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய பக்தியின் மொழி தமிழ் என்ற நற்சிந்தனை நூலின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் உள்ள கம்பன் கோட்ட மண்டபத்தில் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் எஸ்.லலீசனும், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், வெளியீட்டுரையை ஆசிரியர் ந.விஜயசுந்தரமும், அறிமுகவுரையை கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ச.சந்திரசேகரும் நயப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும் வழங்கவுள்ளனர். (ம-38)

### விழிப்புணர்வு

சர்வதேச கை கழுவும் தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துப்பாகங்களிலும் விழிப்புணர்வு நிகழ்வுகள் சுகாதாரப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.யாழ். கோட்டமட்ட பாடசாலைகளுக்கான நிகழ்வுகள் கொட்டடி [illegible]லயத்திலும் , நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கான நிகழ்வுகள் திருநெல்வெலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்திலும், கோப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கான நிகழ்வுகள் ஆவரங்கால் நடராஜ ராமலிங்கம் வித்தியாலயத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.ஆரம்பப்பிரிவு பாடசாலை சிறுவர்களிடையே கை கழுவும் சுகாதாரப் பழக்கங்களை ஏற்படுத்துவதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-311-23)

### திரைப்பட விழா

ஐரோப்பிய திரைப்பட விழா இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.இந்த விழாவில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ''பான்சி ரேயின் அறுமோசம் வேகி'' எனும் திரைப்படம் திரையிடப் படவுள்ளது. திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையக மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறுகின்றது. (த-10)

### கௌரவிப்பு விழா

வலி.தென்மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசமும் முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் ஆசிரியர், சிறுவர் விழா வலி.தென்மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் வலி. தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எம்.எக்ஸ். சர்வானந்தன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.ஆசியுரையை அருட்தந்தை செ.நேசநாயகம் ஆற்றுவார். பிரதம விருந்தினராக ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா கலந்து கொள்வார். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளரைத் தடுப்பது, பதியாமல் விடுவது என்பன அடிப்படை மனித உரிமை மீறலாகும்

## உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14

வாக்குரிமை உள்ளவரை வாக்களிக்க விடாமல் தடுப்பதும்,வாக்காளராகப் பதிய விண்ணப்பித்து தகுந்த காரணங்களின்றி பதிவு செய்யாது விடுவதும் அடிப்படை உரிமை மீறலாகவே கருதப்படும்.

இவ்வாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் நடத்தப்பட்ட மனித உரிமைகளைப் பாதுகாக்கும் செயலமர்வு யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புகள் பீடத்தில் நடைபெற்றது.இதில் வாக்களிக்கும் உரிமை என்ற தலைப்பில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாக்குரிமை என்பது அடிப்படை உரிமைகளோடு சம்பந்தப்பட்ட விடயமாகும். இதனை உறுதிப்படுத்துவதன் மூலமே நாடு எப்படி ஆளப்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கும், தகுதியானவர்களைத் தெரிவதற்கும் முடிகின்றது. யுத்த சூழ்நிலை, இடப்பெயர்வுகள், கல்வி அறிவின்மை, அக்கறையின்மை என்பனவற்றால் சிலர் வாக்களிப்பின் பெறுமதியை உணர்ந்து கொள்ளாமல் வாக்குரிமையை இழந்து விடுகின்றனர்.

வாக்களிக்கும் உரிமையைப் பெறுவதற்கு ஒருவர் தன்னை வாக்காளராகப் பதிவு செய்தல் வேண்டும். வாக்காளர் பதிவினை ஒவ்வொருவரும் ஒவ்வொரு வருடமும் தாமே முன்னின்று பதிவு செய்வதற்குரிய நடவடிக்கை எடுப்பதுடன் தமது பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். தமது பெயர் விவரங்களைக் கிராம அலுவலர் பதிந்து கொள்வார் என்றோ முன்பு எனது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டது என்றோ இருக்குமிடத்து வாக்களிக்கும் உரிமையை இழந்து விடுவீர்கள்.

ஆஸ்திரேலியாவில் தகுதி பெற்ற ஒவ்வொருவரும் கட்டாயமாக வாக்காளராகப் பதிதல் வேண்டும் . காட்டாயமாக வாக்களித்தல் வேண்டும். இல்லாவிடின் அவர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்படும்.

இதைவிட, 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போது முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இரு வாக்காளர்கள் வாக்காளர் அட்டைகளுடன் தமது வாக்கைப் பிரயோகிப்பதற்காக வவுனியா வந்தார்கள். ஓமந்தையில் இலங்கை இராணுவம் அவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டது. அவர்கள் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தார்கள். உயர் நீதிமன்றம் அது ஒரு அடிப்படை உரிமை மீறலாகக் கருதி 7 லட்சம் ரூபா வீதம் இருவருக்கும் வழங்குமாறு தெரிவித்தது.இது வாக்குரிமையின் முக்கியத்துவதையே காட்டுகின்றது-என்றார்.

(த-15)

# முருகன், சாந்தன், பேறிவாளன் சார்பில் 8,000 கருணை மனுக்கள் இந்திய அரசுக்கு!

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் சார்பிலும் 8,000 இற்கும் அதிகமான கருணை மனுக்கள் இந்திய மத்திய அரசுக்கும், இந்திய குடியரசுத் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என மத்திய உள்துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள 801 அரசியல் கைதிகளின் சார்பிலும், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள மனிதஉரிமை அமைப்புகள், தமிழர் அமைப்புகள், அனைத்துலக மன்னிப்புச் சபை உறுப்பினர்கள் சார்பிலும் ஏராளமான கருணை மனுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், நன்கு அறியப்பட்ட பிரமுகர்களான முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஸ்ணய்யர், சமூக சேவையாளர் பாபா அம்தே, மும்பை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஹொஸ்பெற் சுரேஸ், உச்ச நீதிமன்ற சட்டவாளர் இந்திரா ஜெய்சிங், அகாலி தள தலைவர் சிம்ரஞ்ஜித் சிங் மான், கட்டடக்கலைஞர் லோறி பாக்கர், அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பஹுதீன், கேலிச் சித்திர வரைஞர் அபு ஆபிரகாம் உள்ளிட்ட பலரும் இந்தக் கருணை மனுக்களை அனுப்பியுள்ளனர்.

தகவல் உரிமைச்சட்டத்தின் கீழ் சட்டவாளர் மயில்சாமி உள்துறை அமைச்சிடம் விளக்கம் கோரியதன் அடிப்படையிலே இந்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (த-சி)

# உலகின் சனத்தொகை 7 பில்லியன் இது இலங்கைக்கு பெரும் சவால்

எதிர்வரும் ஒக்ரோபர் 31ம் நாளுடன் உலக சனத்தொகை 7 பில்லியனை எட்டுவதாகவும், சனத்தொகை அதிகரிப்பினால் இலங்கையும் பல சவால்களை சந்திக்கும் என்றும் ஐ.நா சனத்தொகை நிதியம் எச்சரித்துள்ளது.

சனத்தொகை அதிகரிப்பினால் இலங்கை சமூக, பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களை சந்திக்க நேரிடும் என்றும் ஐ.நா சனத்தொகை நிதியம் கூறியுள்ளது.

வேலையின்மை அதிகரிப்பதுடன், சுகாதார மற்றும் கல்வி வாய்ப்புகளில் பிரச்சினைகளையும் இலங்கை சந்திக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உலகில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வரும் நாடாக இலங்கை மாறி வருவதாகவும், ஐ.நா சனத்தொகை நிதியம் கூறியுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் இலங்கையின் சனத்தொகையில் 10 வீதமாக இருப்பதாகவும், இந்த எண்ணிக்கை 2025இல் 20 வீதமாக உயரும் என்றும் ஐ.நா சனத்தொகை நிதியம் எதிர்வு கூறியுள்ளது. (த-10)

# புத்திக பத்திரன மற்றும் ஷிராலை கட்சியிலிருந்து நீக்கியது ஐ.தே.க.

கொழும்பு, ஒக். 14

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன, மேல் மாகாண உறுப்பினர் ஷிரால் லக்திலக்க ஆகியோர் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் கட்சியின் கொள்கைக்கு மாறாக கட்சியின் தீர்மானங்களை மதிக்காது பகிரங்கமாகக் கருத்து வெளியிட்ட குற்றத்துக்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கட்சியின் பெரும்பான்மைத் தீர்மானத்துக்கு ஏற்பவே செயற்பட வேண்டும் எனவும், அதற்கு அப்பால் சென்று செயற்பட முடியாது எனவும் ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதாக வாய்மூலமோ அல்லது எழுத்து மூலமோ எனக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை. அப்படி அறிவிக்கப்பட்டால், அதற்குப் பதிலாக என்ன நடவடிக்கை எடுப்பேன் என்பதை பின்னர் அறிவிப்பேன்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட எம்.பி. புத்திக பத்திரன கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து புத்திக பத்திரன எம்.பியும் மேல் மாகாண சபை உறுப்பினர் ஷிரால் லக்திலக்கவும் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர் என நேற்று அக்கட்சியால் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக வினவியபோதே புத்திக பத்திரன எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டையும் அவர் நிராகரித்தார். (த-சி)

# தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் முழுநாள் விவாதம்

கொழும்பு, ஒக்.14

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் முழுநாள் விவாதத்தினை நடத்தவுள்ளதாகத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தற்போது பல்வேறு நெருக்கடிகளுக்குள் வாழ்கின்றனர். அவ்வாறான நிலையில் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முழுநேர விவாதத்துக்கான பிரேரணையை கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் முன்வைக்கவுள்ளார்.

அதன்போது தமிழர்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்படும் என்பதுடன் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படும் எனவும் வடக்கில் இடம்பெற்று வரும் காணிப்பதிவு தொடர்பில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு நீதிமன்றத்தினையும் நாடவுள்ளதாகவும் செல்வம் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

(த-10)

# ராஜ் ராஜரட்ணத்துக்கு 11 ஆண்டு சிறை

கொழும்பு, ஒக்.14

அமெரிக்க பங்குச் சந்தையில் உட்சந்தை மோசடியில் ஈடுபட்டதான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இலங்கையரான ராஜ் ராஜரட்ணத்துக்கு 11 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து அமெரிக்க மாவட்ட நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

கெலோன் நிதி நிறுவனத்தின் ஸ்தாபகரான ராஜ் ராஜரட்ணம் உள்ளகத் தகவல்களைப் பயன்படுத்தி 72 மில்லியன் அமெரிக்க டொலர்களை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்க வரலாற்றில் இடம் பெற்ற மிகப் பெரிய உட்சந்தை மோசடி இதுவெனத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பு அமெரிக்க மாவட்ட நீதிதவான் ரிச்சட் ஹொல்வெலினால் நேற்று வழங்கப்பட்டது. இந்நிலையில் அவருக்கு 11 வருட காலச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இருபத்து நான்கரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டுமென அரச தரப்பு சட்டத்தரணிகள் கோரியிருந்த நிலையில் ராஜ் ராஜரட்ணத்தின் நோய்களைக் காரணம் காட்டி தண்டனையை குறைக்குமாறு அவரது சட்டத்தரணிகள் கோரியூள்ளனர். இதனையடுத்து அவருக்கான தண்டனை குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-10)

# மானிப்பாய் மேற்கு விவசாயிகளின் உரமானியம் திடீரென இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 14

மானிப்பாய் மேற்கு விவசாயிகளுக்கான உரமானியம் வழங்கும் திட்டத்திதைச் சண்டிலிப்பாய் பெரும்பாக அலுவலர் திருமதி பாமா மகேந்திரன் இடைநிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 7 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ளும் 231 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம. பற்றிக் டிறஞ்சனின் கவனத்துக்கு மானிப்பாய் மேற்கு விவசாயிகள்சம்மேளணம் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய விவசாய சம்மேளனங்களின் விவசாயிகள் உரமானியத்தைப் பெற்று விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் போது மானிப்பாய் மேற்கு விவசாயிகளுக்கு மட்டும் அது நிறுத்தப்பட்டுள்ளமை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக கமநல சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இந்தவிடயம் தொடர்பாக யாராலும் தமக்கு முறைப்பாடு செய்யப்படவில்லை என்றும், உரமானியம் வழங்க தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்பில் ஏதா வது ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டால் அதனை தற்காலிகமாக இடைநிறுத்தி மீளாய்வு செய்த பின்னரே வழங்கப்படுவது வழக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-15-302)

# இணையத்தை பயன்படுத்துவோர் அதிகரிப்பு

இலங்கையில் இணையதளம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை இந்த வருட இறுதிக்குள் ஒரு மில்லியனாக அதிகரிக்கும் எனத் தொலைத் தொடர்புகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கூறியுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் இணையத்தளம் பயன்படுத்துவோரின் சதவீதம் நூறு வீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளது.

# மயானத்தைத் துப்பரவு செய்த 8பேர் முல்லைத்தீவில் படையினரால் கைது

முல்லைத்தீவு, ஒலுமடுப் பகுதியில் உரியவர்களிடம் அனுமதி பெற்று பொது மயானத்தை துப்பரவு செய்த பொது மக்கள் எட்டுப் பேரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து கனகராயன்குளம் படை முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒலுமடு பொதுமயானம் பற்றைக்காடாகக் காணப்பட்டதால்,இதனை துப்புரவு செய்வதற்கான அனுமதியினை கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அலுவலர், அந்தப்பகுதிக்கான பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருடன் பெற்ற பின்னரே இவர்கள் நேற்றைய தினம் அங்கு சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது கனகராயன் குளத்தில் இருந்து வந்த விசேட அதிரடிப்படையினர் இவர்களைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

துப்புரவுசெய்யும் சம்பவம் பற்றி அதிரடிப்படையினருக்கு பொலிஸார் தெரிவித்த போதும் அதனை மீறி அவர்கள் கைது செய்து கொண்டு சென்றதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-10-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WANTED IMMEDIATELY

❖ Medical Officer / MBBS / RMO (Full Time) Apply To,
Medical Director,
Central Nursing Home (Pvt) Ltd.,
350, Palaly road,
Jaffna.
Tel.: 021-222 2263

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இணுவை மண் பெற்றெடுத்த முத்து
**யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலய**
**அதிபர் உயர்திரு. சு.சண்முககுமார்**
(B.A, Dip. in Ed. M.Ed, SLPS-I)
அவர்கள் அலரி மாளிகையில்
"குரு பிரதீபா பிரபா" கௌரவ விருதைப்
பெற்றமையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மேலும் பல பட்டங்களைப் பெற வேண்டுமென
இணுவில் கந்தப்பெருமானையும், சாந்தியடி வைரவப்
பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

மனதார வாழ்த்துவோர்:
*செ.சோதிப்பெருமாள் (J.P, இளைப்பாறிய அதிபர்),*
*சோ.ஸ்ரீஸ்கந்தராசா குடும்பம் (லண்டன்),*
*க.சதானந்தன் குடும்பம்,*
*இ.தபானந்தன் குடும்பம்.*

*"சரஸ்வதி மகால்", இணுவில்.*

## விற்பனையாளர் பெண்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் புடைவை நிறுவனத்துக்கு வியாபாரம் பழகிய, பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை. (மாநகரசபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது).

**தொ.பே.: 0772850753**

## மணமகள் தேவை

கனடாவில் வசித்துவரும் யாழ் இந்து கௌரவ குடும்பம் வயது-30, நட்சத்திரம் அச்சுவினி, பாவம் 9, செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கு அதே நாட்டைச் சேர்ந்த அல்லது ஐரோப்பிய நாடுகளில் P.R பெற்ற மணமகள் தேவை. T.P: 0775758836

## தவறிவிட்டது

அ.யோ.செல்வரத்தினம் என்பவரின் மோட்டார்சைக்கிள் மற்றும் கார் என்பவற்றுக்கான காப்புறுதிப் பத்திரங்கள், அடையாள அட்டைகள் என்பன இல.18, கச்சேரி-நல்லூர் வீதியிலுள்ள செல்வா தொலைத் தொடர்பு நிலையத்துக்கும் எக்காளத்தொனிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 0212222429

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

பதிவு இலக்கமும் திகதியும் ஜே/1639-12-05-1976

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் அனைத்துக் கிளைகளுக்குமான கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இது தொடர்பாக வாக்களிக்கத் தகுதி பெற்ற உறுப்பினர் பட்டியல்கள் 15.10.2011 ஆம் திகதியிலிருந்து 22.10.2011 ஆம் திகதி வரையுள்ள 08 நாள்களுக்கு எமது கிளை நிலையங்களிலும் கிளை நிலையங்கள் இயங்காத இடங்களில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உப அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாக்காளர் பட்டியல் தொடர்பாக மேன்முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் உறுப்பினர்கள் எழுத்துமூலமான பதிலை 31.10.2011 ஆம் திகதிக்குப் பிந்தாது **'செயலாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்'** என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி முழுத்தகைமை பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கவோ, வாக்களிக்கவோ உரிமை பெற்றவர்களாவர். (முழுத்தகைமை பெற்ற உறுப்பினர் என்பது உறுப்பினர்களாகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்தலாகும். ஒரு முழுப்பங்கு ரூபா 100/= ஐ செலுத்தி முடித்தவருமான ஒரு உறுப்பினரைக் குறிக்கும்.)

14.10.2011 **செயலாளர்.**

# வாடிக்கையாளர்களுக்கு விரிவான சேவையை வழங்கும் நோக்குடன்...

இலங்கை வங்கி

# பூநகரி

விரிவாக்கற் காரியாலயம்
(வட மாகாணம்)

## வாடியடி சந்தி, பூநகரி

என்ற முகவரியில் 2011 ஒக்டோபர் மாதம் 14ம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை வங்கி
BOC
நேசத்தின் வங்கியாளர்



உங்கள் வீட்டுத் திருமணத்தை
**சரவணாவின்**
பட்டுச் சேலைகளால் அலங்கரியுங்கள்

வாரத்தில் 7 நாள்களும் எமது வியாபார நிறுவனம் திறந்திருக்கும்.

# சரவணா ரெக்ஸ்

770, 772, கே.கே.எஸ்.வீதி,
(துட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
*TP: 021 222 0421, Fax: 222 0421*

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம்.
*TP* :021 222 1723.

## தேவை

**எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**சாரதி (Driver):** A தர சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம். மற்றும் இலங்கையின் எப்பாகத்துக்கும் சென்று வரக்கூடிய வகையில் வீதிமார்க்கங்கள் தெரிந்திருத்தல் அவசியம்

**டீசல் மெக்கானிக் (Diesel Mechanic):** அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் தகைமைச் சான்றிதழ் மற்றும் டீசல் வாகனங்கள் திருத்துதல், பராமரித்தலில் குறைந்தது ஐந்துவருட அனுபவம் அவசியம்

**வாகன மின்பொருத்துநர் (Auto Electrician):** வாகனங்களின் மின்னிணைப்பு மற்றும் மின் உதிரிப்பாகங்கள் திருத்தவேலைகளில் குறைந்தது ஐந்து வருட அனுபவம் அவசியம்

**மின்னியல் தொழில்நுட்பவியலாளர் (Electrical Technician):** மின்பிறப்பாக்கி , Auto மற்றும் Normal panel board திருத்தவேலைகளில் திறமை வாய்ந்தவராக இருத்தல் அவசியம்

தகுதியுள்ளவர்கள் மட்டும் தமது விண்ணப்பம் மற்றும் சான்றிதழ்களுடன் கீழ்வரும் முகவரியிலுள்ள எமது காரியாலயத்துக்கு 19.10.2011 ஆம் திகதிக்கு முன்பாக நேரில் சமுகமளிக்கவும்.

**யூரோவில்,**
**கரந்தன் வீதி,ஊரெழு,**
**தொலைபேசி:0217429695.**

**O/L, A/L, பல்கலைக்கழக (Phy. Sc.), தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களே நீங்களும், குறுகிய காலத்தில் British Qualified Engineer/Quantity Surveyor ஆகலாம்**

# City & Guilds UK
## JUNE 2012 CLASSES

- Telecommunication Systems Engineering
- Electrical & Electronic Engineering
- Civil Engineering / Quantity Surveying

**With Theory, Practical Assignments & Projects**

Advanced Diploma தராதரத்தோடு U.K. பல்கலைக்கழகங்களில் 2nd year or Final Year அனுமதிகள் பெறமுடியும்

இலவச ஆலோசனை
Prof. K. Chandirabose Member of IET(U.K.)
16/10/2011 (மாலை 3 மணி முதல் 5 மணி வரை)
17/10/2011 (காலை 9 மணி முதல் மாலை 2 மணி வரை)
உங்கள் வரவை முன்கூட்டியே உறுதிப்படுத்திக்கொள்ளவும்

விபரங்களுக்கு:
**APSS International**
242 Dr. Subramanium Road,
Chunnakam.
T.P: 021-2241731
Hotline: 077-3867695, 077-2306642

ஓம் ஸ்ரீ சாய்ராம்

## சத்ய சாய் பாடசாலை-மானிப்பாய்

**தரம் - 6 அனுமதி (தமிழ் மொழி மூலம்) - 2012**

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களைப் பாடசாலை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**விண்ணப்ப முடிவுத் திகதி: 28.10.2011**

*சோதிவேம்படி வீதி, மானிப்பாய்.* *அதிபர்.*

## கண்ணீர் அஞ்சலி



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி திட்ட யாழ். மாவட்ட திட்ட முகாமைத்துவப் பிரிவில் சமூக வலுவூட்டாளராக பணியாற்றும் வை.ரவிசங்கர் அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி.**
**வைரமுத்து இலட்சுமி**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பிரதி திட்டப் பணிப்பாளர்,*
*உத்தியோகத்தர்கள்.*
*பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாதுகாப்புக்கே அதீத நிதி என்ற நிலை தொடர்ந்தால்...

**2012** ஆம் நிதி ஆண்டுக்கான, அரசின் உத்தேச வரவு - செலவுத் திட்ட யோசனை, சட்ட நகல் இம்மாதம் பதினெட்டாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் நிதி ஆண்டில் அரசின் மொத்த வருமானம் 1,11,500 கோடி ரூபாவாகவும் மொத்தச் செலவினம் 2,22,000 கோடி ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

அந்த நிதி ஒதுக்கீட்டில், ஆகக் கூடிய தொகை , 22,994 கோடி ரூபா பாதுகாப்பு அமைச்சுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஒன்றும் புதிய சங்கதி அல்ல. உள்நாட்டுப் போர் தொடங்கிய சுமார் முப்பது வருடங்களாகப் பாதுகாப்புச் செலவினம் ஆண்டு தோறும் உயர்ந்துகொண்டே சென்றது. போர் முடிவுற்று இரண்டு வருடங்கள் கடந்த பின்னரும் அந்தத் ''தரித்திரம்'' இன்னும் விட்டுப் போகவில்லை என்பதற்கான முன்னுரையே மீண்டும் எழுதப்படுகிறது.

மக்களுக்குரிய உணவு, விவசாயம், கைத்தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி, கல்வி சம்பந்தமான அமைச்சுகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை விடப் பலப்பல மடங்கு அதிகமான தொகை, பாதுகாப்புத் துறைகளுக்கு ஒதுக்கப்படும் இந்நாட்டின் செலவினமே, வரலாற்றில் ஆண்டுக்கு ஆண்டு ''சம்பியன்'' பட்டம் பெற்று வருகிறது என்று குறிப்பிடின் அது மிகையன்று.

பாதுகாப்பு அமைச்சுக்கே தங்குதடை இல்லாத நிதி ஒதுக்கீடு, அதற்குப் பின்னரே மற்றவை எல்லாம் என்ற சூத்திரத்தை அழியாச் சொத்தாகக் கொண்ட வளர்ச்சி அடையும் நாடுகளில் இலங்கை முதலிடம் பிடித்திருக்கிறது என்று கருதுமளவுக்கு வருடாந்த வரவு - செலவுத் திட்டங்கள் அமைகின்றன.

கடந்து செல்லும் வருடத்துக்கான (2011 ஆம் ஆண்டுக்கான) வரவு - செலவுத் திட்டத்தில் மொத்தச் செலவினம் ஒரு லட்சத்து 8096 கோடி ரூபாவாக இருக்கும் என்றும் ஆனால் அரசுக்குக் கிடைக்கும் வருமானம் 9,000 கோடி ரூபாவாக மட்டுமே இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன் விளைவாக சுமார் ஒரு லட்சம் கோடி ரூபா கடன் வாங்க வேண்டிய பரிதாப நிலை தோன்றியுள்ளது.

இம்முறை துண்டு விழும் தொகை உத்தேசமாக 1,10,500 கோடி ரூபா என்று கொள்ளலாம். அதாவது நாட்டின் உத்தேச வருமானமும் துண்டு விழும் தொகையும் அனேகமாக ஒரே அளவாகவே இருக்கப் போகின்றன!

2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 215 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு, வெளிநாடுகளிலிருந்து ஆயுதக் கொள்வனவு செய்வதற்குச் செலவான பணத்தை மீளச் செலுத்துவதற்காகவே என்று காரணம் கூறப்பட்டது.

அவ்வாறு தெரிவித்திருந்த போதிலும், இவ்வருடத்தில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பிரமாண்டமான இராணுவத் தளங்கள், கடற்படைத் தளங்கள் அமைக்கப்பட்டதிலேயே நிதி ஒதுக்கீட்டின் சுமார் அரைப் பங்கு செலவு செய்யப்பட்டிருக்கும் என்று குத்துமதிப்பாகக் கருதுவது தவறன்று.

இவ்வகைச் செலவினங்களால் இந்த ஆண்டில் சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாவை வெளிநாடுகளில் இருந்து கடனாகப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டிருக்கும் என்பது நிச்சயம். ஆனால் அது பற்றிய விவரங்கள் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. அது நிற்க-

அடுத்த வருடத்துக்கான (2012 இன்) பாதுகாப்புச் செலவினம் மலை உச்சிக்கும் மேலே உயர்த்தப்பட்டிருப்பது ஏன் என்பதற்கான மூலகாரணத்தை வரவு - செலவுத் திட்ட விவாதத்திலாவது அரசு வெளிப்படையாக எடுத்துச்சொல்லுமா என்பது சந்தேகத்திலும் சந்தேகமே!

நாட்டின் பாதுகாப்புச் சம்பந்தமான மூலோபாயங்கள், திட்டங்கள், செயற்பாடுகளின் இரகசியம் பேணப்பட வேண்டும் என்ற அடைப்புக்குள், வேலிக்குள் அமைச்சின் செலவினங்கள் எதற்காக, எவ்வளவு என்ற தகவல்களும் மூடி மறைக்கப்பட்டு விடும்!

மொத்தத்தில் பாதுகாப்புத்துறைத் திட்டங்களும் அவற்றுக்கான செலவினங்களும் நாட்டின் உத்தேச வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்காக இருக்கப் போகிறது. இது நாட்டு மக்களின் முதுகில் குத்தும் செயலன்றி வேறல்ல.

நாட்டின் தேசிய வருமானத்தை உயர்த்துவதற்கான வழி வகைகளைக் கண்டறிந்து, அவற்றினூடு கிடைக்கக் கூடிய பலன்களை, மக்கள் அனுபவிக்க வகைசெய்யும் எண்ணம் எதுவும் இன்றி, பாதுகாப்புத்துறைச் செலவுகளுக்குக் ''கடன் வாங்கிக் கல்யாணம்' நடத்தும் வேண்டாத போக்கு, இந்த நாட்டு மக்களையும், அவர்களின் அடிப்படை வாழ்வாதார நிலைமைகளையும் படுகுழிக்குள் இட்டுச் செல்லும். மக்கள் நலன் நாடும் சோஸலிச ஆட்சி என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு, பாதுகாப்புக்கு அதீதமாகச் செலவிடும் போக்கு வேறு எங்கும் இல்லை எனலாம்.

அரசுக்கு எதிராக, ஆயுதப் படைகளுக்கு எதிராகப் பெரும் போர் நடைபெற்ற வேளையில், நாட்டை அரசின் வசம் தக்க வைத்துக் கொள்வதற்காக, பாதுகாப்புத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கினோம் என்று காரணம் காட்டிய அரச பிரதானிகள், இப்போது எந்த வகையான செயற்கைக் காரணத்தைத் தூக்கிப் பிடிக்கப் போகிறார்கள்?

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைக்கும் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் மல்லுக் கட்டுவதற்காக மக்களின் இத்தனை கோடி ரூபா பாதுகாப்புச் செலவு என்ற பெயரில் முடக்கப்படுகிறதோ என்ற சந்தேகம் மக்களிடம் தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லையே!

இதுவரை செய்கை பண்ணப்படாத

## 21 ஆயிரத்து 394 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.14

கடந்த காலபோகங்களில் செய்கை பண்ணப்படாத காணிகளில் 21 ஆயிரத்து 394 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ள வடமாகாண விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இதற்கென 64 ஆயிரத்து 120 புசல் நெல் உணவு விவசாய தாபனத்தின் அனுசரணையுடன் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது என்று மாகாண விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இக்காலங்களில் செய்கை பண்ணப்படாத 7ஆயித்து 596 ஏக்கர் கைவிடப்பட்ட மேட்டுக் காணிகளில் மறுவயல் பயிர்ச்செய்கைக்குத் தேவையான விதைகளையும் உணவு விவசாய தாபனத்தின் உதவியுடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## வேலை வாய்ப்பு பதிவுகளால் பட்டதாரிகள் கவலை தெரிவிப்பு

காரைதீவு, ஒக்.14

நாட்டில் வேலையற்ற பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்கவென்று பல்வேறுபட்டோரால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகள் உள்நோக்குடன் நடைபெறுவதாகப் பட்டதாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அண்மைக் காலமாக ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேலையற்ற பட்டதாரிகளின் பட்டியலைக் கோரினர். ஒருவருக்கு 75 பட்டதாரிகள் வீதம் பதிய முடியும் எனவும் கூறப்பட்டது.

இதே வேளை, அமைச்சர்களும் அவரவர் இணைப்பாளர்களூடாக இந்த பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தற்போது அம்பாறைக் கச்சேரியில் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட்டதாரிகள் ஏதோ ஒரு வகையில் தொழிலைப் பெறவேண்டும் என்ற நோக் கில் எங்கெல்லாம் பதிவுகள் நடக்கின்றனவோ அங்கெல்லாம்படையெடுக்கின்றனர். எது உண்மை? எது போலி? என்பது தெரியாமல் உள்ளனர். ஒரு சிலர் பதிவை மேற்கொள்ளும் போது உள்வாரி பட்டதாரிகளை மட்டும் பதிகின்றனர் என்று வெளிவாரிப் பட்டதாரிகள் ஆதங்கப்படுகின்றனர்.

இறுதியாக கிழக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்துக்கு ஜனாதிபதி செயலகத்திடமிருந்து பட்டியல் கேட்டு வந்திருப்பதாக தலைவர் கே.ஜெயராஜ் கூறுகிறார்.

இவ்வாறு பதிவுகள் இடம்பெறுவதால் பட்டதாரிகள் செய்வதறியாது கவலையடைந்துள்ளனர். (ம-25)

## இலங்கை ஆசிரியர் சங்கக் கிளைகளை உயிர்ப்புடன் இயங்கவைக்க அறிவுறுத்து

காரைதீவு, ஒக்.14

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கிளைகளை மேலும் வலுப்படுத்தி உயிர்ப்புடன் இயங்க வைக்குமாறு கிளைச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

நவம்பர் 04 ஆம் திகதி மகா சபைக் கூட்டமும், செயற்குழுக் கூட்டமும் மாநாடும் நடைபெறவுள்ளன. இதனை முன்னிட்டு கிளைகள் சுறுசுறுப்பாக இயங்குவதோடு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளுவதை உறுதிப்படுத்து மாறும் கேட்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் புதிய தலைவர், புதிய பொதுச்செயலாளர் ஆகியோர் மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். மாதச் சந்தா கழிக்கப்படும் அங்கத்தவர்கள், புதிய அங்கத்தவர்கள் விவரங்களை உடனடியாக கோரியுள்ள தமிழ்ச் சங்கம், ஆசிரியர் நலன் கருதி சில வேலைத் திட்டங்களை முன் னெடுக்கவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மகா சபை மாநாட்டுக்கு கிளையிலிருந்து தலா 10 உறுப்பினர்கள் கலந்துகொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 வருடங்களின் பின்பு நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் ஆசிரிய சமூகத்தின் நன்மை கருதி பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவிருப்பதாகச் செயலாளர் தெரிவித்தார். (ம-25)

## யாழ்.மாவட்ட முதியோர் கொழும்பில் கௌரவிப்பு

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 முதியோர்கள் கொழும்பில் இடம்பெற்ற முதியோர் தின விழாவில் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

பத்திரமுல்ல, ஜனகலா கேந்திரயவில் நடைபெறவுள்ள இந்த விழாவில் நாட்டி லுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலிருந்தும் ஒரு முதியோர் வீதம் கலந்துகொண்டனர்.

இவர்களுக்கான போக்குவரத்துச் செலவாக இரண்டாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணியகம் 'ஹெல்ப் ஏஜ் சிறிலங்கா' ஆகியன இணைந்து தேசிய முதியோர் விழாவுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தன.

(ம-121)

## கோயில் கட்டடக் கலைகளின் ஊடாக வரலாற்றைப் பேணல்

கோயில் கட்டும் முறை எம்மவரால் தொன்றுதொட்டுக் கையாளப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் கோயிற் கட்டடக் கலை கி.பி.8 ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்ததாகக் குறிப்பிடுவர். எட்டாம் நூற்றாண்டில் பல புதிய கோயில்கள் உருவாகின. ஏற்கனவே இருந்த கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுப் புத்துருவம் பெற்றன. கோயிற் கட்டடக் கலையை மூன்று பிரிவாக வகைப்படுத்திக் காட்டுவர். அவை நாகரம், வேசரம், திராவிடம் என்பனவாம். நாகரம் என்னும் பிரிவைச் சார்ந்த கோயில்கள் வட இந்தியாவில் உள்ளன. இவை அடியில் இருந்து உச்சிவரை நாற்சதுரமாக இருக்கும். வேசவரம் என்னும் இனத்தைச் சார்ந்தவை பிரதானமாகப் பௌத்த கோயில்களாக விளங்கின. விமான அமைப்பிலும் கட்டட அமைப்பிலும் வட்ட வடிவமாக அமைபவை. திராவிட அமைப்பிலேயே வைதிக நெறிக்குரிய ஆலயங்கள் தென்னாட்டில் அமைக்கப்பட்டன. ஈழத்தில் உள்ள ஆலயங்களும் திராவிடக் கட்டடக் கலை மரபைச் சார்ந்தவையாகும்.




தமிழகத்தில் ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் மறைந்து விட்டாலும் அவர்கள் பற்றிய வரலாற்றை எழுது வதற்கு கோயிற் கட்டடக் கலையும் ஆதாரமாக விளங்குகின்றது.

எமது பிரதேசங்களில் தற்போது புதிய கோயில்கள் கட்டப்படுகின்றன. பல கோயில்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டுப் புதுவடிவம் எடுத்துவருகின்றன. இனிவரும் காலத்தில் எமது வரலாறு எப்படியாகுமோ என்ற ஏக்கம் எம் மத்தியில் உள்ள இந்தக் கால கட்டத்தில் கோயிற் கட்டடக் கலையில் - கோயில் சார்ந்த வரலாற்றுப் பதிவுகளை, சம்பவங்களை இடம்பெறச் செய்தல் சாலப் பொருத்தமுடையதாக அமையும்.

ச. லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய றோலர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி வருகின்றன

## ரஞ்சன் மாத்தாயிடம் யாழ்.அரச அதிபர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.14

ஒவ்வொரு மாதமும் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான இந்திய மீனவர்களின் ரோலர் படகுகள் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து தொழில் செய்து வருகின்றன.

இதனால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது.

இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் ரஞ்சன் மாத்தாயிடம் இது தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய வெளிவிவகாரத் துறை செயலர் ரஞ்சன் மாத்தாய் கடந்த 9ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்.

அன்று வடமகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த விடயத்தை அரச அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'எமது மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் புள்ளி விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றும் அரச அதிபரால் இதன்போது கையளிக்கப்பட்டது.

அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அரச அதிபர் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு:

இரண்டு றோலர் படகுகள் ஒன்றாக இணைக்கப்பட்டு பெரிய வலைகளின் உதவியுடன் வடமராட்சிக் கடலில் இந்திய மீனவர்கள் தொழில் செய்து வருகின்றனர்.

இந்திய மீனவர்களின் றோலர் படகுகளால் தினமும் எமது பகுதி மீனவர்கள் பாதிக்கப்படுகின்றன.

இந்திய மீனவர்கள் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களுடன் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறிக் கடற்றொழில் செய்கின்றனர்.

இதன் காரணமாக எமது பகுதி மீனவர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். படகுகள் பாதிக்கப்படுகின்றன. மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மீன்பிடி வலைகள் பாதிக்கப்படுகின்றன. மீனவர்கள் மரணமடைகின்றனர். கடல் வளம் பாதிக்கப்படுகின்றது. உள்ளூர் உற்பத்தி குறைவடைந்துள்ளது.

மீன் உற்பத்திகளின் விலை அதிகரித்துள்ளது.

அத்துடன் எமது பகுதியில் மீன்பிடி முறையியல் முன்னேற்றம் காணப்படவில்லை. மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகள் இங்கு இல்லை.

கடற்றொழில் துறை முகங்கள், வெளிச்ச வீடுகள் புனரமைக்கப்பட வேண்டும்.

சுனாமி முன்னெச்சரிக்கை முறை இங்கு இல்லை.

மீனவர்களுக்கான கடனுதவிகள் தேவை. (ம-14)

## தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஒக்.14

இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை மீட்கப்பட்டது.

ஆனைக்கோட்டை, காக்கை தீவைச் சேர்ந்த குணலிங்கம் குணபாலன் (வயது-37) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என தெரிவிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் நேற்றுமுன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (ஒ-4)

கௌரவம்...



தொடரட்டும்: நல்லூர் பிரதேச செயலக சிறுவர், முதியோர்தின நிகழ்வு கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் முதியோர் ஒருவருக்குப் பரிசில் வழங்குகிறார். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் சிறுவர் விளையாட்டுக்கழகப் போட்டிகளில் முதலிடம்பெற்ற விளையாட்டுக்கழகத்துக்குப் பரிசில்களை வழங்குகிறார். (ம-7)

## கலாசார அமைச்சின் நிதியில் உடுப்பிட்டியில் கலாசார நிலையம்

யாழ்ப்பாணம்,ஒக்.14

கலை கலாசார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வடமராட்சி, உடுப்பிட்டிப்பகுதியில் கலாசார நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்தப் புதிய நிர்மாணிப்பு தொடர்பாகத் தெரிய வந்துள்ளதாவது:

கலாசார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் உடுப்பிட்டி நலன்புரி சங்கத்தினரால் வழங்கப்பட்ட காணியில் 80 லட்சம் ரூபா செலவில் கலாசார நிலையக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

உடுப்பிட்டிப் பிரதேசத்தில் நடன சங்கீத வகுப்புகளை நடத்த ஏதுவாக இந்தக்கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தக் கட்டடத்துக்கு அருகில் சமுர்த்தி வங்கிக் கட்டடம் ஒன்றும் உடுப்பிட்டிப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-319)

## சிறு குற்றச் செய்திகள்

தென்மராட்சி, ஒக்.14

மதுபோதையில் ஓட்டோ செலுத்திய நீர்வேலி கரந்தன் வாசிக்கு சாவகச்சேரி நீதி மன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கடந்த புதன்கிழமை விசாரணை செய்த நீதிவான் மா.கணேசராஜா ஓட்டோ சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒருமாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்ததரவிட்டதுடன் இந்த நபரின் சாரதிய அனுமதிப் பத்திரத்தை ஆறுமாதங்கள் நீதிமனறில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார். (ம-207)

* **

யாழ்ப்பாணம், ஒக்.14

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த திருநெல்வேலி நபர் யாழ்.நீதிமன்றில் ஐயாயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு சாராயம் விற்பனை செய்தபோதே பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்னிலைப்படுத்தினர்.

சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து நீதிவான் ஐயாயிரம் ரூபா அபராதம் செலுத்தும் படி உத்தரவிட்டார். (ம-4)

* **

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த உழவு இயந்திர சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் வரணி, இயற்றாலையைச் சேரந்த உழவு இயந்திர சாரதிக்கு எதிராக அனுமதியின்றி மணல் ஏற்றிவந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்கின் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவான் மா.கணேசராஜா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஆறுமாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன் வாகனத்தை 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 5 லட்சம் ரூபா பிணை முறியிலும் செல்ல உத்தரவிட்டார். (ம-207)

## தம்பாட்டி கோயில் குளத்தை புனரமைக்குமாறு வேண்டுகோள்



யாழ்ப்பாணம், ஒக்.14

ஊர்காவற்றுறை தம்பாட்டி கோயில் குளம் புனரமைக்கப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்தக் குளத்தைப் புனரமைத்து மழை நீரைத் தேக்குவதன் மூலம் நிலத்தடி நீர்மட்டத்தை தேக்க வைத்துக் கொள்ள முடியும்.

அவ்வாறு செய்வதன் மூலம் கிணறுகளின் நீர் மட்டம் வற்றாது காணப்படும்.

தற்போது குளம் புனரமைக்கப்படாதிருப்பதன் காரணமாக கிணற்று நீர் மட்டம் வற்றியுள்ளது.

குடிதண்ணீர்த் தேவைக்காக மூன்று அல்லது நான்கு கிலோ மீற்றருக்கு அப்பால் செல்ல வேண்டி உள்ளது.

இந்த நிலைமை 315 குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். நீரின்றி கால் நடைகளும் இறப்பதாக மக்கள் கூறுகின்றனர்.20 வருடங்களாக இந்தக் குளம் திருத்தப்படாமல் உள்ள்து எனவும் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்துக் குளத்தை புனரமைக்க வேண்டும் என வும் மக்கள் கேட்கின்றனர். (ம-14)

## கைதடியில் முதியோருக்கு உதவிப்பொருள்கள்

யாழ்ப்பாணம், ஒக்.14

சர்வதேச முதியோர் வாரத்தில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களுக்கு அரச திணைக்களங்கள் சில உதவிப்பொருள்களை வழங்கியுள்ளன.

இந்த உதவிப்பொருள்கள் முதியோர் வார நிகழ்வுகளில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுத் திணைக்களத்தின் சார்பாக வவுனியா பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், சிறு கைத்தொழில் திணைக்களம், சமூகசேவைகள் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் முதியோர்களுக்கு இந்த உதவிப் பொருள்களை வழங்கியுள்ளன.

சவர்க்காரமும், பால்மா, பிஸ்கட், கால்துடைப்பான், பாதணிகள் போன்றன அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

அதனைவிட வவுனியா பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் உதவிப் [illegible] குறிப்பிடத்தக்கது. (ம-26)

## கால்நடை வளர்ப்போர் சங்கம் 20 லட்சம் ரூபா செலவில் கரணவாயில்

யாழ்ப்பாணம்,ஒக்.14

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் கரணவாயில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

20 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.இதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணி இரவு 10 மணிவரை நீடிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.14

பருத்தித்துறை வீதியின் அகலிப்புப் பணிகளை இரவு 10 மணிவரையும் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் கடந்த புதன் கிழமை தொடக்கம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வீதி அகலிப்புப் பணிகளை துரிதப்படுத்தும் முகமாக இந்த நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மின்சார வெளிச்சத்தில் இந்தப் பணிகள் தொடரப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதன் அடிப்படையில் இரவு 10 மணிவரையான பணிகள் நேற்று முன்தினம் தொடக்கம் இடம்பெற்று வருகின்றன என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை வீதியில் கோப்பாய்ச் சந்திக்கு அப்பால் இந்தப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் இந்தப் புனர்நிர்மாணப் பணிகள் துரிதமாக இடம்பெறுகின்றமை வரவேற்கத்தக்கது என்று பல தரப்பட்டோர் மத்தியில் கூறப்படுகின்றது.

வீதியோர அகலிப்புக்காக வெட்டப்பட்ட பகுதிகள் மண் போட்டு மூடப்பட்டு வருகின்றன. இதேவேளை, வீதி அகலிப்புக்குத் தேவையான கருங்கல் பெருமளவில் எடுத்துவரப்பட்டு குறித்த வீதிக்கு அருகிலுள்ள காணிகளில் கொட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-26)

# காலபோகப் பணிகள் ஆரம்பம் கட்டாக்காலி தொல்லை தீரவில்லை

தென்மராட்சி,ஒக்.14

தென்மராட்சி தெற்குப் பகுதியில் காலபோக நெற்செய்கை ஆரம்பக் கட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் இன்னமும் கால்நடைகள் கட்டுப்படுத்தப்படாதமை குறித்து நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் பெய்த மழையையடுத்து கட்டப்பட்ட வரம்புகள் கட்டாக்காலி மாடுகளால் சேதமாக்கப்பட்டு வருவதாகவும், விதைக்கப்பட்ட நெல்மணிகளைக் கோழிகள் உண்பதாகவும் கவலை தெரிவித்தனர்.

கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுப்படுத்த வேலி அடைக்க கடந்த வருடம் தனங்கிளப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி, நுணாவில், தச்சன்தோப்பு போன்ற நெற்செய்கையாளர்களிடமிருந்து பணம் அறவிடப்பட்டது.

தற்போது சேதமடைந்துள்ள முட்கம்பி வேலிகளைத் திருத்தம் செய்யப் பணம் தருமாறு அந்தப் பகுதி விவசாய சம்மேளனங்களால் கோரப்படுகிறது.

இது எந்த வகையில் நியாயம் என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதேபோன்று, கடந்த வருடம் கட்டாக்காலியாக அலைந்த நூற்றுக்கணக்கான மாடுகள் பிடிக்கப்பட்டு குறியில்லாத மாடுகள் விற்கப்பட்டன.

இந்தப் பணம் விவசாய சம்மேளனத்திடம் உள்ளதாகவும் அதிலிருந்து வேலியை அடைக்குமாறு ஏனைய விவசாய சம்மேளனங்களால் அறிவிக்கப்பட்டது.

இருந்தபோதும் வேலிகள் இன்னமும் அடைக்கப்படாதது குறித்தும் கவலை தெரிவிக்கப் பட்டது. (ம-207)

# 'கபே' அமைப்பு விநியோகிக்கும் படிவங்களை மக்களிடமிருந்து கிராமசேவகர் ஏற்கவேண்டும்

## உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14

'கபே' அமைப்பால் விநியோகிக்கப்படும் வாக்காளர் விண்ணப்பப் படிவங்களை மக்களிடமிருந்து கிராம சேவையாளர்கள் ஏற்க வேண்டும். அவ்வாறு அதனை ஏற்காத பட்சத்தில் மாவட்ட செயலக தேர்தல் திணைக்களத்திடம் சமர்பிக்குமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலக தேர்தல் திணைக்களத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வழமையாக மேன்முறையீட்டுக் காலத்தில் வாக்காளராகப் பதியத் தவறியவர்களும், 2011 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியல் எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி காட்சிப்படுத்தப்படும் போது அதில் நீக்கப்பட்டவர்களும் தனித்தனியான படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஆனால், இந்த முறை விசேடமாக மேற்கூறியவர்களுடன் , இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் தங்கியிருப்போரும், வெளிநாடுகளுக்குச் சென்றோரும் தனித்தனியாக அல்லது குடும்பமாக ஒரே படிவத்தில் இந்த முறை பதிவை மேற்கொள்ளமுடியும்.

இதற்கான பிரத்தியேக படிவங்கள் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக 'கபே' அமைப்பால் அதே விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனைப் பெற்று கிராம சேவையாளர்களிடம் கையளிக்க முடியும்.

இதற்கான முடிவுதிகதி நவம்பர் 30 ஆம் திகதியாகும். இத்துடன் 7 ஆம் திகதி முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரை முறைப்பாட்டுக்கால்ம் போன்று இருக்கும்.- என்றார் . (ம-15)

# அஞ்சல் தினத்தை முன்னிட்டு இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஒக்.14

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு அஞ்சல் சமூகத்தினரின் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். பிரதம தபாலகத்தில் இடம்பெற்றது.

வடபிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஜெபரட்ணம் முதலில் இரத்ததானம் செய்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அவரை தொடர்ந்து அஞ்சல் சமூகத்தினர் முண்டியடித்து இரத்ததானம் வழங்கினர்.

இந்த நிகழ்வில் 50 இற்கும் மேற்பட்ட அஞ்சல் உத்தியோகஸ்தர்கள் இரத்ததானம் வழங்கியதாக தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-26311)

# ஸ்கந்தாவின் புதிய கட்டங்களை ஜனாதிபதி நவம்பரில் திறந்து வைப்பார்

அளவெட்டி,ஒக்.14

இசுறு பாடசாலையின் வேலைத் திட்டத்தின் கீழ் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அமைக்கப்பட்ட இரு புதிய இருமாடிக் கட்டடங்களை நவம்பர் மாத முற்பகுதியில் திறந்து வைப் பதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

விஞ்ஞான, ஆய்வுகூடம், தகவல் தொழில்நுட்ப நிலையம், விவசாய ஆய்வுகூடம், மனையியல் ஆய்வுகூடம், கேட்போர் கூடம், ஆசிரியர் கூடம், அதிபர் அலுவலகம் உட்பட இப்புதிய கட்டடத் தொகுதியில் பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று மேற்படி கல்லூரியின் அதிபர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனைத் திறந்து வைக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-36)

உயிர்காப்பு...



மக்களுக்காக: சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரட்ணம் இரத்ததானம் வழங்கி இரத்ததான நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து அஞ்சல் உத்தியோகத்தர்கள் இரத்ததானம் வழங்கினர். (ம-26)

# யாழ். மாநகர சபைக்கு எப்போது புதிய கட்டடம் அமைக்கப்படும்?

## கேள்வி எழுப்புகிறார் உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஒக்.14

யாழ்.மாநகராட்சி மன்றத்துக்கு எப்போது புதிய கட்டடம் அமைக்கப்படும்? அதற்கான விடிவுகாலம் கிடைக்குமா என்று அங்கலாய்ப்புடன் கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர உறுப்பினர் அருளப்பு கொர்ணலியஸ்.

"புதிய கட்டடம் எப்போது அமைக்கப்படும். அதற்கான கட்டடப் பணிகள் எந்தளவுக்கு உள்ளன என்று மன்றத்தின் அனேகமான கூட்டங்களில் கேள்வி எழுப்பினேன். கட்டடப் பணிகள் யாவும் விரைவில் ஆரம்பமாகும் என்று முதல்வர் பதில் கூறுகிறாரே தவிர ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை."
- என்றார் கொர்ணலியஸ்.



போரால் அழிக்கப்பட்டுத் தரைமட்டம் ஆக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை மீள அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த ஒரு வருட காலத்துக்கு முன்பே அடிக்கல் நடுகை செய்யப் பட்டது.

புதிதாக அமைய இருக்கும் இந்தக் கட்டடத்துக்கான வரைபடமும் வளாகத்தில் விளம்பரப் படுத்தப்பட்டு அந்த வரைபடம் தூசியில் மங்கிக் காணப்படுகின்றது. "தற்போது இந்த வளாகத்தில் பல்வேறு கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இது இப்போது மாநகர மைதானம் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது.

ஆகவே இந்த மாநகராட்சி மன்றத்தின் புதிய கட்டடத்துக்கான பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது'' என்கிறார் மாநகர உறுப்பினர்.

இதுதொடர்பாக மாநகர சபையின் ஆணையாளர் தொடர்பு கொண்டு கேட்டபோது "மாநகர சபைக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் 200 லட்சம் ரூபா ஒதுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் அவை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்படி நிதி கிடைக்காமையால் தான் வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று கருதுகிறேன்'' - என்றார். (உ-15-26)

# கைதடி முதியோர் இல்லத்தில் புனரமைப்புப் பணி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.14

கைதடி அரச முதியோர் இல்லத்தில் புனர்நிர்மாண பணிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என்று இல்ல அத்தியட்சகர் என். இராஜலிங்கம் தெரிவித்தார்.

இல்லக் கூட்டத்தின் ஒரு பகுதியும் மற்றும் மலசலகூடப் பகுதியும் இவ்வாறு புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

சமூக சேவைகள் திணைக்களத்தின் இந்த புனர் நிர்மாணத்துக்கான நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இந்தப் பணிகளை கட்டட திணைக்களம் பொறுப்பேற்று மேற்கொள்ளவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்கள் தமது சொத்து விவரம் நாளைக்குள் அறிவிக்க வேண்டும்

## தேர்தல்கள் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.14

நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சகலரும் நாளை சனிக்கிழமைக்கு முன்னர் தமது சொத்து விவரங்களை தவறாது தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் எவராவது தமது சொத்துக்கள் குறித்த பிரகடனத்தை உரிய காலத்துக்குள் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கத் தவறுவார்களானால் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவது தாமதப்படநேரும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து சொத்துக்கள் தொடர்பான பிரகடனத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் சட்ட விதிகளின் கீழ் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் தமது சொத்துக்கள் குறித்த பிரகடனத்தைச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டிருந்தபோதிலும், நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக அந்த நடவடிக்கை உரிய முறையில் கடைப்பிடிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற சிறுவர், முதியோர், மாற்றுவலுவுள்ளோர் தினவிழாவில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் உட்பட ஏனைய விருந்தினர்கள் முன்பள்ளிச் சிறார்களின் 'பாண்ட்' வாத்தியம் சகிதம் அழைத்து வரப்படுகின்றனர். (ஒ-121)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை வலி.கிழக்கில் மிகத் தீவிரம்

யாழ்ப்பாணம், ஒக.14

வலி.கிழக்கில் டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் விரைவு படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் தேங்கி இருக்கும் கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுகிழமை மேற்படி கழிவுப் பொருள் அகற்றும் பணியில் நூறுக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் மற்றும் கனரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மக்கள் தமது குடியிருப்புப் பகுதிகளில் உள்ள கழிவுப் பொருள்களை பொதிசெய்து வீட்டுவாசலுக்கு முன்னால் வைத்தனர். அவை மீண்டும் உழவு இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டன. அத்துடன் வீதியோரங்கள் மற்றும் பொது இடங்களில் படந்து வளர்ந்திருந்த பற்றைகளும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

மேலும், மக்கள் தமது சுற்றாடலை மிகவும் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் எனவும் இல்லையேல் சுகாதாரப் பகுதியினரின் திடீர் பரிசோதனையின் போது பிடிக்கப்பட்டால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவர் என்றும் வலி.கிழக்கு பிரதேச சபையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர். (வ-26)

# திருமுருகனுக்குப் பாராட்டு

அளவெட்டி, ஒக.14

கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்ற செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனுக்கு இணுவில் அறநெறிப் பாடசாலை சமூகமும், பொதுமக்களும் நடத்தும் பாராட்டு விழா நாளை மறு தினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.30 மணியளவில் இணுவில் அறிவாலயத்தில் யாழ். பல்கலைக் கழக வணிகபீட முகாமைத்துவ பேராசிரியர் க.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக விழா நாயகர் இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக அறிவாலய அரங்குக்கு அழைத்து வரப்படுவார், தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் இடம்பெற்று இணுவில் இளந்தொண்டர் பண்ணிசை மாணவர்களினால் திருமுறை ஓதல் இடம்பெறும்.

இணுவில் அறிவாலயத் தலைவர் சு.சண்முககுமாரின் வரவேற்புரையைத் தொடர்ந்து ஆசியுரைகளை நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் இணுவில் கந்தசுவாமி கோயில் சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்தி குருக்களும் நிகழ்த்துவார்கள்.

வாழ்த்துரையை உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், பேராசிரியர் இ.விக்னேஸ்வரன்(யாழ்.பல்கலைக்கழகம்) வழங்கவுள்ளார்கள். (வ-36)

# தொழிற்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

நவாலி, ஒக்.14

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை காரைநகரிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ள தகவல் தொழில்நுட்பம், கட்டட நிர்மானம் ஆகிய புதிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

இந்தப் பயிற்சியில் இணைய விரும்புவோர் தமது விண்ணப்பங்களை நாளை சனிக்கிழமைக்கு முன்னர் பொறுப்பதிகாரி, இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, தொழிற் பயிற்சி நிலையம், வலந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (வ-100)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆன்மசாந்திக் கிரியைகள் அழைப்பும்

மலர்வு
01
★
07
★
1927



உதிர்வு
14
★
09
★
2011

### திருமதி திருநாவுக்கரசு கண்ணகைப்பிள்ளை

(பண்டிதர், வித்துவான், சைவப்புலவர், அமரர் இ. திருநாவுக்கரசு (அதிபர்) அவர்களின் மனைவி)

பெரிது பெரிது உலகம் பெரிது
அரிது அரிது அறமது பேணல்
இனிது இனிது ஏகாந்தம் இனிது - எனினும்
அமிழ்தினும் இனியது தாய் அன்பு

போற்றற்குரியது இறைவன் திருவருள்
கிடைத்தற்கரியது அளவிலா ஆற்றல்
தேனினும் இனியது தெவிட்டா இன்சொல் - எனினும்
அமிழ்தினும் இனியது தாய் அன்பு

கடந்த 14.09.2011 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்னை திருமதி திருநாவுக்கரசு கண்ணகைப்பிள்ளை அவர்களின் ஆன்மசாந்திக் கிரியைகள் இன்று (14.10.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. குறித்த வைபவத்தில் கலந்து கொள்வதுடன் மதிய உணவிலும் பங்குகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

'பத்மவாசம்'
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.


## தீபாவளித் திருநாளை முன்னிட்டு

அதிரடி விலைக்கழிவில்; Computer ஐ வாங்க..

| SDSCOM - I | SDSCOM - II | SDSCOM - III |
|---|---|---|
| Processor Intel Dual Core 3.2 | Processor Intel Dual Core 3.2 | Processor Intel i3 3.06 |
| Mother Board-Biostar G41 | Mother Board - Biostar G41 | Mother Board-Biostar i7 Supt. |
| 2GB DDR-3 Memory - Kingston | 2GB DDR-3 Memory - Kingston | 2GB DDR-3 Memory - Kingston |
| HDD 250GB Samsung | HDD 500GB Samsung | HDD 500GB Samsung |
| Casing Tower 250W ATX | Casing Tower 250W ATX | Casing Tower 250W ATX |
| DVD Writer | DVD Writer | DVD Writer |
| Monitor LCD 16" Viewsonic | Monitor LED 16" Viewsonic | Monitor LCD 18.5" Samsung |
| USB Optical Mouse with pad | USB Optical Mouse with pad | USB Optical Mouse with pad |
| M/M HI-FI Stero Speaker | M/M HI-FI Stero Speaker | M/M HI-FI Stero Speaker |
| USB Keyboard Board | Web Camera/ Headphone with mic | USB Keyboard Board |
| | USB Keyboard Board | Web Camera/Headphone with mic |
| | 7.2Mbps HSDPA USB Modem | UPS 650VA |
| Price :- Rs. 33,400/= | Price :- Rs.39,500/= | Price :- Rs.48,900/= |
| Free : Antivires Kasperksy 2012 Original | Free : Antivires Kasperksy 2012 Original | Free : Antivires Kasperksy 2012 Original |

★ 1- 3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்! ★கையிருப்பில் உள்ளவரை மட்டுமே...

**Our Services**

*Sales, Repair & maintenance, Software Developments and all type of printing etc.*

**Authorized Dealer for..**

Hp, Dell Products
Biostar Mother Boards
T P Link Products
Viewsonis Products
Havit Products
East UPS

வரவேற்கின்றோம்!
மொத்த / சில்லறை விற்பனையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

அனைத்துவிதமான Computer, Computer சார் தேவைகளுக்கும், சேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்:-

# SDS Computer Services

No. 42/1, College Road, Jaffna.
J/Hindu College மைதானத்துக்கு அருகாமையில்..
T/P:- 021-5100105,0777-874705 , Fax :- 021222-4500


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னத்தைச்...
## ...சொல்ல?!

### யாழ்.மாநகரகம் சுத்தமடைய பூனைக்கு மணி கட்டுவது யார்?

அன்று தூய்மையைப் பேணித் துலங்கியது யாழ்ப்பாண நன் நகரம். அன்று தமிழர் பண்பாட்டைப் பேணிச் காத்து பெட்டகம் போல் திகழ்ந்தது இந்தத் திருநகரம்- என்று அமரர் இரா.பி.சேதுப்பிள்ளையே வாயாரப் புகழ்ந்தார்.

அரசியல் விமர்சனத்துக்கு அப்பால், அமரர் துரையப்பா, மாநகர முதல்வராக இருந்து ஆற்றிய சேவை இன்றும் அவரது நினைவை நீங்காத நினைவு ஆக்கிவிட்டது.

ஆஸ்பத்திரி வீதி, அங்குள்ள சிலைகள், துரையப்பா விளையாட்டரங்கு அவரிட்ட வித்து, நிழல் தரு மரங்கள், இப்படி எத்தனையோ செய்தவர் அமரர் துரையப்பா.

இன்று மக்களால் மக்களுக்கு மக்களே தேர்ந்தெடுத்த திரு நிறை அங்கத்தவர்கள் செய்யும் சேவையை நாடே அறியும். மஹிந்தரின் சிந்தனையின் மாண்பினால் தெரு நாய்கள் சுதந்திரம் அடைந்துவிட்டன. முன்பு நாயும் நாயும் கடிபட்ட காலம் போய், இப்போ நாய்களே கூட்டம் கூடி தமக்குள்ளே வேற்றுமை இல்லையென சண்டையை விடுத்து, திருக் கோயில் திருவீதிகளிலும் தெருவோரங்களிலும் கூடிக் குலாவி தமது ஒற்றுமையைக் காட்டி நிற்கின்றன. இவைகளது இனப்பெருக்கம், தடையின்றி நடக்கிறது.

மழைகாலம் ஆரம்பித்துவிட்டது. இந்த நாய்களின் மலமும் சலமும், நீருடன் கலந்து "பன்னீராகிப் பரவி கிணற்று நீருடன் சங்கமமாகி கொடிய "கான்சர்" நோய்க்கு வித்திடுவதை மக்கள் இன்னும் விளங்கிக் கொள்ளவில்லை என்றே சொல்லலாம்.

இந்தத் தெரு நாய்கள் நிலைபற்றி அவை கழிக்கும் மலங்களின் நிலை பற்றி பகுத்தறிவாளரோ எதுவும் பகர்வ தில்லை. நானுண்டு, என்வீடு உண்டு என்று நினைப்பவர் தான் எங்கள் அறிஞர்களில் மிகப்பலர். நான் வாழும் நாடு, எனது கிராமம் என்று எண்ணுவோரை எங்கும் காணோம்.

தொடங்கிய விடயத்தைத் தொடர்கின்றேன். மா நரக சபை யர் கூடிக்கலைகிறார்கள். அடி பிடியும் நடக்குது. தண்ணீர்ப் போத்தல் வீச்சு, சமரசப் பேச்சு இப்படி "தொண்டாற்றுகின்றனர்"! வீதிகளில் குப்பை கூளம் பரவிக் கிடக்க, காகமும் நாய்களும் கலந்து பசி ஆற, துர்நாற்ற வாடை வீசித் துலங்குது யாழ்ப்பாணம்!

அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் அடுக்களை எச்சங்கள், நேற்றைய சோறு, கறி வகை, அழுகிய வெங்காயம், துருவிய தேங்காய்ப்பூ, இறால் கோது, நண்டுக்கால் இவற்றைப் பொதி பண்ணி அம்மா கொடுக்க அந்த வீட்டுப்பெருமகன் அல்லது கணவன் அந்தப் பொட்டளியை விடிவதற்கு முன்பதாக சந்தியில் அல்லது குப்பை கொட்டும் தெருவோரம் "அங்கும் இங்கும்" பார்த்துவிட்டு, போட்டுவிட்டு "கொண்டாவில்" ஓடும் ஓட்டம் கண்கொள்ளாக் காட்சியாகும்.

யாழ்ப்பாண மாநகர சபையைப் போன்று நாற்பது மடங்கு பெரியது, சென்னை, மும்பாய், கல்கத்தா மாநகர சபைகள். கொழும்பு, கண்டி மா நகர சபைகளும் சிறியவை அல்ல. அந்த நகரங்களில் காணாத விசித்திரத்தை இங்கு காண்கின்றோம்.

தெரு நாய்கள், கட்டாக்காலி மாடுகள், இடையிடையே ஆட்டுப்பட்டிகள், சொறி நாய்கள் என்று பல உயிரினங்கள் பரவிப் பவனி வருவது யாழ்.மாநகர சபையி னிலே ...! "இந்த குட்டி" யாழ்.நகரை செவ்வனே பராமரிக்கத் தெரியாத எங்களுக்கு சுயாட்சியும், தனி நாடும் அவசியம் தானா? சில வேளைகளில் மாற்றுச் சிந்தனையும் வருகிறது. இது "பத்தென்றால் சுமக்கமாட்டேன் பதினைந்து என்றால் பயமெல்ல" என்ற கதையாகத்தான் இருக்கின்றது.

ஆராய்ச்சிகள், ஆய்வரங்குகள், மகாநாடுகள் நடத்தாமல், ஒரு சிறு செய்கை மூலம் தெருவோரப் பொதிகளை அகற்றலாம். யாருக்கு யார் சொல்வது? பூனைக்கு மணி கட்டுவது யார்? யார் சொல்லி யார் கேட்கிறார்கள்? என்ன அந்தத் திட்டம் என்று கேட்கிறீர்களா?

முக்கியமாகப் பொதிகளைப் போடும் இடங்கள்- (என் கண்ணில் பட்டவை மட்டும்) வைமன் றோட், இராசா வின் தோட்டம், கோயில் வீதி (ஜ.சி.ஆர்.சி) சந்திக்கருகில், போன்ற இடங்களில் பெரும் தார்ப்பீப்பாக்களை வைத்து "இங்கே பொதிகளைப் போடவும்" என்று எழுதிவைத்தால், மக்கள் பொதிகளை அவற்றுள் போடுவார்கள் அல்லவா?

காலப் போக்கில் இடங்களை இனம்கண்டு, செங்கல் தொட்டிகளைக் கட்டி தகர மூடிகளையும் இட்டால் தானாகவே இந்தத் தொட்டிகள் நிரம்பும். இலகுவாக பொதிகளை உள்வாங்கும். இத்தகைய நடவடிக்கைகளை யாராவது ஆர்வ முள்ளவர்கள் செய்வார்களானால், யாழ்ப்பாணப் பட்டினம் சுத்தமடையும். இவற்றை நடைமுறைப்படுத்தினால் பல்வேறு திட்டங்களை மக்கள் இனிமேல் முன்வைப்பார்கள். காலத்தின் தேவை கடுகதிச் செயற்பாடே.

பிரசண்டன்

# பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான தமிழ்க் கூட்டமைப்பின் மனு நிராகரிப்பு

கொழும்பு,ஒக்.14

அவசரகால சட்டத்தின் கீழ் இருந்த ஐந்து விதிமுறைகள் பயங்கரவாத தடைச் சட்டத் தின்கீழ் அறிவிக்கப்பட்ட மைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாக்கல் செய் திருந்த அடிப்படை உரிமை மனுவை உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்துள்ளது.

இந்த அடிப்படை உரிமை மனுவை தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா தாக்கல் செய்திருந்தார். மனு தாரர் சார்பில் சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் நீதிமன்றில் ஆஜரா கினர்.

சட்டத்தரணி விளக்கமளித்த தையடுத்து கருத்து வெளி யிட்ட பிரதி சொலிட்டர் ஜெனரல் சவேந்திர பெர்னாண்டோ, குறித்த விதிமுறைகள் நிர் வாகத்திற்கோ அல்லது நிறை வேற்று அதிகாரத்திற்கோ உட் பட்டவை அல்லவென சுட்டிக் காட்டினார்.

இதன் காரணமாக மனுதாரர் அது தொடர்பில் அடிப்படை உரிமை மனுவொன்றைத்தாக் கல் செய்வதற்கான சட்டப் பூர்வ உரிமை கிடையாது என்று அவர் வாதிட்டார். இதனைத் தொடர்ந்து பிரதம நீதியரசர் காலாநிதி ஷிரானி பண்டார நாயக்க, நீதியரசர்களான பீ. ஏ.ரத்னாயக்க, எஸ்.ஐ.எம். இமாம் ஆகியோர் அடங்கிய நீதியரசர் கள் குழாமினால் இந்த அடிப் படை உரிமை மனு நிராகரிக்கப் பட்டது.

(ச-சி)

# இலங்கை அகதிகள் 37 பேர் கப்பல் மூலம் தாயகம் திரும்பினர்



கொழும்பு,ஒக்.14

இலங்கையில் நிலவிய அசா தாரண சூழ்நிலை காரணமாக அகதி அந்தஸ்த்துக் கோரி இந்தியாவிற்குச் சென்று அங்கு முகாம்களில் தங்கியிருந்த 37 இலங்கை அகதிகள் நேற்றுமுன் தினம் நாடு திரும்பினர்.

கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த இவர்களை பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ வரவேற்றார். ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பிரிவுக்கான ஆளு நரின் ஏற்பாட்டில் இலங்கை - இந்திய நாடுகளின் புரிந்துணர் வின் அடிப்படையில் இவர் கள் அழைத்துவரப்பட்டுள்ள னர்.

ஐக்கிய நாடுகள் சபையி னால் வயது வந்த நபர் ஒருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் வயது குறைந்த சிறுவர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபா வீதமும் வழங்கப்பட்டுள்ளது. அத்து டன் ஒவ்வொருவருக்கும் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் வழங்கப்பட் டுள்ளன.

இலங்கையிலிருந்து இந்தியா சென்ற அகதிகளுள் இந்த வருடத்தில் இதுவரை ஆயி ரத்து 400 பேர் நாடு திரும்பியுள் ளனர் என்று அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் சுட்டிக்காட்டி யுள்ளது.

இலங்கை திரும்பும் அகதி களுக்கு இலங்கையில் தங்களு டைய சொந்த இடத்திற்கு பொருள்களை எடுத்துச் செல்ல போக்குவரத்து கொடுப்பனவு கள் வழங்கப்படும் என்று அது தெரிவித்துள்ளது.

இலங்கையில் இருந்து அக திகளாகச் சென்ற ஒரு லட்சத்து 41ஆயிரத்து 63 பேர் உலகம் முழுவதும் 65 நாடுகளில் வாழ்ந்து வருவதாக அகதி களுக்கான ஐ.நா தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் அதிகமானவர் கள் இந்தியா, பிரான்ஸ், கனடா, ஜெர்மன், பிரிட்டன், சுவிற்சர் லாந்து- ஆஸ்திரேலியா, மலேசியா, அமெரிக்கா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் ஐ.நா குறிப்பிட்டுள்ளது. (ச-சி)

# நியாயம் வேண்டி நிற்கிறார் பாரத லக்ஷ்மனின் சகோதரி

கொழும்பு,ஒக்.14

எனது சகோதரனை ச் சுட் டுப் படுகொலை செய்துள் ளனர். 40 இற்கும் மேற்பட்ட துப் பாக்கிரவைகளை உடலினுள் பாய்ந்த நிலையில் மரணித்திருக் கும் எனது சகோதரனைக் காணும் போது எமக்கு கவலையாக உள்ளது. இது மிகவும் மிலேச் சத்தனமாக மேற்கொள்ளப் பட்ட கொலையாகும். எமக்கு நியாயம் தேவைப்படுகின்றது.

- இவ்வாறு முல்லேரியா சூட்டுச் சம்பவத்தில் கொல்லப் பட்ட ஜனாதிபதியின் ஆலோச கர் பாரத லக்ஷ்மன் பிரேமசந் திரவின் சகோதரி தெரிவித்துள் ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

இவரைக் கொலை செய் வதற்கான சதி தொடர்பில் சில [illegible] கள் தெரியவந்துள்ளன.

அதனையடுத்து கனடாவில் வாழும் நானும், நான்கு சகோ தரிகளும், சகோதரனும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலை மைத்துவத்திற்கும் அமைச்சர் கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக் கும் கடிதங்களை எழுதினோம்.

சகோதரனின் நிலையைத் தெளிவுப்படுத்தி அவரது பாது காப்பைப் பலப்படுத்துமாறு நாம் வேண்டுகோள் விடுத்தோம்.

எமது அரசியல் வரலாற்றில் அனைத்து விடயங்களும் அந் தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டி ருந்தன. எமது சகோதரனைப் பாதுகாப்பதற்கான தார்மீகக் கடமை அவர்களுக்கு உள்ளது என்பதை நினைவூட்டினோம்.

இவருக்கு எஸ்.ரி.எப். இல் இருந்தோ, வேறு பாதுகாப்புப் பிரிவில் இருந்தே பாதுகாப்பு எதுவும் கிடைக்கவில்லை.

பாதுகாப்பு வழங் கப்படாததன் பெறுபேற்றை இன்று நீங்கள் காணமுடியும் - என்றார்.

(ச-சி)

# ஆட்சியாளர்கள் பொறுப்புக் கூறவேண்டும்

சரத்பொன்சேகா குற்றஞ்சாட்டு



கொழும்பு, ஒக்.14

பாரத லக்ஷ்மன் பிரேமசந் திரவின் கொலைக்கு ஆட்சியாளர்கள்தான் பொறுப் புக் கூறவேண்டும் என்று முன் னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டி யுள்ளார்.

வெள்ளைக்கொடி வழக்கின் விசாரணைக்காக நேற்றுமுன் தினம் கொழும்பு உயர்நீதிமன்ற கட்டடத்துக்கு வந்திருந்த சரத் பொன்சேகா, நாட்டின் துரதிஷ்ட வசமான இந்த நிலைமைக்கு பாதுகாப்பு அமைச்சுடன் நெருங் கிய தொடர்புடையவர்களே கொலையாளிகள் என்று தெரி வித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர வீடு இல்லாத வன்னி மக்கள் பருவ மழையால் கடுந்துயர் அனுபவிப்பு

## சமூக நலன் பேணும் அமைப்பு சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு,ஒக்.14

வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில் அவசரமாக வீடு தேவைப்படுவதால் வீட்டுத் திட்டம் வழங்கப்படாத நிலையில் பல ஆயிரம் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருப்பதாக மாவட்ட சமூக நலன் பேணும் அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

இது தொடர்பில் அந்த அமைப்புகள் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 30 ஆயிரம் குடும்பங்களுக்கு அவசரமாக வீடு தேவைப் படுவதாகவும் அதில் 14 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் கடந்த மாதம் கல்லாறுப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். ஏனைய 16 ஆயிரம் குடும்பங்கள், வீடு தேவையான நிலையில் வாழ்ந்து வருகின்றன.

நேரப் திட்டத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் மாவட்டத்தில் 5 ஆயிரத்து 354 வீடுகளைக் கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் இந்த மாதம் 31ஆம் திகதியுடன் மேற்படித் திட்டத்தின் பணிகள் நிறைவடையவுள்ள நிலையில் 4 ஆயிரத்து 237 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ளவை இந்த மாதம் 31 ஆம் திகதிக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும்.

இதேபோல இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஆயிரம் வீடுகள் கட்டத் தீர்மானிக்கப்பட்டது. இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் 250 வீடுகளை கட்டத் தீர்மானிக்கப்பட்டு அவற்றில் 53 வீடுகளே இதுவரையில் கட்டப்பட்டுள்ளன. ஏனைய வீடுகளின் நிலை என்ன என்பது தெரியாத நிலை தொடர்கிறது. மேலும் தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனேயே 14 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இதேவேளை பன்னங்கண்டி, சிவபுரம், காஞ்சிபுரம், கோரக்கன் கட்டு, பொன்னகர், செல்வபுரம், மாயனூர், இராமநாதபுரம், உமையாள்புரம், புளியம்பொக்கணை, கல்லாறு போன்ற பகுதி மக்களுக்கு அரை நிரந்தர வீடுகள் கூட முழுமையாக வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் பருவ மழை ஆரம்பித்து விட்டதால் வீடு இல்லாமல் தற்காலிக கொட்டில்களில் வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக இந்த அமைப்புச் சுட்டிக் காட்டுகின்றது. (எ)

# புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்குத் தேர்தல்

முல்லைத்தீவு,ஒக்.14

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு குறிப்பிடுகின்றது.

இந்தப் பிரதேசங்களில் நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்படாத காரணத்தால் இதுவரை தேர்தலை நடத்த முடியாமல் உள்ளதாக அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக சுட்டிக் காட்டினார்.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கூறினார்.

அந்தப் பிரதேசங்களில் நிலக் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டமைக்கான உறுதி வழங்கப்பட்டதும் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தேர்தல்கள் ஆணையாளர் கோருவார் என டாக்டர் நிஹால் ஜயதிலக மேலும் தெரிவித்தார். (எ)

# கிளிநொச்சியில் கருத்தரங்கு

கிளிநொச்சி,ஒக்.14

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை, பூநகரி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள அனர்த்த முகாமைத்துவ சமுதாய வழிப்படுத்துநர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு கருத்தமர்வு எதிர்வரும் 17,18, 19 ஆம் திகதிகளில் கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் 6 அணர்த்த சமுதாய வழிப்படுத்துநர்களுக்கும் பூநகரி உதவி அரச அதிபர் பிரிவில் 19 அனர்த்த சமுதாய வழிப்படுத்துநர்களுக்கும் இந்த விழிப்புணர்வு கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையுடனும் எக்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடனும் இந்தக் கருத்தமர்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# துணுக்காய் பாண்டியன்குளத்தில் நீதிமன்று அமைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு,ஒக்.14

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன் குளம் பகுதிக்கும் சுற்றுலா நீதிமன்றச் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என்று நீதியமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்துக்கான புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் விடுக்கப்பட்ட இந்தக் கோரிக்கை குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள நீதிமன்றத்துக்கே துணுக்காய் மற்றும் பாண்டியன் குளம் பகுதிகளில் மக்கள் செல்ல வேண்டிய நிலையில் இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதால் மக்களின் காலடிக்கே நீதிச் சேவை கொண்டு செல்லப்படுகின்றது என்ற அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தில் உள்ள மக்களின் நலன்கருதி அங்கு சுற்றுலா நீதிமன்றத்தை நடத்துவதற்கான தேவை குறித்தும் நீதியமைச்சரிடம் ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டிருந்ததை அடுத்துப் பிரதம நீதியரசரின் ஒத்துழைப்புடன் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (எ)

# சுகாதார நிலையம் திறப்பு

கிளிநொச்சி, கரந்தாய் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கரந்தாய், சோரன் பற்று, மாசார், மிருகந்தநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 170 குடும்பங்கள் பயன்பெறக்கூடிய வகையில் எழுபத்திஐந்து லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் திறந்து வைத்தார்.

நிகழ்வில் ஜேர்மனியில் இலங்கைக்கான தூதுவர் இக்னிக் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மேற்படி கிராமத்தைச் சேர்ந்த மூன்று குடும்பங்கள் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான காணியை அன்பளிப்பாக வழங்கியிருந்தனர். இதற்கு சர்வோதயம் நிதி வழங்கி இருந்தது. (எ-6)

# புனித பெண்கள் திரேசா ஆசிரியர் தின நிகழ்வு

கிளிநொச்சி,ஒக்.14

கிளிநொச்சி புனித பெண்கள் திரேசா கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வுகள் கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் பாடசாலை முதல்வர் மற்றும் ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் முதன்மை விருந்தினர்கள் ஏ-9 வீதியில் இருந்து மங்கள வாத்திய இசை அணிவகுப்புடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு புனித பெண்கள் திரேசா கல்லூரியின் உயர்தர மாணவி த.பகீரதி தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

நிகழ்வில் த.பகீரதி தலைமையுரையாற்றும்போது:

ஆசிரியர் மெழுகுவர்த்தி போன்று தம்மை உருக்கி எமக்கு ஒளியாகிய கல்வியைப் புகட்டுகின்றனர். அதனால் இன்றைய நிகழ்வில் நாங்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றி நிகழ்வுகளை ஆரம்பித்துள்ளோம்.

ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களையும் வாழ்க்கை தலைமைகளையும் குடும்பத் தலைமைகளையும் சுமந்து எமக்கான அறிவை ஊட்டி வருகின்றனர். அவர்களை மதித்து அவர்களின் அறிவைப் பெறவேண்டும்- என்றார். (எ-6)

# நடமாடும் சேவையை நடத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு,ஒக்.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொலிஸார் நடமாடும் சேவை ஒன்றை நடத்துமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்மூலம் ஆவணங்களைப் பெறமுடியும் என்றும் அத்துடன் அந்தப் பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், குற்றச் செயல்கள் என்பனவற்றை ஆராய்ந்து தடுக்கக் கூடிய ஆலோசனைகளைக் கேட்டறிய வசதியாக இருக்கும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-500)

# கிளிநொச்சியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவருக்குத் தண்டம் விதிப்பு

மன்னார்,ஒக்.14

கசிப்பு விற்பனை உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்மடு நகர்ப் பகுதியில் 110 போத்தல் கசிப்பை தன்வசம் வைத்திருந்த ஒருவரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்திய போது குறித்த குற்றவாளிக்கு ஒருலட்சம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி பகுதியில் 76 போத்தல் கசிப்பை வைத்திருந்த மற்றுமொருவர் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது குறித்த குற்றவாளிக்கு 80 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஒட்டுசுட்டானில் பொலிஸ் நிலையம் திறப்பு

முல்லைத்தீவு,ஒக்.14

ஒட்டுசுட்டான் பகுதியில் பொலிஸ் நிலையம் ஒன்று இந்த மாதம் முதல் வாரத்தில் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளுக்கு முன்னர் ஒட்டுசுட்டானில் இருந்த பொலிஸ் நிலையக் கட்டடம் அழிக்கப்பட்டு செயற்பாடுகள் அற்ற நிலையில் இருந்து வந்துள்ளது.

தற்போது அந்தப் பகுதியில் புதிதாகத் திறக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தால் மக்கள் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-500)

# மன்னாரில் முள்ளிக்குளம் மக்கள் தொடர் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார்,ஒக்.14

மன்னார் மாவட்டத்தின் முள்ளிக்குள மக்கள் கடந்த 3 வருடங்களுக்கு மேலாகவும் இடம்பெயர்ந்த நிலையில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரு முக்கிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. முள்ளிக்குளம் மற்றும் ஈச் சிலந்தை சன்னார் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இவை. இவற்றுள் முள்ளிக்குள மக்கள் கடந்த 3 வருடங்களாக இடம்பெயர்ந்தே வாழ்கின்றனர். இருப்பினும் அவர்களது கிராமத்தில் கடற்படை நிலை கொண்டுள்ளமையால் அவர்களுக்கு அந்த நிலம் கொடுக்கப்பட முடியாது என்ற நிலை காணப்பட்டு வருகின்றது.

அந்த மக்கள் தற்போது தமது உறவினர்கள் வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உறவினர்களும் தற்போது அவர்களை வேறு இடங்களுக்குச் செல்லுமாறு கூறுவதால் அவர்கள் தற்போது பெரும் வேதனையை அனுபவிக்கின்றனர்.

அதேபோல் சன்னார் மக்கள் வாழ்கின்ற குறிப்பிட்ட நிலப்பரப்பை இராணுவம் சுவீகரித்துள்ளது. அதற்கும் அப்பால் அவர்கள் வீதிக்கு அருகில் வாழக்கூடாது என்கின்ற ஒரு நியதி சொல்லப்படுகின்றது. மீள்குடியேற்றம் என்ற போர்வையில் அமைச்சர் ஒருவர் அந்த மக்களை ஓரம் கட்டுகின்ற நிலைமை காணப்படுகின்றது. அந்த மக்களும் அதனை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாது விழித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதற்கான தீர்வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல வழிகளில் எடுத்திருந்தும் எந்த ஒரு முடிவும் வரவில்லை. இந்த முறை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளவுள்ள உண்ணாவிரதம் முதற்கட்டமாக இருந்தாலும் இனிவரும் காலங்களில் மீள்குடியேற்றப்படாத மக்கள் சார்ந்த போராட்டமாக இருக்கும் என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் 79 பாடசாலைகளின் புனரமைப்பு இரண்டு வருடங்களாகியும் இன்னும் இல்லை

## இந்திய அரசு இணக்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.14

வன்னி மாவட்டங்களில் இந்திய அரசினால் புனரமைப்புச் செய்யப்படுவதாகக் கூறப்பட்ட 79 பாடசாலைகள் இரண்டு வருடங்கள் கழிந்து விட்ட நிலையிலும் இன்று வரை புனரமைப்புச் செய்யப்பட வில்லை. தற்பொழுது பருவகால மழை ஆரம்பித்துவிட்டதனால் வகுப் பறைகள், அலுவலங்கள் சீரின்மையால் பாடசாலைகளைக் கொண்டு நடத்துவது சங்கடத்துக்குள்ளாகியுள்ளது என கல்வி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அரசு ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இரண்டு வருடமாக இந்த விடயம் பற்றி அழுத்தம் கொடுத்து வருகின்ற போதும் புனரமைப்புச் செய்வதாகக்கூறி காலம் இழுத்தடிக்கப்படுகிறது. கடந்த வாரம் இலங்கை வந்த இந்தியத் தூதரும் அடுத்த வருடத்தில் புனரமைப்பதாக கூறிச் சென்றுள்ளார் என கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் வவுனியா வடக்கு கல்வி வலயம் ஆகியவற்றில் இருந்து 79 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் புனரமைப்பு பணிகளை இந்திய அரசு பொறுப் பேற்றுக்கொண்டது.

79 பாடசாலைகளையும் இந்திய அரசு பொறுப்பெற்றுக் கொண்டதனால் இப்பாடசாலைகளை ஏனைய நிறுவனங்கள் புனரமைப்புச் செய்ய முன் வரவில்லை. ஏனைய பாடசாலைகளையே புனரமைப்புக் கெனத் தெரிவுசெய்தன. ஏனைய பாட சாலைகளில் அனேகமான புன ரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. 79 பாடசாலைகளையும் ஒரு வருடத்தில் 200 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பதாகக் கூறப்பட்டது. பின்னர் 190 மில்லியன் ரூபா செலவில் புனரமைத்துத் தருவதாகக் கூறப்பட்டது. இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் அந்தப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கடந்த பருவகால மழைக்காலங்களில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு இருந்தனர். இம்முறையும் இந்த இடையூறுகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் இலங்கைக்கு வருகைதந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலர் றஞ்சன் மாத்தாய் அடுத்த ஒரு வருடத்தினுள் 79 பாடசாலைகளும் புனரமைப்புச் செய்யப்படும் எனவும் இதற்கென 190 மில்லியன் ரூபா நிதி ஒதுக்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**கிளிநொச்சி வலயம்**

அழகபுரி அ.த.க.பா., பெரிய புலம் கியநகர் அ.த.க.பா. எஸ், செல்வாநகர் அ.த.க.பா., சிவ பாத கலையகம் அ.த.க.பா., வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பா., சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம், யூனியன் குளம் அ.த.க.பா., கண்ணகைபுரம் அ.த.க.பா., ஊற்றுப்புலம் அ.த.க.பா., ஆனைவிழுந்தான் குளம் அ.த.க,மாயவனூர் அ.த. க.பா., பன்னங்கண்டி எச்.ரி. எம். எஸ், கனகபுரம் ம.வி, கட்டைக் காடு அ.த.க.பா., குமாரசாமிபுரம் அ.த. க.பா., முரசுமோட்டை அ.த. க.பா., புளியம் பொக்கணை நாகேந்திரா வித்தியாலயம், கரவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம், புன்னை நீராவி அ.த.க.பா., இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா., தம்பிராசாபுரம் அ.த.க.பா., கண்டாவளை மகா வித்தியாலயம், பரந்தன் அ.த. க.பா., பூநகரி நல்லூர் ம.வி, சுன்னாவில் அ.த.க.பா., கரியாலை நாகபடுவான் இல-3 அ.த.க.பா., செல்லியா தீவு அ.த. க.பா., குமுழமுனை அ.த.க.பா., வலைப்பாடு அ.த.க.பா., வினாசியோடை அ.த.க.பா., முக்கொம்பன் அ.த.க.பா., செம்பன் குன்று அ.த.க.பா., சாமிப் புலம் அ.த.க.பா., பரமன் கிராய் அ.த.க.பா.

**முல்லைத்தீவு வலயம்**

முள்ளியவளைஅ.த.க.பா., வற்றாப்பளை ம.வி, தண்ணீரூற்று அ.த.க.பா., வித்தி யானந்தா கல்லூரி, முள்ளியவளை தமிழ்வித்தியாலயம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், குமுழமுனை ம.வி, தண்ணீரூற்று முஸ்லிம் வித்தியாலயம், தண்ணீரூற்று சி.சி.ரி. எம்.எஸ், செம்மலை ம.வி, விசுவமடு ம.வி, நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம், பாரதி வித்தியாலயம், தேராவி அ.த.க.

**துணுக்காய் வலயம்**

மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் ம.வி, கல்விலான் குளம் அ.த.க.பா., அனிஞ்சியன் குளம் தமிழ் மகாவித்தியால யம், பழைய முறிகண்டி அ.த. க.பா., புத்துவெட்டு வான் அ.த. க.பா., வவுனிக்குளம் பகுதி-4 அ.த.க.பா., கோட்டை கட்டியகுளம் அ.த.க.பா., தேராங் கண்டல் அ.த.க.பா., இயங்கன்குளம் அ.த.க.பா., நட்டான் கண்டல் அ.த.க.பா., பாலிநகர் ம.வி, வன்னி விளான்குளம் அ.த.க.பா., விநாயகபுரம் அ.த.க.பா., கொத்தி மூலை அ.த.க.பா., மாமடு பழம்பாசி அ.த.க.பா., தண்டுவன் அ.த.க.பா., ஒட்டுசுட்டான் ம.வி, மாங்குளம் ம.வி, கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பா., ஒலுமடு தமிழ் வித்தியாலயம், முத்தையன் கட்டு அ.த.க.பா. , அம்ப காமம் அ.த. க.பா., முத்தையன் கட்டு அ.த. க.பா., புலுமனாச்சி நாதகுளம் அ.த.க.பா.

**வவுனியா வடக்கு வலயம்**

வெடிவைத்த குளம் அ.த.க.பா., கோவில் புளியங்குளம் அ.த.க.பா., மருதோடை அ.த.க.பா., நொச்சிக்குளம் பகுதி அ.த.க.பா., வீரமா முனிவர் வித்தியாலயம், சேமமடு பகுதி II

இதற்கான ஒப்பந்தம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் இந்திய உயர்ஸ்தானிகர் எச்.எ.அசேக்கே காந்தாவினால் கடந்த திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

இதற்கான வேலைகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் வடமாகாண கல்வி அமைச்சும் இணைந்து மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# வன்னியில் இருந்து வெளியேறியவர்களும் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்ய முடியும்

## கபே அமைப்பு தெரிவிப்பு

முல்லைத்தீவு,ஒக்.14

வன்னிப் பகுதியில் யுத்தம் காரணமாக நாட்டைவிட்டு வெளி யேறி வெளிநாடுகளில் வசிப்பவர்களும் 2011 ஆம் ஆண்டுக் கான வாக்காளர் இடாப்பில் பதிவு செய்ய முடியும் என கபே அமைப்புத் தெரிவித்துள்ளது.

நாட்டைவிட்டு வெளியேறியதற்கான காரணம், 2011 வாக்காளர் கணிப்பீட்டின் போது குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு வரமுடியாமைக்கான காரணம் என்பனவற்றைக் குறிப்பிட்டு பிரதேச மாவட்ட தேர்தல்கள் செயலக பிரதி ஆணையாளருக்குக் கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும் எனவும் கபே அமைப்பு அறிவித்துள்ளது.

விண்ணப்பிப்பவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் கிராம அமைப்புகள் மூலம் வழங்கி வருவதுடன், அவை பற்றிய விவரங்களை துண்டுப் பிரசுரங்கள் மூலமும் பகிரங்க அறிவித்தல் மூலமும் கபே அமைப்பு வழங்கி வருகிறது. (எ-500)

# முல்லை கரைதுறைப்பற்றில் 8 வீதிகள் காப்பெற் வீதியாக புனரமைக்க ஏற்பாடு

முல்லைத்தீவு, ஒக்.14

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச சபைக்குட்பட்ட 7 சிறுவீதிகளும், முல்லைத்தீவு வீதிஅபிவிருத்தி அதிகாரசபைக் குட்பட்ட ஒரு வீதியுமாக மொத்தம் 8 வீதிகள் வடக்கின் வசந்தம் திட்டத்தில் காப்பெற் வீதிகளாக புனரமைக்கப்படவுள்ளன.

இதில் ஒரு கிலோ மீற்றர் நீளமான கடற்கரை வீதியும், 1.1 கிலோ மீற்றர் நீளமான குறுக்கு வீதியும், 1.2 கிலோ மீற்றர் நீளமான வைத்தியசாலை வீதி, 2 கிலோ மீற்றர் நீளமான குமுழ முனை குறுக்கு வீதி, 0.28 கிலோ மீற்றர் முள்ளியவளையிலிருந்து வற்றாப்பளை செல்லும் வீதி, 1.2 கிலோ மீற்றர், சிலாவத்தை சந்தியிலிருந்து தச்சினான் வெளி வீதி, 2.2 கிலோ மீற்றர் சின்னத்தன் காடிலிருந்து வட்டுவாகல் செல்லும் வீதி, 2 கிலோ மீற்றர் தண் ணீர் ஊற்றிலிருந்து குமுழ முனைக்குச் செல்லும் வீதி ஆகியன புனரமைக்கப்படவுள்ளன. (எ)

# கல்மடுவில் வெடிபொருள் மீட்பு

வவுனியா பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கல்மடு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

1.5 கிலோ கிராம் நிறையுடைய 3 குண்டுகள், ஒருகிலோ கிராம் நிறையுடைய 10 கிளைமோர் குண்டுகள், ரி.81 வர்க்க மோட்டார் குண்டு ஒன்று, இரு உயிர் கொல்லி குண்டுகள், ஒரு டெட்டனேட்டர் மற்றும் வயர்கள் உள்ளிட்டவற்றைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மீட்டுள்ளனர். (எ)

# மன்னார், திருகோணமலை மாவட்டங்களில் கிராமியக் குடிதண்ணீர் விநியோகத்திட்டம்

## பொறியியலாளர் எஸ்.ஸ்றெயிலதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14

மன்னார்- திருகோணமலை மாவட்டங்களில் கிராமிய குடி தண்ணீர் விநியோகத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு 2மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்ஸ் (21 கோடி 98 லட்சத்து 16 ஆயிரத்து 504 ரூபா) நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா - மன்னார் கிராமிய குடிதண்ணீர் திட்டப் பொறியியலாளர் எந்திரி எஸ்.ஸ்றெயில தரன் தெரிவித்தார்.

மன்னார்- திருகோணமலை மாவட்டத்துக்கான குடிதண்ணீர் திட்டம் தொடர்பாக எந்திரி எஸ்.ஸ்றெயில தரன் மேலும் தெரிவிக்கையில்:

மன்னார்- திருகோணமலை மாவட்டத்தில் நேர்ப் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 3 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியமர்த்தப் பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்களின் வாழ்வாதார திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் உள்ள மன்னார், முசலி, நானாட்டான், மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபை பிரிவுகளில் மீள்குடியமர்ந்த மக்களுக்காக கிராமிய குடி தண்ணீர்த் திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வெருகல், குச்சவெளி, மொரவேவ, கோமரன் கடவ பிரதேசசபை பிரிவில் உள்ள 3 ஆயிரம் நேர்ப் திட்டப் பயனாளிகளுக்கும் கிராமிய குடிதண்ணீர் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (எ-302)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகளை ஜேர்மனி அரசு தொடர்ந்தும் வழங்கவுள்ளது

## இலங்கைக்கான ஜேர்மனியின் துணைத்தூதுவர் இன்னிக்

யாழ்ப்பாணம், ஒக்.14

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகளை ஜேர்மனி தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. வடக்கிலும், கிழக்கிலும் இந்த உதவிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெரிய திட்டமொன்று சிறு பகுதியாகவே ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் நாம் அக்கறை கொண்டிருக்கிறோம் என இலங்கைக்கான ஜேர்மனியத் துணைத் தூதுவர் இன்னிக் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கரந்தாயில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இன்னிக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:

இடம்பெயர்ந்த மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். அதற்கான உதவிகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் மேற்கொண்டு வருகிறோம். பல உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் நாம் இந்த மருத்துவ நிலையத்தின் உருவாக்கத்துக்கும் உதவியிருக்கிறோம்.


அதேவேளை நீண்டகால யுத்தப் பாதிப்புக்களை எதிர்கொண்ட எமது மக்களின் தேவைகளை உணர்ந்து பணியாற்றி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவை பாராட்டுக்குரியது என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த வைபவத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் த.முகுந்தன், பளைப் பிரதேச மருத்துவ அதிகாரி மைதிலி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஆரம்ப சுகாதார நிலையம் ஜேர்மனியின் நிதிப் பங்களிப்பில் சர்வோதயம் நிறுவனத்தால் 72 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யுத்தத்தால் முற்றாகவே சேதமடைந்திருத்த மருத்துவமனையையும், மருத்துவ நிலையங்களையும் இழந்திருக்கும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது மருத்துவ நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்தாலே கியர் மாறும் சூப்பர் சைக்கிள்



மனதில் நினைத்தாலே கியர் மாறும் வசதி கொண்ட அதிநவீன சைக்கிளை ஜப்பானின் ரொயோட்டா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. மோட்டார் சைக்கிளிலும் இந்த வசதியைக் கொண்டுவரும் வகையில் ஆராய்ச்சி நடந்து வருகிறது.


கார்கள், ரோபோ இயந்திரங்கள் தயாரிப்பில் முன்னணியில் உள்ளது ஜப்பான் நிறுவனம் ரொயோட்டா மோட்டார் கூட்டுத்தாபனம். இந்த நிறுவனம் மற்றும் சைக்கிள் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் பார்லீ சைக்கிள்ஸ் நிறுவனம் இணைந்து நவீன தொழில்நுட்பத்தில் சைக்கிள் தயாரிப்பதற்காக ஆய்வு மேற்கொண்டன. ரொயோட்டா ப்ரீயஸ் செயற்றிட்டம் என்ற பெயரில் இந்த ஆய்வு நடந்தது. இந்த ஆய்வின் முடிவில் ப்ரீயஸ் பைக் என்ற பெயரில் சைக்கிள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. கார்பன் பைபரைக் கொண்டு சைக்கிள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதைச் செலுத்த பிரத்தியேக தலைக்கவசம் அணிய வேண்டும். மூளையில் ஏற்படும் மாற்றங்கள், அதிர்வலைகள் ஆகியவற்றை அளக்கும் கருவிகள் தலைக்கவசத்தில் பொருத்தப்பட்டுள்ளன. சைக்கிளில் வயர்லெஸ் மைக்ரோ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. மூளை மாற்றத்தைப் பதிவு செய்யும் கருவியிடம் இருந்து பெறப்படும் தகவலை இதில் உள்ள சாதனங்கள் மாற்றுகின்றன. மூளை நினைப்பதற்கேற்ப, கியர் தானாக மாறுகிறது.

இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில்:

திடீரென ஒருவர் ஏறி உட்கார்ந்து, தானியங்கி கியர் சைக்கிளை செலுத்துவது கடினம். மூளை அதிர்வுகளைப் பதிவு செய்யும் கருவி துல்லியமானது என்பதால், அதற்கேற்ப தெளிவாகச் சிந்திக்க வேண்டும். இந்த சூட்சுமம் தெரிந்தவர்கள் எளிதாக இதனைச் செலுத்தலாம். ஸ்மார்ட் போன் தொழில்நுட்பம், ஜிபிஎஸ் வசதிகளும் இந்த சைக்கிளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மோட்டார் சைக்கிளில் இதுபோன்ற வசதியைக் கொண்டுவருவது குறித்து ஆய்வு நடந்து வருகிறது.

# விரைவாக மென்பொருளைத் தேடுவதற்கு




கணினி என்று சொன்னால் எமக்கு முதலில் ஞாபகம் வருவது அதில் நிறுவப்படும் மென்பொருள்கள் தான். இணையத்தில் நாம் அதைத் தேடிக் கண்டுபிடித்து நிறுவிக்கொள்வோம். ஆனால் சில மென்பொருள்களை நாம் தேடுவது சற்றுக் கடினமான விடயம் அந்த நேரங்களில் நாம் தேடுபொறியின் உதவியை நாடுவோம். ஆனால் சில மென்பொருள்களை எப்படித் தேடுவது என்று எமக்குத் தெரியாது. அந்த மாதிரியான தருணங்களில் எமக்கு ஒரு தளம் கைகொடுக்கும். இதுவும் ஒரு தேடுபொறிதான் ஆனால் இதில் முன்னிருப்பாக பல வகையான இணைய சேவைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. ஒவ்வொன்றின் வகை மற்றும் இயல்பைப் பொறுத்து வகைப்படுத்தப்பட்டு சேவைகள் பட்டியலிடப்பட்டு இருக்கின்றன. இதில் நீங்கள் எதாவது தெரிவுசெய்தால் அதன் வகையைப் பொறுத்து உங்களுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் மென்பொருள் அல்லது வலைத்தளம் காண்பிக்கப்படும். அதை வைத்து நீங்கள் தெரிவு செய்யலாம். அதுமட்டுமல்ல நீங்கள் இதில் உங்கள் சாதனங்கள் மற்றும் இயங்குதளம் ஆகியவற்றை குறிப்பிட்டும் தேடலாம். உங்கள் கைபேசிக்கான மென்பொருள் அல்லது உங்கள் ஐ-போனுக்கான மென்பொருள்களை மட்டும் தேடலாம். இந்தத் தளத்தில் ஒரு மென்பொருளை ஏனைய மென்பொருளுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றனர். இதில் நீங்கள் குறிச்சொற்கள் கொடுத்தும் தேடலாம் அதற்கும் இந்தத்தளம் எமக்கு உதவுகிறது.

தளத்தின் முகவரி : **www.catchfree.com** என்பதாகும்.

# மூளையின் செயற்பாட்டுக்கு ஏற்ப அசையும் செயற்கைக் காதுகள்!!

மூளையின் செயற்பாட்டுக்கு ஏற்ப அசையும் செயற்கைக் காதுகளை ஜப்பான் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். நாம் உற்சாகமாக இருந்தால் இந்தக் காதுகள் நிமிர்ந்து நிற்கும். தூக்கம் வந்தாலோ, சோர்வு அடைந்தாலோ இவை தளர்வடைந்து விடும். மூளையின் செயற்பாடுகளைக் கண்டறியும் சாதனங்கள் உட்படப் பல்வேறு மின்சாதனக் கருவிகளை ஜப் பானைச் சேர்ந்த நியூரோவேர் நிறுவனம் தயாரித்து வருகிறது. அண்மையில் இவர்கள் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தியுள்ள கருவி நெகோமிமி. அதாவது நியூரோ தொடர்பாடல் மிமி. மிமி என்றால் ஜப்பானிய மொழியில் பூனையின் காதுகளைக் குறிக்கும்.

இடுப்பு பெல்ட் போல இருக்கும். இதைத் தலையில் அணிந்து கொள்ள வேண்டும். அதனுடன் பூனையின் காதுகள் போல 2 காதுகள் நீட்டிக் கொண்டிருக்கும். மூளையில் ஏற்படும் அதிர்வுகள், மாற்றங்களை பெல்ட்டில் இருக்கும் சிறிய கருவி பதிவு செய்யும். அதற்கு ஏற்ப காது போன்ற பகுதி செயற்படும். நாம் சுறுசுறுப்பாக இருந்தால் நெகோமிமி காது விறைப்பாக இருக்கும். எமக்குத் தூக்கம் வந்தாலோ, நாம் சோர்வு அடைந்தாலோ அந்தக் காது தொங்கி விடும். இதுபற்றி நியூரோவேர் நிறுவனத்தின் ஆய்வுக் குழு உறுப்பினர் கனா நகானோ கூறுகையில்: பள்ளியில் பாடம் நடக்கும்போதே சில மாணவர்கள் தூங்குவார்கள். அலுவலகத்தில் கூட்டங்களில் தூங்குபவர் களும் உண்டு. சிலரது கண் திறந்திருக்கும். ஆனால் தூங்கிக் கொண் டிருப்பார்கள். அவர்களை நெகோமிமி மூலம் எளிதில் கண்டுபிடித்துவிடலாம். சுவாரஸ்யத்துக்காக இதை உருவாக்கியுள்ளோம். மருத்துவம் உள்பட பல துறைகளில் இந்த வசதியை பயன்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகிறோம் என்றார்.



# உங்கள் கைபேசியில் தமிழ் திரைப்படங்களை தரவிறக்கம் செய்ய

## 15 இணையத் தளங்கள்

புத்தம் புதிய திரைப்படங்களை தரவிறக்கம் செய்யவேண்டுமாயின் இணைய இணைப்புடன் கணினி தேவை. ஆனால் நாம் வைத்திருக்கும் கைபேசியிலே புதிய திரைப்படங்களை பதிவிறக்கிப் பார்த்துக் கொள்ளலாம் . இதற்காக 15 தளங்கள் முக்கியமான தளங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி உங்கள் கைபேசியில் புத்தம் புதிய திரைப் படங்களை நீங்களும் தரவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளுங்கள். 15 தளங்களும் வருமாறு:

**1.Mobile Movies**
**2.3Gp Mobile Movies**
**3.Tamil Mobile Movies**
**4.Mobile Movies**
**5.Free TAMIL FULL MOVIES DOWNLOAD**
**6.Mobile Movies Free Download Latest Bollywood, Hollywood,**
**7.CrazyMovies.In Mobile Movies Free Downloads**
**8.Mobile Movies Online**
**9.Movie Arena Free Download Latest Bollywood, Hollywood,**
**10.AviMobileMovies.Com Free Download Latest Bollywood, Hollywood**
**11.MOVIES&MOBILE.IN& 3GP BOLLYWOOD MOBILE MOVIE DOWNLOADS**
**12.Full Movies**
**13.3GP 3GP Videos Mobile Videos Download Music Videos MV3gp.com**
**14.[illegible]**
**15.[illegible] offers Malayalam Mobile Movies,Malayalam 3gp Movies**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் வாக்களிப்பில் அசமந்தம்; அதனாலேயே ஆசனங்கள் இழப்பு

### தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் கூறுகிறார்

அம்பாறை,ஒக்.14

தமிழ் மக்கள் வாக்களிப்பில் காட்டிய அசமந்தப்போக்கால் சில உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பிருந்தும் அதனைத் தவறவிட்டுள்ளோம் என்பது வருந்தத்தக்க விடயமாகும்.

இவ்வாறு கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரான கு.ஏகாம்பரம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழரசுக்கட்சியின் நீண்ட கால உறுப்பினராக இருந்து கட்சிக்கும், மக்களுக்கும் தொண்டாற்றி வந்துள்ளேன். கல்முனை மாநகரசபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட நான் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படாமை துரதிஷ்டவசமானது.

மாற்றானுக்கு விலை போகாமலும், சோரம் போகாமலும் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்த கல்முனை மாநகரம் வாழ் தமிழ் மக்களுக்கு நன்றிபகரும் அதே வேளை எனக்கு விருப்பு வாக்குகளை அளித்த மக்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். நான் மாநகர சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப் படாவிட்டாலும் கொண்ட கொள்கையில் உறுதியுடனும், நீண்ட கால என் மக்கள் தொண்டில் சிறிதும் சலியாதவனாகவும் திகழ்வேன்.

கல்முனை மாநகரம் வாழ் தமிழ் மக்களின் உணர்வுகளோடு, ஒன்றித்து நின்ற எனக்கு எல்லைக் காவலன் என்ற பெருமிதத்தை அவர்கள் தந்தனர்.

இந்த அடிப்படையில் என் உயிர் உள்ள வரை கல்முனை மாநகர தமிழ், முஸ்லிம் மக்களின் நல்லுறவைப் பேணுவதிலும், அதற்கு வலுச் சேர்ப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்.

பல்வேறு காலகட்டங்களில் இங்குஏற்பட்ட தமிழ்- முஸ்லிம் இன முறுகல் நிலைமைகளின் போதெல்லாம் அமைதிக்காகவும், சமாதானத்துக்காகவும் இரவு, பகலாகப்பாடுபட்டவன் நானென்பதைத் தமிழ், முஸ்லிம் மக்கள் நன்கறிவர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-30)

## சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு

அம்பாறை,ஒக்.14

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு கல்முனை நகர லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கே. பொன்னம்பலம் தலைமையில், கல்முனை கார்மல் பற்றிமா கிளனியார் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக 306 II லயன்ஸ் கழக அமைச்சரவைப் பொருளாலர் லயன் ஹரிச்சந்திரவும் கௌரவ விருந்தினராகப் பிராந்தியத் தலைவர் பொறியியலாளர் என். பி.ரஞ்சனும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள், லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் ஊர்வலம் கல்முனை நகர் ஊடாக நடைபெறவுள்ளது. (ச-30)

## தந்திப் படிவம் இன்மையால் சிரமம்

ஹாரிஸ்பத்துவ- ஒக்.14

கண்டி மாவட்டத்தின் பெரும்பாலான கிராமிய அஞ்சலகங்களில் தந்திகளை எழுதி ஒப்படைக்கும் படிவங்கள் இல்லாமையால் தாம் பெரிதும் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அஞ்சல் திணைக்களம் போதிய அளவு தந்திப் படிவங்களை தபாலகங்களுக்கு விநியோகிக்க உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.




மட்டக்களப்பு, வாழைச்சேனை சுகாதார பிரிவும், மலேரியா தடை இயக்கப் பிரிவும் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு வீதி நாடகத்தினை நடத்தியுள்ளனர்.

## அபயபுரப் பகுதியில் கைக்குண்டுகள் மீட்பு

திருகோணமலை,ஒக்.14

திருகோணமலை, உப்புவெளி, அபயபுரம் பகுதியில் மண்ணில் புதைத்து வைக்கப் பட்டிருந்த நிலையில் இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உப்புவெளி அபயபுரம், உயர் மகளிர் கல்லூரியில் விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் மண்ணை வெட்டி அகற்றியபோது இந்தக் கைக்குண்டுகள் சிக்கியுள்ளன.

உடனடியாக உப்புவெளிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து இந்த இடத்திற்கு வந்த இராணுவத்தினர் குண்டைச் செயலிழக்கச் செய்தனர். இது தொடர்பான விசாரணைகளை உப்புவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## வடமேல் மாகாண தமிழ் மொழிமூல மாணவர்கள் ஆங்கில அறிவு விருத்தியில் பின்தங்கியுள்ளனர்

### மாகாணசபை உறுப்பினர் என். எம். நசீர்

குருநாகல், ஒக்.14

வடமேல் மாகாணசபைக்குட்பட்ட தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் ஆங்கிலக் கல்வி மிகவும் பின்தங்கிக் காணப்படுகின்றது என்று வடமேல் மாகாண சபை உறுப்பினர் என். எம். நசீர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேசப் பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியைக் கற்கும் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் உயர் தரம் கற்றுக் கொள்வதற்கு பாடசாலையைத் தேடுவதில் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்.

இனரீதியாக வகைப்படுத்தி நூற்றுக்கு ஒன்று, இரண்டுபேர் மாத்திரமே எடுக்கின்றனர். இதனால் பெரும்பான்மையான மாணவர்கள் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர் - என்றார். (ச)

## அரச தரப்பு வேட்பாளர் வீட்டில் கைக்குண்டுத் தாக்குதல்

கல்முனை,ஒக்.14

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின்சார்பில் போட்டியிட்ட கல்முனை மாநகரசபை வேட்பாளர் ஒருவரின் வீட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை, பாண்டிருப்பு, செல்லப்பர் வீதியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கல்முனை மாநகரசபை வேட்பாளர் கந்தையா விநாயகமூர்த்தி என்பவரது வீட்டின் மீதே இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கைக்குண்டுத் தாக்குதலால் வீட்டின் யன்னல், கதவுகள் சிறிய சேதங்களுக்குள்ளாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# காணி பெறுவதற்கான பதிவை நீடிக்குமாறு ஜனாதிபதிக்கு மனு

வெல்லாவெளி, ஒக்.14

இலங்கை ஜனநாயகக் குடியரசின் கீழ் உள்ள காணித் துண்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக கடந்த 30 ஆம் திகதி வரை மேற்கொண்ட பதிவை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசியற் கட்சிகள் கூடி கடந்த செவ்வாய்க்கிழமை தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளன. அத்துடன், இது குறித்த மனு ஒன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான இந்த மகஜரில் குறிப்பிடப்பட்டதாவது:

இலங்கை ஜனநாயகக் குடியரசின் கீழ் உள்ள காணித்துண்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான பதிவானது கிழக்கு மாகாண காணி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மூலம் கடந்த 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து அனுப்புமாறு ஒவ்வொரு பிரதேச செயலாளரையும் கோரியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட அரசியல் கட்சிகளின் கலந்துரையாடலில் இந்த விடயம் கருத்தில் எடுக்கப்பட்டது.

இதுதொடர்பாக பொது மக்கள் இந்த வேலைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதிய கால அவகாசம் இல்லாததால் மேலதிகமாக இன்னும் மூன்று மாதங்கள் நீடித்து அனுமதி வழங்கும் பட்சத்தில் அனைத்து மக்களும் இந்தக்காணி விடயங்கள் சம்பந்தமான விண்ணப்பப் படிவத்தை குறித்த காலத்திற்குள் வழங்க முடியும்.

மேலும் வடக்கில் மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்திருப்பதால் தற்போது இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்காது இருக்கும்படியும் கேட்டுக் கொள்கின்றோம் இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# திருகோணமலை மாவட்டத்தில் 290 காசநோயாளர்கள்

மூதூர், ஒக். 14

திருகோணமலை மாவட்டத்தில் 290 பேர் காசநோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நோய்க்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டால் கட்டுப்படுத்தமுடியும் என்று சுவாச நோய்த் தடுப்புப் பொறுப்பதிகாரி டாக்டர் சுரேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

அஸ்மா நோய் உள்ளவர்கள் இவ்வாறான சுவாசநோய்த் தொற்றுக்கு உள்ளாகின்றனர். வறுமைக் கோட்டின்கீழ் வாழ்பவர்கள், சரியான போஷாக்குச் சத்துக் குறைந்த மக்கள் ஆகியோரே இந்த நோயால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

கிண்ணியா, மூதூர், கந்தளாய், குச்சவெளி ஆகிய பிரதேசங்களுக்கு நாம் நோயாளிகளின் காலடிக்குச் சென்று இந்தநோய் சம்பந்தமான விழிப்புணர்வை வழங்கி வருகின்றோம். வைத்தியசாலையில் நீண்டகாலம் வைத்து சிகிச்சை அளிப்பதை விட அவரவர் வீடுகளிலேயே நவீன தொழில் நுட்ப ரீதியான சிகிச்சைகளை வழங்கி வருகின்றோம்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உறவினர்கள் உதவியுடன், உருப்படியான வேலை ஒன்றை முடிப்பீர்கள். தன்னம்பிக்கையை அதிகரிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். உடல் உபாதைகளால் ஏற்பட்ட தொந்தரவுகள் குறைந்து, தெம்பு பெறுவீர்கள். கடந்த காலத்தில் உங்களுக்கு உதவி செய்த ஒருவருக்கு இப்போது பதில் உதவி செய்வீர்கள். பணவரவு உண்டு.

**இடபம்:**
வழக்கமான சில பணிகளைச் செய்ய முடியாமல் ஏதாவது ஒரு வழியில் தடைகளைச் சந்திக்கலாம். நல்லவர் போல நடிக்கும் சிலரின் பேச்சைக் கேட்டு, நடப்பதால் பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். வரவு ஒன்றை எதிர்பார்த்து, குடும்பச் செலவுகளைச் செய்வீர்கள். சகோதரர்கள் வழியில் அன்புத் தொல்லைகளை எதிர்கொள்ளலாம். பக்தி நாட்டம் கூடும்.

**மிதுனம்:**
நடப்பது நடக்கட்டும் என, துணிச்சலாகச் சில காரியங்களைச் செய்வீர்கள். கடன் மிகுதிகள் வசூலாகும். பிள்ளைகள் விடயத்தில் அதிக பாசத்தோடு நடந்து கொள்வீர்கள். ஆசைப்பட்ட ஒன்று, எளிதில் கிடைக்கும் சூழ்நிலை உருவாகும். உறவினர்களை உபசரிப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வழக்கத்திற்கு மாறாக, கூடுதல் நேரம் தூங்குவீர்கள்.

**கடகம்:**
திறமை, புத்திசாலித்தனம் வெளிப்படும் நாள். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். பழைய நண்பர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும். வியாபாரிகள் நாள் முழுவதும் பரபரப்பாக பல வேலைகளைச் செய்ய நேரிடலாம். கடன் மிகுதி ஒன்றைச் செலுத்த நேரிடலாம். ஆறுதலான நாள்.

**சிங்கம்:**
போட்டி, எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். அரசியல் தொடர்புடையவர்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் சிரமங்கள் ஏற்படலாம். அயலாருடன் உங்களின் சுக துக்கங்களைப் பற்றி பேசி மகிழ்வீர்கள். முன்பின் பார்த்திராத ஒருவருக்காக, வெளியிடங்களில் காத்திருக்கலாம். பிடிக்காத ஒருவரைப் பார்க்க நேரிடலாம்.

**கன்னி:**
சிறிய தவறு ஒன்றுக்கு, ஒருவரிடம் பெரிய அளவில் திட்டு வாங்கலாம். உடல் நலம் பற்றிய கவலைகள் ஏற்படலாம். நண்பர் ஒருவரிடம் சில விடயங்களை நேரடியாகச் சொல்லாமல், மறைமுகமாகச் சொல்வீர்கள். சிலரிடம் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமல், சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்கலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும்.

**துலாம்:**
உங்களின் யோசனைகளுக்கு குடும்ப உறுப்பினர்கள் அமோக ஆதரவு தெரிவிப்பர். அயலார் விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். உதிரி வரவுகள் உண்டு.


**விருச்சிகம்:**
உறவினர்கள் மத்தியில், உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். வெளியூர்களில் இருக்கும் சிலரை, தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவீர்கள். புதிய அனுபவ பாடம் ஒன்றைக் கற்றுக் கொள்வீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கை நிறைவேறும். மருத்துவ சிகிச்சைகளுக்கு வெளியிடங்களில் காத்திருக்கலாம்.

**தனுசு:**
ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்குவீர்கள். பழகிய சிலர் உங்களை பகடைக்காயாகப் பயன்படுத்தி ஆதாயம் பெறுவர். மருத்துவச் செலவுகளைத் தவிர்க்க, உடல் நலத்தில் கவனம் அவசியம். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த ஒரு இடத்திற்கு, திடீரென செல்லும் சூழ்நிலை உருவாகும். மனக் குழப்பங்கள், மந்தம், மறதியால் அவதிப்படலாம்.

**மகரம்:**
வேலை நெருக்கடிகளால் அலைக்கழிப்புகளுக்கு ஆள்படலாம். பணத்தட்டுப்பாட்டைத் தீர்க்க பிறரிடம் கடனுதவி பெறலாம். மாமன், மைத்துனர்கள் உங்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வர். சக ஊழியர் ஒருவரின் செயற்பாட்டால் கோபம் அடையலாம். சில விடயங்களில் தர்ம, சிந்தனையுடன் நடந்து கொள்வீர்கள். நாவன்மை அதிகரிக்கும்.

**கும்பம்:**
தொழில் ரீதியான விடயங்களில் குழப்பங்கள் இல்லாமல், தெளிவான முடிவு எடுப்பீர்கள். கணவன், மனைவியிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கலாம். சேமிப்பை அதிகரிப்பதில் நாட்டம் செல்லும். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடக்கலாம். சிலர் உங்களைப் பாராட்டிப் பேசலாம்.

**மீனம்:**
பெண்கள் வழியில், சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, முக்கியமான ஒருவரை, பாதையில் சந்திக்கலாம். மற்றவர்களிடம் கடும் வார்த்தைகளில் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். ஒருவர் கேட்ட உதவியைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். பிள்ளைகள் வழியில் செலவுகள் நேரும்.





# அரசின் மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றத்தையும் கடந்தவை

**'இருரச' சிங்கள வார இதழுக்கு வழக்கறிஞர் ஜே... அமுனுகம தெரிவித்த கருத்துக்களின் தொகுப்...**

■ வீயெஸ்ரீ

இலங்கை அரசு மீது சர்வதேச சமூகம் சுமத்தும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள், வெறுமனே அரசு மேற்கொண்ட ''மனிதாபிமான நடவடிக்கை'' - போர் - தொடர்பானது மட்டுமல்ல.

மனிதாபிமான நடவடிக்கை என்று கூறி அரசு முன்னெடுத்த இறுதிப்போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் ஒரு பிரிவாகவும் அரசின் நிர்வாகத்தில், அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் மற்றொரு பிரிவாகவும் பிரிக்கப்படுகின்றன.

நாட்டின் அரசியல்வாதிகள் மற்றும் புத்திஜீவிகள் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோர் போன்றே ஊடகவியலாளர்கள் சிலரும்கூட, இறுதிப் போர் குறித்து மட்டுமே சர்வதேச சமூகம் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டைச் சுமத்துகிறது என நம்புகின்றனர்.

**அரசு அல்ல அரசாங்கம்**

உண்மையில் சர்வதேச சமூகத்தின் போர்க்குற்றச்சாட்டுக்கள் இலங்கை மீதானவை அல்ல. அவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசுக்கு எதிரானவையே.

ஓர் அரசு மற்றும் அரசாங்கம் என்பவை இருவேறு அமைப்புக்களே. இவையிரண்டும் ஒன்றல்ல. அதாவது ஓர் அரசு எனப்படுவது தனக்குள் நிலப்பரப்பு, மக்கள் கூட்டம், இறைமை, அரசாங்கம் என்பவற்றைக் கொண்டதாகும்.

தற்போது நடப்பது இலங்கை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் இடையிலான பிரச்சினை அல்ல. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடையேயான அரசியல் பிரச்சினை என்றே அதனை அடையாளப்படுத்த வேண்டும்.

அண்மைக் காலமாகப் பரபரப்பாகப் பேசப்பட்டு வரும் ஐ.நாவின் ஜெனீவா மனித உரிமை மாநாட்டு நிகழ்ச்சி நிரல் திடுதிப்பாக முடிவ்வு செய்யப்பட்ட ஒன்றல்ல. அது நீண்ட கால இடைவெளியில் படிப்படியாகத் திட்டமிட்டு வளர்க்கப்பட்டு அரங்கேற்றப்பட்ட ஒன்று. அந்தத் திட்டங்கள் படிப்படியாக முன் நகர்த்தப்படுகையில் இலங்கை அரசு தனது போர் வெற்றி மமதையில் மூழ்கி, போர் வெற்றியை முன்னிலைப்ப டுத்தி பெரும்பான்மையின சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைத் தனது பக்கம் குவிய வைக்கும் முயற்சியில் இருந்தது.

சர்வதேச ரீதியில் எழக்கூடிய மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் அரசு தன்னைத் தயார்ப்படுத்தி இருக்கவில்லை. அது அசண்டையீனமாக இருந்தது. போர் முடிவுக்கு வந்து இரண்டாண்டு கழிந்துவிட்ட இன்றைய நிலையிலும்கூட அத்தகைய எந்தவொரு முயற்சி குறித்தும் அரசு அக்கறை காட்டுவதாகத் தோன்றவில்லை.

மற்றொரு வகையில் சொல்வதானால், அத்தகைய திறன் இன்றைய அரசிடம் இல்லை எனலாம். போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசு எப்போதும், எந்த வேளையிலும் ஒரே விதமான கருத்தையே வெளிப்படுத்தி வந்துள்ளது. அதாவது போரின்போது அப்பாவிப் பொது மக்கள் எவரும் கொல்லப்படவில்லை; வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என்பதே அது.

அரசு திரும்பத் திரும்ப இதனையே கூறி வந்துள்ளது; கூறி வருகிறது. அதேசமயம் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எப்போதுமே தொடர்ச்சியாக மேற்குலக நாடுகளைத் திட்டித்தீர்க்கும் போக்கையும் அது முன்னெடுத்து வந்துள்ளது.

**போலிக் குற்றச்சாட்டுக்கள்**

அரசு பெற்ற போர் வெற்றியை நலிவுபடுத்தவும், நாட்டைத் துண்டாடவும் புலிகளின் ஆதரவாளர்களின் உதவி மேற்குலக நாடுகளுக்குத் தேவைப்படுவதாகவும், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தின் பின்னணியில் செயற்பட்டு வருவதாகவும் அரசு தெரிவித்து வந்தது. இவ்வாறு மேற்கு நாடுகள் மீதும், புலம் பெயர் தமிழர்கள் மீதும் கண்டனங்கள் தொடுக்கவும் குற்றம்கூறி விமர்சிக்கவும் அரசுக்குள்ளேயே தனியான அரசியல் தரப்பு ஒன்றும், ஊடகவியலாளர் தரப்பு ஒன்றும் இன்றும் கூட இயங்கி வருகின்றன.

சர்வதேச மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான ஐ.நா. பிரகடனத்தில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ள தால், அதிலுள்ள விதிகளைப் போரின் போது கடைப்பிடிக்க வேண்டியது அதன் கடமை மட்டுமன்றி கட்டாயமும்கூட.

இலங்கை அரசு மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள், ஜெனரல் சவேந்திர சில்வா மீது தொடுக்கப்பட்ட வழக்கு என்று எல்லாவற்றுக்கும் புலம்பெயர் தமிழர் தரப்பின் அழுத்தமே காரணம் என்று விமர்சிப்பதில் உண்மை ஏதுமில்லை. ஆனால் அத்தகைய விமர்சனத் தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு உண்மை இல்லாமலும் இல்லை.

நாட்டின் வடக்கில் அரசு முன்னெடுத்த போரை அது வெளிப்படைத் தன்மையுடன் நடத்தாமை மற்றும் இன்றைய அரசு பதவியேற்ற நாள் முதல் இது வரையில் உள்நாட்டில் கூட விரோதமாக மேற்கொண்ட செயற்பாடுகள் யாவும் சர்வதேச ரீதியில் குற்றச்சாட்டுக்குள்ளாகலாம் என்று தெரிந்திருந்தும், அதற்கு முகங்கொடுக்கத் தயாராகி இருக்காமை இந்த அரசின் பெரும் தவறு. அதனையே சர்வதேச சமூகம் இப்போது தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

அரசக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விடுதலைப் புலிகளின் ஆதரவுத் தரப்புக்களே பின்னின்று ஊக்குவிப்பதாகக் கூறுவது, அரசியல் ரீதியில் தான் எதிர்நோக்கும் பின்னடைவுகளை மூடிமறைப்பதற்கான அரசின் முயற்சியே தவிர வேறில்லை. எது எவ்வாறானபோதிலும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அரசுக்கு எதிரான செயற்பாடுகள் வலுப்பெறுமானால் புலம்பெயர் தமிழர் தரப்பு அதற்கு பேராதரவு நல்கும் என்பது மட்டும் மறுக்க இயலாத உண்மை.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் தரப்புக்களுக்கும் புலம்பெயர் தமிழர் தரப்புக்களுக்கும் இடையேயான நெருக்கமான உறவு காரணமாக சர்வதேச சமூகம் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் எப்போதுமே இவ்விரு தரப்புகளையும் சந்தேகக் கண்களுடனேயே நோக்கி வருகின்றன.

**வெளிப்படையற்ற தன்மையால் பாதிப்பு**

வட பகுதியில் அரசு நடத்திய போரின்போது உண்மையில் என்ன நடந்தது என்றோ, அங்குள்ள பொது மக்களின் தற்போதைய நிலை குறித்தோ இன்று வரை எமக்கு எதுவும் தெரியாது. இந்த விடயத்தில் அரசு மற்றும் படைத் தலைமைகளால் வெளியிடப்படும் தகவல்களை மட்டுமே பெற முடிகின்றது.

சுதந்திரமாக எந்தவொரு ஊடகவியலாளரும் அப்பகுதிக்குச் சென்று உண்மை நிலையைக் கண்டறிய அனுமதி கிடையாது. ஐ.நாவின் பிரதிநிதிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள்கூட அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளன. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட அங்கு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

போரின்போதும் இதே வெளிப்படையற்ற தன்மையே காணப்பட்டன. இதன் விளைவையே அரசு இன்று அனுபவிக்க நேர்ந்துள்ளது. அதுவே சனல்-4 காணொளி வெளிவரவும் காரணமானது. ஜெனீவா மாநாட்டிலும் அதற்கு முன்னரும் இலங்கை அரசுக்கு எதிரான மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மை

யும்

வ

...ஞர் ஜே.சீ.
...தொகுப்பு

உரிமை மீறல் குற்றச்சாட்டு மற்றும் சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட 'சிறி லங்காவின் கொலைக் களம்' காணொளியில் தெரிவிக்கப்பட்டவை குறித்து சுதந்திரமான விசாரணை அவசியம் என்ற சர்வதேசத்தின் கருத்து மற்றும் அழுத்தம் பெரிய அளவில் தலைதூக்க இவையே காரணமாயின.

சனல்-4 காணொளி குறித்து அரசு என்னதான் தனது கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்தியபோதிலும் அதற்கு எதிராக பொருத்தமான பதிலை வழங்கவோ, சவால்விடவோ அதனால் இயலாமலேயே உள்ளது. அரசின் சண்டித்தனம் காரணமாகவே சனல்-4 காணொளி இன்று இந்த அளவுக்கு அரசுக்குச் சவால் விடும் ஒன்றாக மாறியுள்ளது.

**செயல்திறனற்ற வெளிவிவகார அமைச்சு**

போர் இடம்பெற்ற வேளையில் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வெல்வதற்கும் சர்வதேச சமூகம் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய வெளிவிவகார அமைச்சு அதனைத் தவறவிட்டது. அதனால் சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுக்களுக்கு விளக்கமளிக்கவோ, தகுந்த பதில் அளிக்கவோ தற்போதைய வெளிவிவகார அமைச்சரால் இயலாதுள்ளது.

உள்நாட்டிலோ வெளிநாடுகள் மத்தியிலோ தாம் வெளிப்படுத்திய தவறான கருத்துக்களால் வெளிவிவகார அமைச்சர் ஏளனத்துக்கு உள்ளான சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

வெளிநாட்டு அரசியல்வாதிகளுடனான உறவை சுமுகமாகப் பேணிச் செயற்படவேண்டிய அவர், மேற்குலக நாடுகள் மீது எப்போதுமே குற்றம் குறை கூறுவதை வழக்கப்படுத்திக் கொண்டுள்ளார்.

தமது திறமையான செயற்பாடுகள் காரணமாக உலக நாடுகள் மத்தியில் நற்பெயர் சம்பாதித்து வந்த எமது வெளிநாட்டுத் தூதுவர் சேவை இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய திறமையும் அறிவும்மிக்க வெளிநாட்டுத் தூதுவர் சேவை அதிகாரிகள் பலர் கொழும்பில் வெளிநாட்டு அமைச்சில் காலத்தைக் கழிக்கின்றனர். ஆனால் அரசியல்வாதிகளின் நெருங்கிய உறவினர்களும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கான அரச அதிகாரிகளும் வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ராஜதந்திர சேவை குறித்த உரிய அக்கறையோ திறனோ அற்ற இவர்கள் மனித உரிமைகள் குறித்த பூரண தெளிவைக் கொண்டிருக்காமையும் இலங்கை அரசுக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டைச் சுமத்துவோருக்குச் சாதகமாக உள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு குறித்து சர்வதேச சமூகம் திருப்திப்படவில்லை என்பது ஜெனீவாவில் உறுதியாகியுள்ளது. அந்த ஆணைக்குழுவால் சாட்சியங் களைக் கேட்டுப் பதிவு செய்ய மட்டுமே இயலும் என்றும் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரித்தறிய அதற்கு அதிகாரம் கிடையாது என்றும் சர்வதேச சமூகம் குற்றஞ்சுமத்துகிறது. ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் இலங்கை அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக மட்டுமல்லாது விடுதலைப் புலிகளின் நடவ்டிக்கைக்கு எதிராகவும் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. எனவே அந்த அறிக்கையை விடுதலைப் புலிகளது ஆதரவாளர்களுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கும் சார்பான அறிக்கை என வாதிடுவது தவறாகும். அரசும் அதன் ஆதரவுத் தரப்பினரும் தமது அரசியல் இலாபத்துக்காக இத்தகைய தவறான வாதங்களை முன்வைத்து வருகின்றனர்.

மேற்கு நாடுகளை எமது நாட்டின் எதிரிகள் என அடையாளப்படுத்தி அந்த நாடுகளின் அரசுகளைத் திட்டித் தீர்த்து விமர்ச்சிக்க, அவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தவென அரசுக்குள்ளேயே தனியான அரசியல்குழு ஒன்று செயற்பட்டு வருகிறது. அரசும் அரசுக்கு ஆதரவான ஊடகங்களும் எப்போதுமே மேற்குலக நாடுகளைத் திட்டித் தீர்ப்பதையே வழக்கப்படுத்திக் கொண்டுள்ளன. அரசியலின் யதார்த்த நிலை குறித்து இவர்களில் பலருக்குத் தெளிவு கிடையாது.

ஏகாதிபத்திய நோக்கில், நாட்டில் ஓர் அரசியல் கட்சி மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும் என்ற கொள்கையுடன் செயற்படும் கம்யூனிஸ அரசுகளுடன் கைகோர்த்துச் செயற்படவே இலங்கை அரசு இன்று முனைகிறது. அரசுக்கு எதிராகக் கருத்து வெளியிடுவதை, விமர்சிப்பதை, எழுதுவதை தடை செய்துவிடும் விதத்தில் செயற்படும் நாடுகளுடனேயே மஹிந்த இன்று கைகோர்த்துச் செயற்படுகிறார். அவை மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத நாடுகள் என்பது தெரிந்த விடயமே.

**அதிகரிக்கும் மனித உரிமை மீறல்கள்**

இன்றைய இலங்கை அரசு பதவி ஏற்ற நாள் முதல் மனித உரிமைகளுக்கு உரிய மதிப்பளிக்காத விதத்தில் சட்ட பூர்வமற்ற செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றனவே தவிர குறைவடைவதாகத் தோன்றவில்லை.

இந்த அரசின் கீழ் இதுவரை 22 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். அந்தக் கொலைகள் குறித்து இற்றைவரை எவ்வித விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை; குற்றவாளிகள் தண்டிக்கப்பட வும் இல்லை. பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோர் நியாயமற்ற வகையில் தாக்கப்பட்டு உயிரிழக்கும் பல சம்பவங்கள் குறித்த செய்திகள் அண்மைக் காலமாக பத்திரிகைகளில் வெளிவந்தவண்ணமுள்ளன.

கொழும்பு நகரில் ஆயிரக்கணக்கான சேரி வீடுகள் இடித்து அழிக்கப்பட்டதால் அங்கு வாழ்ந்த மக்கள் நடுத்தெருவுக்கு வந்துள்ளனர். அவர்களுக்கு உரிய மாற்றுவழி செய்துகொடுக்கப்படவில்லை. சகல தேர்தல்களின்போதும் அரச தரப்புக்குச் சாதகமான வகையில் விதி மீறல்கள் இடம்பெறுகின்றன.

இதனாலேயே சர்வதேச சமூகத்தின் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு என்பது அரசின் போர் நடவடிக்கை மீதான குற்றச்சாட்டு மட்டுமே அல்ல என்றும் அது புலம்பெயர் தரப்பினாலும் விடுதலைப் புலி ஆதரவாளர்களாலும் சுமத்தப்படும் குற்றச்சாட்டு மட்டுமே அல்ல என்பதையும் ஆரம்பத்தில் சுட்டிக்காட்ட நேர்ந்தது.

நாட்டின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் யார், எவர் என்றுகூடத் தெரிந்து கொள்ள இயலாதுள்ளது. சிலசமயம் வெளிநாடுகளில் நடக்கும் மாநாட்டுக்கு முன்னாள் சட்டமா அதிபர் இலங்கையின் பிரதிநிதியாகச் செல்கிறார். மற்றொரு சமயம் ஜனாதிபதியின் செயலாளர் வெளிவிவகார அமைச்சுடன் தொடர்புபட்ட விடயங்களில் அறிக்கை விடுகிறார். பிறிதொரு சமயம் சிரேஷ்ட அமைச்சர்கள் எனக் கூறப்படும் சிலர் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் கலந்துகொள்கின்றனர்.

வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அனுபவமும் திறமையும் மிக்க அதிகாரிகள் வெறுமனே கோவைகளைப் பார்வையிடுவதிலேயே தமது பொழுதைச் செலவிடுகையில், அரச தரப்பு அரசியல்வாதிகள் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை காரணம் காட்டி வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து வருகின்றனர். அதன் பின்னர்கூட மனித உரிமைகளை எவ்விதம் பேணிப் பாதுகாப்பது என்று தெரிந்து கொள்ளத்தானும் அவர்கள் அக்கறை காட்டவில்லை. அவர்களுக்குத் தேவைப்படுவது எல்லாம் வெளிநாடுகளுக்கு அரச செலவில் சுற்றுலாச் செல்வது, தமது வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வது என்பன மட்டுமே. இந்த வசதி வாய்ப்புக்கள் யாவும் பொதுமக்களின் வரிப்பணத்தின் மூலமே அவர்களுக்குக் கிடைக்கின்றது என்பதை அவர்கள் இன்னும் உணர வில்லை.

# மகிழ்ச்சிக்கு வழி



ஒருத்தர் மிகவும் கவலையோடு உட்கார்ந் திருந்தார் " ஏன் இப்படி கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்ட போது, "கவலைப் படாமல் இருப்பது எப்படி? என்று யோசித்துப் பார்த்தேன் ஒரு வழியும் தெரியவில்லை; அதுதான் கவலைப்பட் டுக் கொண்டிருக்கிறேன்" என்றார் கவலைப்படாமல் இருப்பதற்காக வழி தெரியாமலேயே கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்ற ரகம் இது.

எப்போதும் சந்தோசமாக இருக்க வேண்டும். என்பது பலபேரின் கவலை. பலபேருக்கு மட்டுமன்றி ஒரு பல்கலைக் கழகத்துக்கே இந்தக்கவலைவந்துவிட்டது. அதனால் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டது. எப்படித் தெரியுமா?

அந்தப்பல்கலைக்கழகத்தில் சமூகவியல்துறை ஒன்று இருந்தது. அது திட்டத்தைப் போட்டது. பல ஆயிரக்கணக்கான நபர்களைப் பேட்டி கண்டது. "எப்பவும் நான் சந்தோசமாக இருக்கிறேன் என்றனர் சிலர்; எப்போதும் நான் கவலையோடு தான் இருக்கிறேன் என்றனர் சிலர். இப்படி இரண்டு விதமாக சொல்பவர்களும் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் இந்த ஆராய்ச்சிக்கு உதவினார்கள். எல்லோரையும் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்து கடைசியிலே அவர்கள் தெரிவு செய்த முடிவு என்ன தெரியுமா?

எல்லோருமே மகிழ்ச்சியோடு இந்த உலகத்தில் இருக்க முடியும்; நிம்மதியாக இருக்க முடியும் இது சாத்தியமான விஷயம் என்று அந்தப் பல்கலைக்கழகம் தீர்மானம் செய்தது.

தீர்மானம் செய்ததோடு மட்டுமல்லாமல் உபயோகப்படும் விதத்தில் ஒன்பது விதமான யோசனைகளையும் சொல்லி இருக்கிறது. எல்லாம் அனுபவபூர்வமான அறிவுரைகள்.

முதல் விடயமாக; வெறுப்பு-சந்தேகம் இது இரண்டையும் முற்றாக ஒதுக்கி விட வேண்டும் ஏதாவது ஒரு குறையை மனதுக் குள் போட்டுக்கொண்டு அதையே பெரிதாக நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கக்கூடாது. மனதுடைய மகிழ்ச்சியில் 50 சதவீ தத்தைச் சாப்பிடுவது இதுதானாம் மேலும், நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் மட்டுமே சிந்திக்கவேண்டும். கடந்த காலத்து தவறுகள், தோல்விகளை மனதுக்குள் வைத்துக்கொள்ளக்கூடாது.

மாற்ற முடியாத நிலை- சூழ்நிலை இதை நினைத்து மனவேதனைப்பட்டு, சக்தியையும் நேரத்தையும் வீணாக்கக் கூடாது.

நாய்வாலை நிமிர்த்திப் பார்க்கவேண்டும் என்று முயற்சி எமக்கு எதற்கு. அது அப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே!

அடுத்தது என்ன் தெரியுமா? எல்லோருடைய வாழ்க்கையிலும் பல பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. அதையெல்லாம் சமாளித்துக்கொண்டு அந்தப் பிரச்சினையின் தோள் மேலேயே ஒரு கையைப்போட்டுக்கொண்டு போக நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

நிராசையினால் வாழ்வைப் பாழடித்துக்கொள்ளாது, ஆசைப்படுவது அத்தனையும் நடப்பதில்லை, எதிர்பார்ப்பது அத்தனையும் நிறைவேறுவதும் இல்லை.

அடுத்து உணர்ச்சிவசப்பட்ட நிலையிலே உள்ளூர குமுறிக்கொண்டு தனியாக இருக்கக் கூடாது. அதுமாதிரி நேரத்தில் நம்பகமான நண்பர்கள்; இல்லையென்றால் உறவினர்களைத் தேடிக்கொண்டு போகவேண்டும் அவர்களோடு பேசிக்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி தாழ்வு மனப்பான்மை, தற்பெருமை இவை இரண்டும் மன அமைதியைக் கெடுக்கும். தான் சொல்வதுதான் சரி என்று நியாயப்படுத்துகின்ற குணத்தை விட்டுவிட வேண்டும்.

மனித பண்புகள், ஈவு இரக்கம், தன்மானம் நன்றி, விசவாசம் இதையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும். அதுமட்டுமல்ல தங்களுக்கு ஆத்ம திருப்தியளிக்கக்கூடிய செயல் எதுவோ அதில் ஈடுபடவேண்டும்

ஓர் அலுவலகத்தில் வேலைசெய்தால் கூட அலுவலகக் கடமைகள், ஆத்ம திருப்திக்கான கடமைகள் இரண்டையும் ஒழுங்காகச் செய்பவன் என்றைக்கும் சந்தோசமாக இருப்பான்.


தனக்காக எதையும் அதிகமாக எதிர்பார்க்கக்கூடாது என்னால் எவ்வளவு முடியும் என்று நினைத்துக் கொண்டிருப்பதற்கும் என்னால் நியமாக செய்ய முடியாதது எவ்வளவு என்பதற்கும் இடைவெளி அதிகமாக இருந்தால் மகிழ்சி குறையும். எம்மால் எது முடியுமோ அதற்குத் தகுந்த மாதிரி இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும்.

சொந்தக்காரியங்களைக் கவனிக்கும் அதேநேரத்தில் வேறு சில நல்ல காரியங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். தன்னலவாதி எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதில்லை. உயர்ந்த பொதுநல நோக்கமும் நல்ல பழக்க வழக்கங்களும் உள்ளவர்கள் எப்போதும் சந்தோசமாகவே இருக்கிறார்கள்.

இவை அனுபவபூர்வமான உண்மை. இதெல்லாம் நடைமுறைக்கு சரியாக வருமா என்று யோசிக்க வேண்டாம். முடிந்த அளவுக்கு சந்தோசமாக இருக்க முயற்சி செய்யுங்கள்.

கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு கன்னாதிட்டி காளி கோயிலடியில் யாழ்.பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பு.ஆறுமுகதாசன் தலைமையில் சிரமதானப் பணிகள் இடம்பெறுகின்றன. (ம-7)

# பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் தொண்டு நிறுவனம் முன்வருவது பாராட்டுக்குரியது

## கிளிநொச்சி சமூக சேவைகள் அதிகாரி

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் தொண்டு நிறுவனங்கள் முன்வருவது பாராட்டுவதற்குரியது. சமூகத்தில் நலிவுற்ற மக்களுக்கு இதுபோன்ற உதவிகளைச் செய்ய யாவரும் முன்வரல் வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி த. கிருபாகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மகளிர் அபிவிருத்தி அமைப்பு அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உருவாக்கப்பட்டபோது தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் ஐக்கிய நாடுகள் அபி விருத்தித்திட்டம் கைகொடுக்க முன்வந்துள்ளது.

சமூகத்தில் நலிவுற்ற மக்கள் பிரிவினருக்கு இது போன்ற உதவிகளைச் செய்ய யாவரும் முன்வரல் வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெண்கள் தலைமை தாங்கும் குடும்ப உறுப்பினர்கள் இருநூறுபேர் இன்று இங்கு கூடியுள்ளது எமக்கு உற்சாகத்தைத் தருகிறது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் இந்த எண்ணக் கருவுக்கு இந்த மாவட்டத்தின் அரச அதிபர் நிறைவான ஒத்துழைப்பைத் தருகின்றார்.

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகளும் இந்த வேலைத் திட்டத்துக்கு பரிபூரண ஆதரவு வழங்குகின்றனர்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இந்த வாழ்வாதார வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வந்துள்ளனர்.

யுத்தம் முடிவுற்ற சூழ் நிலையில் வறுமையை விரட்டியடிக்கும் வேலைத் திட்டத்தை நாம் இன்று கூட்டாக முன்னெடுத்து வருகின்றோம்.

வாழ்வாதாரம் தொடர்பாகச் சரியான வலையமைப்பு இன்று உருவாக்கப்பட்டு உள்ளது. மக்கள் பங்கேற்புடன் உருவாக்கப்படும் வாழ்வாதாரத் திட்டங்களே நின்று நிலைக்கும்.

அதற்கேற்ப சூழ்நிலை இன்று உருவாக்கப்பட்டுள்ளது. வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் தமது சூழல், திறமைக்கேற்ப சுயதொழில்களை தெரிவு செய்யக்கூடிய நிலை இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சிறுகுழுக்களாக சுழற்சி அடிப்படையிலான கடன் திட்டங்களுக்குரிய நிதியை இந்த அமைப்புக்கு வழங்க ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் முன்வந்துள்ளது.

இந்த மாவட்டத்தில் 4116 பேர் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

இப்போது நடைமுறைப் படுத்தப்படும் வாழ்வாதாரத் திட்டத்தை வெற்றிகரமாக நீங்கள் செய்யும்போது தான் ஏனைய சர்வதேச உள்ளூர் தொண்டு நிறுவனங்களும் உதவிகளை வழங்க முன்வரும்.

பெண்களின் குடும்ப வறுமை ஒழிக்கப்பட்டாலே ஆரோக்கியமான சிறுவர் எதிர்காலம் கட்டியெழுப்பப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச மக்களும் பயன்பெறக்கூடிய இந்தத் திட்டத்தின் பங்காளிகளாக இணைய முன்வந்த யாவரும் பாராட்டுக்குரியவர்கள்- என்றார். ( எ-121)

# கிராமங்களின் உயிர்நாடி முன்பள்ளிகள் இவை சிறந்த நிறுவனமாக்கப்பட வேண்டும்

## வடக்கு முன்பள்ளிக் கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம், ஒக்.14

கிராமங்களின் உயிர் நாடியாக விளங்கும் முன்பள்ளிகளை சிறந்த கல்வி நிறுவனமாக்க அவைரும் முன்வர வேண்டும்.

முன்பள்ளிச் சிறார்களின் எதிர்கால வாழ்க்கை முறை தான் கிராமத்தை முன்னேற்றுமளவிற்கு மாறிவிட்டடது.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண முன்பள்ளிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்மையா.

திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியின் நவாரத்திரிவிழா அண்மையில் முன்பள்ளிப் பணிப்பாளர் தனபாலன் தலைமையில் இடம்பெற்றது

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

கல்வித்துறையில் மிகவும் முக்கியமானது. முன்பள்ளி ஆகும். இதனை முன்னிலைப் படுத்தி முன்பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டும்.

இதற்கான புதிய திட்டங்களை முன்பள்ளிகளில் நடைமுறைப்படுத்தி சிறார்கள் கல்வியில் அக்கறை செலுத்த வழிகாட்ட வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் முன்பள்ளிகளை கல்வி அமைச்சின் வழிகாட்டலிலும் சிறுவர் செயலக உதவியுடனும் முகாமைத்துவ செயற்றிட்டம் ஒன்றின் கீழ் ஒழுங்கமைத்து ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளையும் வழங்கி வருகின்றோம்.

இந்தச் செயற்றிட்டத்தை தொடர்ந்து நடைமுறைப் படுத்த சமூகம் சார்ந்தோர்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கு முன்பள்ளிக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

சமூகம் சார்ந்தவர்களும், பொது நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்கி துறையை மேலும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமன்றி சிறார்களின் திறன்களை வெளிப் படுத்தக்கூடிய பல்வேறு கலை நிகழ்வுகளையும், பயிற்சிகளையும் முன்பள்ளிகள் கற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார். (ம-313)

# விரைவு கணித கணித்தல் திறன் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, ஒக்.14

மருதங்கேணி கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கோட்ட மட்ட விரைவு கணித கணித்தல் திறன் விருத்திப் போட்டி முடிவுகளை வடமராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்விப் பிரிவு அறிவித்துள்ளது. முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரங்கள் வருமாறு:

தரம் 2 - தஸ்மியா (செம்பியன் பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), பா.பாலோஜன் (ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை), ந.அபிதா (ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை), அ.சங்கீதா (உடுத்துறை மகா வித்தி), செ.சந்திரசேகர் (ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை),

தரம் 3 - ச.சகிலா (ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை) சி.சஜிந்தா (ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை), கா.யாழினி (ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை) ஜெ.வினோஜன் (குடத்தனை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை), ர.லதுர்ஷனா (அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை).

தரம் 4- சி.அபிசாயினி (ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை), ச.குபேரன் (ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை), தி.ரஜீவன் (அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன்பாடசாலை), ஜெ.ஜெமில்சன் (மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), டே.பெனதெந்தோ (மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை).

தரம் 5- யோ. லக்ஷினி (குடத்தனை அரசினர் தமிழ் கலவன்பாடசாலை), சி.கிருசாங்கா (ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை), அ.அருண்குமார் (உடுத்துறை மகா வித்தியாலயம்), ஜெ.சஜீவன் (குடத்தனை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை), பா.தமிழினி (உடுத்துறை மகா வித்தியாலயம்). (ம-190)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக்.14

முல்லைத்தீவு மாவட்ட பொதுச் சபை அங்கத்தவர்களுக்கான கூட்டம் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வட பிராந்தியத் தலைவர் கணேசன் கம்ஸநாதன் தலைமையில் கடந்த 22 ஆம் திகதி நடை பெற்றது.

இக்கூட்டத்துக்கு மட்டக் களப்பில் இருந்து சங்கத்தின் தலைவர் அ.தினேஸ்குமார் உட்பட உபசெயலாளர் என்.ஜீவரட்ணம், கிழக்கு பிராந்திய செயற்குழுவின் பொருளாளர் எஸ். சுதாகருடன் பலர் கலந்து கொண்டனர்.

புதியதாக செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களின் விவரம் வருமாறு:

**நீர்ப்பாசனத் திணைக்களம்**- தலைவர் சி.பிரதீபன், செயற்குழு உறுப்பினர்கள் தெ.பிரதாபன், பா. சிறிரமணன்.

**சுகாதாரத் திணைக்களம்**- உபதலைவர் சி.ஆனந்தலிங்கம், செயலாளர் கி.பிருந்தாவன், உப செயலாளர் ப.யோகரட்ணம், பொருளாளர் திருமதி ச.விமலினி, இணைப்பாளர் கு.சுதர்சன் செயற்குழு உறுப்பினர்களான த.மதிகரன், திருமதி சி.சசிகலா, திருமதி உ.அன்பரசி, திருமதி ரஞ்சித்மலர்.

**கால் நடை சுகாதாரம்**- செயற்குழு உறுப்பினர்களான, இ.சிவனேந்திரன், ஜோன்சன் ஆகும். (எ-313)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.14

வட்டுக்கோட்டை, மூளாய் ஐக்கிய நாணயசங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் பொதுக் கூட்டம் அண்மையில் சமாசத் தலைவர் செ.ரகுநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் -க.ராதாகிருஷ்ணன், உபதலைவர்- கு.கருணாநிதி, செயலாளர் -ப.அருள்ராசன், உபசெயலாளர் க.தேவராசா, பொருளாளர் வே.சுப்பிரமணியம், நிர்வாக உறுப்பினர்கள் இ.சுமதி, திருமதி செ.மாணிக்கவாசகர். (ம)

# வாய்ப்பாட்டு மனனப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.14

ஊர்காவற்றுறைக் கோட்ட மட்டத்தில் தரம் 3,4,5 ஆம் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வாய்ப்பாட்டு மனனப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வெளியாகியுள்ளது.

தரம் 3 - டெ.சுஜீபன் (நாரந்தனை றோ.க.வித்தியாலயம்), இ.டோவினா (புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்).

தரம் 4- அ.தாரணி (புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்), அ.அனுசிகா (எழுவை தீவு றோ.க.வித்தியாலயம்). .

தரம் 5 - யோ.மெ.ஸ்ரெலா (புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்), பா.ரனுஷன் (அனலை தீவு வடலூர் அ.த.க. பாடசாலை). (ம-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன செய்யப் போறீங்கள் உங்களை நம்பிய மக்களுக்கு

மக்களின் வாக்குகளால் பிரதேச சபைத் தலைவர் பதவிக்கு வந்தவர்கள் தாங்கள் தலைவர் பதவியை ஏற்றவுடன் ஓட்டுப் போட்ட மக்களுக்கு என்ன செய்யப் போகின்றார்கள் என்பதையே மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிரதேச சபைத் தலைவர் பதவியை ஏற்றதும், ஏன் தாம் இந்தப் பதவியை ஏற்றுக் கொண்டோம் என்பது கூட தெரியாமல் உள்ளவர்களும் உள்ளனர். மக்கள் ஓட்டுப் போட்டு, ஓட்டுப் போட்டு புதிதாக வரும் ஒவ்வொருவரையும் நம்பி நம்பி ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். தமது உறுப்பினர்களுக்கே தெரியாத செயற்பாடுகளில் சில பிரதேச சபைத் தலைவர்கள் ஈடுபடுகிறார்கள் என்று சக உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏன் இப்படிப் பிரதேசசபைத் தலைவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்பது தெரியாமல் உறுப்பினர்கள் குழம்பிப் போய் உள்ளார்கள். குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானம்தான் செயற்பாடுகளுக்குள் அடங்க வேண்டும். தன்னிச்சையாக, தான் தலைவர் தானே எந்த முடிவையும் எடுத்துக் கொள்ளலாம் என நினைத்துக் கொண்டு பல செயற்பாடுகளில் இறங்கக் கூடாது. அப்படி இறங்கினால் பல செயற்திட்டங்கள் பாதியிலேயே நின்று மக்களுக்கு பயன் இல்லாமல் போய்விடும் என்பது உண்மை. சக உறுப்பினர்களின் சொல்லைக் கேட்காமல் தன்னிச்சையாக முடிவை எடுக்கும் பிரதேசசபைத் தலைவர்கள் எப்படி மக்களின் குறைகளை காதில் வாங்கிக் கொள்வார்கள்.

வலிகாமம் பகுதி ஒன்றின் பிரதேச சபைத் தலைவர், செயலருடன் சேர்ந்து அலுவலகத்தில் நடக்கும் எந்த விடயமானாலும் வெளியே தெரியாமல் அதாவது மக்களுக்குத் தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அப்பிரதேசசபை உறுப்பினர்களுக்கும் அலுவலர்களுக்கும் கட்டாய தொனியில் தெரிவித்துள்ளார்.

பிரதேசசபையில் இடம்பெறும் நடவடிக்கைகள் மக்களுக்குத் தெரியக் கூடாது என்றும் எந்த நடவடிக்கை ஆனாலும் இரகசியமாகப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லும் பிரதேச சபைத் தலைவர், செயலர்கள் அப்படி என்னத்தை மறைக்கவுள்ளனர்? மக்களுக்குத் தெரியக் கூடாது என்று இரகசியம் பேணப்படும் செயற்பாடுகள் எப்படி மக்களுக்கு உதவப் போகின்றன? அப்படிப்பட்ட செயற்பாடுகளில் ஏதோ ஒரு கள்ளத்தனம் இருப்பதாக நினைக்கத் தோன்றுமே ஒழிய கண்டிப்பாக ஒரு துளியளவும் கூட நேர்மை இருக்கும் என்று நினைக்க முடியாது.

'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற மாதிரி எல்லோரும் ஒரே மாதிரித் தான் செயற்படுகின்றார்கள்.

கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை வலிகாமம் பகுதியில் உள்ள ஒரு பிரதேச சபைக்குச் சென்றிருந்தேன். அங்கே ஒரு சில பிரதேசசபை உறுப்பினர்கள் நின்றிருந்தனர். அவர்கள் கையில் ஏதோ ஒரு போமை கட்டுக் கட்டாக வைத்திருந்தனர். என்ன அந்த போம் என்ன என்று அறிவதற்காக அவர்கள் பக்கம் சென்று ''என்ன இந்த போம்'' என்று கேட்க, அவர்களோ ''தேர்தல் வாக்காளர்போம்'' என்று சொல்லிவிட்டு தவறவிட்ட வாக்காளரின் விவரங்களைப் பதிவதற்காகக் கொண்டு செல்கிறோம் என்றார்கள். அதில் ஒருவர் எனது பக்கம் நெருங்கி வந்து ''வேறு என்னத்தை செய்ய முடியும்'' என்றார். ''ஏன் அண்ணை இப்படிச் சொல்லுறியள்'' என்று கேட்க அவரோ ''இல்ல நாங்கள் உறுப்பினர்களாக இருக்கிறோம். எங்கட சொல்லை யார் தான் கேட்கினம். தலைவர் சொல்லுகிற சொல்லை நாங்கள் கேட்கணும் நாங்கள் சொல்லுகிற சொல்லை தலைவரும் கேட்க வேண்டும். இந்தப் பிரதேசசபையின் செயலரினதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரினதும் சொல்லைக் கேட்டுக் கொண்டு செயற்பாடுகளில் தலைவர் இறங்கி இருக்கிறார். பிறகு எப்படி எங்கட சொல்லையும் மக்களின் சொல்லையும் கேட்கப் போகிறார்?'' -என்றார்.

ஏற்கனவே இந்தப் பிரதேசசபையின் செயற்பாடுகளில் பூரண திருப்தி இல்லாமல் மக்கள் உள்ளனர். இதற்கிடையில் தலைவரும் இப்படியாகி விட்டால் பிறகு என்னத்தை செய்ய முடியும்? மக்களின் தேவைகளை எள்ளளவும் கவனத்தில் கொள்வதில்லை. வீதிகளுக்கு மின்குமிழ் பொருத்துமாறு பிரதேச சபைகளுக்கு மின்குமிழ்களையே அரசு வழங்கி இருந்தது. அந்த மின்குமிழ்களையே ஒழுங்காக வீதிகளில் பொருத்த முடியாமல் உள்ளனர் என்றால் பாருங்களேன்.

வீதிகளுக்கு வெளிச்சம் கொடுக்கும் வேலைத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மின்குமிழ்களுக்கு இந்த நிலை என்றால் பெரிய அளவிலான வேலைத்திட்டங்களை இவர்களால் எப்படி நிறைவேற்ற முடியும்? என்பது இவர்கள் பதவியில் இருக்கும் காலப்பகுதியில் நடக்காத காரியமாக இருக்கப் போகிறது. அடுத்த கட்ட நடவடிக்கையாக டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் இறங்கி இருக்கினம் பாருங்கோ. ஒரு பிரதேசசபை குப்பைகள் நிறைந்த ஒரு குளத்தை மேலாலை துடைச்சுப் போட்டு நாரி பிடிக்க நிற்பது போல் படம் எடுத்திருக்கினம். இதேபோலத்தான் வேறசில இடங்களிலும் இதே மாதிரியான அரைகுறை வேலைத்திட்டங்கள் நடக்குது.

முழுமையான டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப் படவில்லை. இன்னும் சில பிரதேசங்களில் வீட்டின் படலைகளின் முன்னால் உரப்பையில் கழிவுப் பொருள்களை நிரப்பி வைத்திருக்குது சனம்.

''ஒரு பிரதேசசபையின் தலைவர்

## கோப்பாய் சண்முகம்

### கதையோடு செய்தி

கிராமசேவகராக இருந்த காலப் பகுதியில் யாழ். அரச அதிபர் கணேஷால் பணி நீக்கம் செய்யப்பட் டார் என்பது அப்பகுதி மக்களுக்கு நன்கு தெரியும் பாருங்கோ. எங்களுக்கு வந்து வாய்க்குதுகள் பாருங்கோ!'' என்றார். அந்தப் பிரதேச சபை உறுப்பினர்.

ஒரு பிரதேச சபையால் சந்தைப் பகுதி நாறுகிறது. அப்பகுதி மக்கள் இது தொடர்பாக அடிக்கடி பிரதேசசபைக்கு தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அடிக்கடி அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். அதற்கு பிரதேச சபை தலைவர், செயலாளரால் ஒழுங்கான பதிலை சொல்ல முடியாமல் இருக்குது. தமது கடமைகளையே தட்டிக் கழித்துக் கொண்டு உயர் பதவி கதிரையில் இருந்து என்ன பயன்?

வாகனம் தந்தால்தான் மக்களின் வேலைத்திட்டங்களில் இறங்குவேன் என்று காத்திருப்பதில் அர்த்தம் இல்லை. பிறகு என்ன பிரதேசசபைக்கு நான் வந்த விடயம் நடக்காது என்ற காரணத்தால் அந்த விடயத்தை வாசலிலே போட்டு விட்டு வந்து விட்டேன். ✱


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு:
04.10.1930

உதிர்வு:
14.09.2011

*அப்பா என்று உறவாட யாரும் - இல்லையே*
*அன்புமொழிபேசிவிட நீயும் - இல்லையே*
*ஆயிரம் சொந்தங்கள் வந்து நின்றாலும்*
*அன்பான எம் அப்பாவுக்கு நிகராகுமோ?*

## அமரர்
## வல்லிபுரம் கந்தையா



கடந்த (14.09.2011) புதன்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் வல்லிபுரம் கந்தையா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
இன்று (14.10.2011) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இதனைத் தனிப்பட்ட அழைப்பாக எமது உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*74/1, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம். 021 222 2074*

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவளவிழா வாழ்த்து



மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் ஸ்தாபகர்,
புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் ஸ்தாபகர்,
சமூக முன்னேற்ற கழகங்களின் சமாசத்தின் ஸ்தாபகர்,
பொல்கொல கூட்டுறவு கல்லூரியின் முன்னாள்
விரிவுரையாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்,
வீடமைப்பு அதிகார சபையின் முன்னாள் கணக்காளர்

**உயர்திரு. இ.மு. நாகலிங்கம் அவர்கள்**

அன்புமை இன்சொல் இன்முகம் கொண்டவர்
ஆரும் நல்லவர் என்றே போற்றும் பெரியார்
பண்புடன் வாழ்பவர் கல்வித்துறையில்
கூட்டுறவுக் கல்வி விரிவுரையாளராய்
பல்லாண்டுகள் நற்பணியாற்றி
பல மாணவ சமூகத்தினை உருவாக்கியவர்
சமூகப்பணியும், சமயப்பணியும் பண்புடன் ஆற்றியவர்
விருப்புடன் பணிபுரியும் நற்குணம் வாய்ந்தவர்
பவள விழாவைக் காணும் இவ்வறிஞர்
மேலும் மக்கள் சேவைக்காய் பணிபுரிந்து
பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுவோம்.

**வாழ்த்துவோர்:**
மாவைபாரதி மறுமலர்ச்சி மன்றம்,
மாவைபாரதி சனசமூக நிலையம்,
மாவைசித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை,
மாவை அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபை,
மாவை மாணவர் மன்றம், மாவிட்டபுரம்.

# தவறவிடப்பட்ட விடுகைப் பத்திர பிரதியை மீளவழங்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.14

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கல்வி கற்று விடுகைப் பத்திரத்தை தவறவிட்ட மாணவர்களுக்கு மீள விடுகைப் பத்திரத்தின் பிரதி வழங்குமாறு மாகாண கல்விப் பணிப்பாளர் அந்தந்தக் கல்விப் பணிப்பாளர் ஊடாக சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

விடுகைப் பத்திரத்தைக்கோரி பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்கு அதனை வழங்குவதற்குரிய முறைமையின் பிரகாரம் மீள் விடுகைப்பத்திரம் வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம- 207)

## யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை

கந்தரோடை, சுன்னாகம்
நிறுவுநர் நினைவு நாளும்
முதலாவது பரிசளிப்பு விழாவும் - 2011

காலம்: 14.10.2011 (வெள்ளிக்கிழமை) நேரம்: பி.ப. ஒரு மணி
இடம்: ஒறேற்றர் மண்டபம்
தலைவர்: திரு. வ.நந்தீஸ்வரன் (அதிபர்)
ஆசியுரை: கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர்)
பிரதம விருந்தினர்: திரு.S.A.ஆறுமுகன் (ஸ்கந்தவரோதயன்) முகாமையாளர் H.N.B., யாழ்ப்பாணக் கிளை)
கௌரவ விருந்தினர்: திரு. செ.குபேரநாதன் (S.L.E.A.S) (கோட்டக்கல்விப் பணிப்பாளர்)
நினைவுப்பேருரை: திரு. மு.சதானந்தன் (ஸ்கந்தவரோதயன்) (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, லேக்கவுஸ் கிளை)
பரிசில் வழங்கல்: திருமதி. சாந்தி ஆறுமுகன்
நன்றியுரை: செல்வி வை.சாவித்திரி (உப அதிபர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம், கந்தரோடை, சுன்னாகம்.

## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011
சித்தியடைந்த மாணவர்களுக்கான

### பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு **16.10.2011 ஞாயிற்றுக்கிழமை** பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள **சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்)** நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இயக்குநர்.**

# கிரகதோஷ மஹாயாகம்

கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் புரட்டாதி கடைசி சனிக்கிழமையை முன்னிட்டு அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம் நடத்தும் சனீஸ்வர கிரக தோஷ மஹாயாகம் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

சர்வமத இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்சிவ சிவாச்சாரியார் தலைமையில் இந்த மஹாயாகம் நடைபெறும். (ம-313)

# மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டது

தென்மராட்சி, ஒக்.14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இன்று நடத்தப்படவிருந்த மெய்வன்மைப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன் கிழமை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ம-207)

## ஆண்டு மூன்று ஆகியும் ஆறாத நினைவுகளுடன்...



அமரர்
**கந்தையா சந்திரசேகரா**
(ஓய்வுபெற்ற அதிபர், யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
திதி: திருதியை 14.10.2011

மலர்வு:
1940.06.29

உதிர்வு:
2008.09.17

ஆண்டு மூன்று ஆனதப்பா
ஆறவில்லை எம் துயரம்
எத்தனை வருடம் சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன்
வாழ்ந்திடும்

அல்லாரை தெற்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்

## தவறிவிட்டது

கனகரட்ணம் வாஸ்கரன் என்பவரது தே.அ. அ.இல 873040629 V, சாரதி அனுமதிப்பத்திரம், ATM காட் ஆகியன 8.10.2011 அன்று பரந்தனுக்கும் விசுவமடுவுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0776315345 எனும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

## வீட்டுப் பணிப்பெண் தேவை

இருவர் மட்டும் கொண்ட அரச உத்தியோகத்தர் குடும்பத்துக்கு வீட்டில் தங்கியிருந்து 7 வயதுச் சிறுமியைப் பராமரிப்பதற்கும் வீட்டுவேலைகள் செய்வதற்கும் நற்பண்புள்ள பெண் உதவியாளர் தேவை. வேலை மிகவும் குறைவு, தகுந்த சம்பளம், உணவு, உடை, தங்குமிடம் வழங்கப்படும். உடன் தொடர்புகொள்ளவும். 077 7062493

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிரதான வீதி, உயர்நீதிமன்றம், சுப்பிரமணியம் பூங்கா என்பவற்றுக்கு மிகவும் அண்மையில் இரண்டாம் குறுக்குத் தெருவில் 3 பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணறு, சுற்று மதில் என்பவற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6079352
021 3001585

## கணினி

HP BRAND NEW
COMPLETE SET FOR SALE
CONTACT TELE:
077 7162428

## காணிகள் விற்பனைக்கு

நாவற்குழி, கேரதீவு வீதியில் 5 கிலோ மீற்றர் தூரத்தில் வீதியோரமாக 5 பரப்பு 14½ குழியுடையதும் 4 பரப்புமுடையதுமான இருகாணிகள் கைதடி நாவற்குழியில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்:
T.P:0213207145
தரகர் தேவையில்லை. 0777651586

## தசாஹ கிருஹயக்ஞ அழைப்பு

கடந்த 05.10.2011 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தைச் சேர்ந்த

அமரர் **பிரம்மஸ்ரீ சபாரட்ண குருக்கள் சுப்பிரமணியசர்மா**
(ஓய்வு பெற்ற உப தபாலதிபர், கீரிமலை)

அவர்களின் ஆத்மசாந்தி கிரியைகள் பின்வரும் நாள்களில் நடைபெறவுள்ளன.

| | |
|---|---|
| இன்று 14.10.2011 வெள்ளிக்கிழமை | தசாகம் முற்பகல் 10 மணி |
| நாளை 15.10.2011 சனிக்கிழமை | ஏகோதிஷ்டம்/ மாசியம் |
| 16.10.2011 ஞாயிற்றுக்கிழமை | சபிண்டீகரணம் |
| 17.10.2011 திங்கட்கிழமை | கிருஹயக்ஞம்/சமாராதனை ( மதியபோசனம்) |

இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

"ஸ்ரீலக்ஷ்மி வாசா",
பருத்தித்துறை பிரதான வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

★ கால அவகாசம் இன்மையால் அன்பர்கள் இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுக நாவலர் காட்டிய வழியில் தோன்றிய சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலை



''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' என்பதற்கிணங்க ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காட்டிய வழியில் யாழ். மாவட்டத்தில் அதிகமான பிரதேசங்களில் நாவலர் பாடசாலைகள் தோற்றம் பெற்றுள்ளன.

இவ்வாறு தோற்றம் பெற்றதே சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலை.

யாழ். மாவட்டத்தின் வலிகாமம் பிரதேசத்தில் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுதுமலை வடக்குக் கிராம அலுவலர் பிரிவில் ஈஞ்சடி கிராமத்தில் இந்த நாவலர் பாலர் பாடசாலை அமைந்துள்ளது.

தெய்வீகச் சிந்தனையும் தமிழ் மனமும் ஒன்று சூழ்ந்த ஈஞ்சடி வைரவர் ஆலயச் சூழலில் அமையப்பெற்றுள்ளது இந்தப் பாடசாலை.

ஈஞ்சடி வைரவர் ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் உள்ள தனது வீட்டில் ஆசிரியர் திருமதி பத்மா அம்பலவாணர் 20 பிள்ளைகளுக்கு கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்.

அதனைத் தொடர்ந்து திருமதி கு.சந்திரா கிருஷ்ணபிள்ளையும், திருமதி அழகேஸ்வரி நவரட்ணமும் முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

திருமதி அழகேஸ்வரி நவரட்ணம் ஆசிரியராகக் கடமையாற்றியபோது தனது வீட்டிலேயே கற்றலுக்கான ஓர் இடத்தை ஒதுக்கி ''லீலா முன்பள்ளி'' எனும் பெயருடன் முன்பள்ளியை நடத்தி வந்தார்.

முன்பள்ளி பயிற்சியில் சிறந்த தேர்ச்சி பெற்ற ஆசிரியராக திருமதி அழகேஸ்வரி நவரட்ணம் விளங்கியதால் பாடசாலை மேலும் வளர்ச்சியடைவதற்கு அது பேருதவியாக அமைந்தது. விளையாட்டுப் போட்டிகளிலும், கலை விழாக்களிலும் மாணவர்கள் முன்னணியில் விளங்கிய தால் மானிப்பாய் பிரதேச சபையின் கல்வித் திணைக்களத்தில் ''லீலா முன்பள்ளி'' உத்தியோக பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டது.

லீலா முன்பள்ளியின் கற்றல் செயற்பாடுகள் மேலும் விரிவடைய 2000 ஆம் ஆண்டு ஈஞ்சடி நாவலர் சனசமூக நிலையம் பாடசாலையைப் பொறுப் பேற்றுக்கொண்டது.

நாவலர் சனசமூக நிலையம் பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டதையடுத்து முன்பள்ளி மேலும் வளர்ச்சியடையத் தொடங்கியது.

சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற இட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

எனினும் மாணவர்களின் தொகை அதிகரிக்க பாடசாலைக்கென புதிய நிர்வாகக் கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது.

2003 ஆம் ஆண்டு நாவலர் பாடசாலை எனும் பெயருடன் புதிய நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி நிர்வாக சபை உருவாக்கப்பட்டபோது நிர்வாக சபையின் தலைவராக இ.பேரின்பநாயகமும், உபதலைவராக திருமதி பத்மாவதி அருமைத்துரையும் செயலாளராக க.ஸ்ரீநந்தகோபனும், உபசெயலாளராக திருமதி பா. சிவலிங்கமும், பொருளாளராக சி.இராசரத்தினமும், உறுப்பினர்களாக திருமதி ச.லிங்கசீலனும், திருமதி அ.நவரட்ணமும், கணக்காய்வாளர்களாக ச.தம்பித்துரையும், சொ.ஜெயவீரசிங்கமும் கடமையாற்றினர்.

நிர்வாக சபையின் திட்டத்துக்கு அமைவாக ஈஞ்சடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பொதுச்சபையுடன் ஒன்று கூடி புதிய கட்டடம் அமைக்கப்பட்டு 2004ஆம் ஆண்டு பாடசாலையின் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

**சோபனா**

அத்துடன் பாடசாலைக்கென விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டு பிரமிட், சறுக்குதளம், நிறுத்தாடு பலகை, சுழல் சக்கரம், ஊஞ்சல் என்பவற்றுடன் கொண்ட நாவலர் சிறுவர் பூங்கா உருவாக்கம் பெற்றது.

ஈஞ்சடி கிராமத்தைச் சேர்ந்த முன்பள்ளி மாணவர்கள் மட்டுமல்லாது சுதுமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த அதிகமான மாணவர்கள் தமது ஆரம்பக் கல்வியை ஈஞ்சடி நாவலர் பாடசாலையில் கற்று வெளியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈஞ்சடி பிரதேசத்தில் கடந்த 32 வருடங்களாக முன்பள்ளி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் அளப்பரிய சேவையை இந்தப் பாடசாலை வழங்கி வருகிறது.

(தொடரும்)

# ஈராண்டு நினைவலைகள்...

தோற்றம்:
19.02.1940

மறைவு:
14.10.2009





*இரண்டு ஆண்டுகள் இன்றோடு*
*கடந்து போனதம்மா- ஆனால்*
*இன்னும் உங்கள் நினைவோடு*
*ஒளியின்றித் தவிக்கின்றோம் அம்மா*
*துடிக்கும் எங்களுக்கு ஆறுதல் கூற*
*ஒருமுறை வாம்மா உன்னைக்காண*

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

பிரபாகரன்
மகன் - லண்டன்

## தியாகராஜா செல்வரெத்தினம்
## (இராசம்மா)

(முன்னாள் பிரபா ஸ்[illegible] மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பை அரசியல் வேறுபாடுகளிலிருந்து மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு

## மிலிந்த மொறகொட தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.14

கொழும்பு மாநகரை இன, மத, அரசியல் வேறுபாடுகளில் இருந்து மீட்கவேண்டிய பொறுப்பு எமக்குண்டு என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதல்வர் வேட்பாளராகப் போட்டியிட்ட மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

என்மீது நீங்கள் மாறா நம்பிக்கை வைத்துள்ளீர்கள். அதற்காக தங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எமது எதிர்பார்ப்பு குடிகொண்டிருக்கும் இடத்தை ஒருவாறு எம்மால் எட்டமுடியாதிருக்கலாம். எனினும், எமது சமூக, அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க எம்மால் வேறு வழியைக் கையாள முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

எமது மாநகரம் எதிர் நோக்கும் சவால்கள், பாரதூரமான விவகாரங்கள் ஆகியவை குறித்து நாம் விழிப்பாக இருப்போம். இவற்றிலிருந்து விமோசனம் கிட்ட எமது திறமைகளைத் தக்க வகையில் நாம் பயன்படுத்த முனைவோம்.

அரசியல் முன்னெடுப்புகளில் எமது சமூகத்தில் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த குடிமக்கள் பங்கு வகிக்கவேண்டும்.

இணைப்புப் பாலங்களைக் கட்டியெழுப்புவது ஓர் இலகுவான விடயமல்ல. இதற்குக் காலமெடுக்கும். கொழும்பு வாழ் மக்கள் எமக்கு அளித்துள்ள ஆணை பூரணத்துவம் வாய்ந்தது அல்ல. கொள்கைகளைப் பொறுத்தமட்டில், எம்மை முன்னோக்கி நகர்த்துவதற்கான உடன்பாட்டு உந்துதலை அது காட்டவில்லை.

இது எமது நகருக்கும் புறநகர்ப்புறங்களுக்கும் இடையிலான மாறுபாடான நிலைப்பாடுகளையே பிரதிபலிக்கிறது. அதேவேளை, மாறுபாடான குழுக்களுக்கிடையே குடிகொண்டிருக்கும் போதிய நம்பிக்கையின்மையையும் இது காட்டுகிறது. இது குறித்து நான் அவ்வப்போது பேசியுமுள்ளேன்.

அதேவேளை, சமூகங்களுக்கிடையே உறவுப்பாலத்தைக் கட்டியெழுப்பும் பணியை நான் தொடர்வேன். அத்துடன், எமது அரசியல் கலாசாரத்தில் சாதகமான மாற்றத்தைக் கொண்டு வருவதற்காகவும் செயல்படுவேன் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-சி)



தேசிய சுகாதார வாரத்தினை முன்னிட்டு 512 கஜபாகு இராணுவ பிரிவுகளும், சென்.ஜோண்ஸ் கல்லூரி மாணவர்களும் இணைந்து கடந்த திங்கட்கிழமை சென்.ஜோண்ஸ் கல்லூரியிலும், அதன் சுற்றுப் புறத்திலும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (23)

# சென்னை விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டார் இம்மானுவேல் அடிகளார்

கொழும்பு,ஒக்.14

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட் கலாநிதி எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் சென்னை விமான நிலையத்திலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட் கலாநிதி எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகள் சென்னைப் பல்கலைக்கழகம், ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம், இந்திய ஆயர் பேரவை மற்றும் பல தொலைக்காட்சி நிலையங்களில் பேருரைகளும், நேர்காணலும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அடிகளார் சென்னை விமான நிலையத்தில் சென்றடைந்தபோது ஒலி பெருக்கிகள் மூலம் அவர் பெயர் அழைக்கப்பட்டு, குடிவரவு அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

அடிகளார் தனது செயற்பாடுகள் அனைத்தும் பகிரங்கமாகவே உள்ளன. மேலும் தனது பணிகளனைத்தும் மனித உரிமையையும் மனிதனின் முழுமையான விடுதலையையும் ஒட்டியதாகவே உள்ள தெனவும் எடுத்துரைத்த போதிலும் காரணம் எதுவும் இது மேலிடத்து உத்தரவு எனக்கூறி, குடிவரவு அதிகாரிகள் ஒரிரு மணித்தியாலங்களில் நாட்டை விட்டுவெளியேறும்படி பணித்துள்ளார்கள்.

உலகத் தமிழ்ப் பேரவையின் தலைவர் அருட் கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகள் கடந்த ஆண்டும் இந்தியா சென்று பல்வேறு தரப்பட்ட நிலையில் உள்ளவர்களுடன் உரையாடல்களையும் நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இவ்வருடம் வீதி விபத்துக்களில் 1,750 பேர் பலி

கொழும்பு, ஒக்.14

இந்த வருடத்தின் கடந்த ஒன்பது மாதங்களில் இடம்பெற்ற வாகன மற்றும் வீதி விபத்துகளினால் ஆயிரத்து 750 பேர் பலியாகியுள்ளனர்.

அத்துடன், வீதி, வாகன விபத்துகளால் இதுவரை 13 ஆயிரத்து 463 பேர் காயமடைந்துள்ளனர். குறிப்பாக கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 680 பேர் விபத்துகளினால் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான மெக்ஸி புரொக்டர் தெரிவித்தார்.

மஞ்சள் கோடுகளின் ஊடாக வீதியைக் கடக்கத் தவறிய 900 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மஞ்சள் கோட்டின் ஊடாக வீதியைக் கடக்கத் தவறுபவர்களுக்கு ஆயிரம் ரூபா முதல் அதிகபட்சமாக மூவாயிரம் ரூபா வரையான அபராதம் விதிக்கப்படும் எனக் கூறிய அவர், எதிர்காலத்தில் இந்த அபராதம் அதிகரிக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டார். இலங்கையில் அதிகமான விபத்துகள் கவனயீனம் காரணமாகவே இடம்பெறுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-சி)

பாராட்டி வாழ்த்து



எமது மன்றத்தின் புரவலர்
செஞ்சொற் செல்வர்
ஆறு.திருமுருகன்
அவர்களுக்கு
யாழ். பல்கலைக்கழகம்
கௌரவ கலாநிதிப்பட்டம் அளித்தமை குறித்து அவரைப் பாராட்டுவதோடு கலாநிதி ஆறு.திருமுருகன் ஆற்றும் அறப்பணிகள் தொடர வாழ்த்துகின்றோம்.
சட்டநாதர் வீதி,
நல்லூர்.
இளங்கலைஞர் மன்றம்.

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-19,20 ஆகிய திகதிகளில்.
முன் பதிவுகளுக்கு-021-2220288
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya, 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288
Head Office Colombo - 011 4874854

31 ஆம் நாள் நினைவஞ்சலி
அமரர் இராசதுரை
தங்கத்துரை
(முன்னாள் பகுதிநேர விரிவுரையாளர், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி, முன்னாள் விரிவுரையாளர், பற்றீசியன் தொழில்நுட்ப நிறுவனங்கள்)
மலர்வு: 24.06.1943
உதிர்வு: 14.09.2011



தாய்க்குத் தலைமகனாய்
எம்குடும்பத்துக்கு தலைவனாய்
விளங்கிய எமது தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.
மனைவி, மகள், பேர்த்தி நாவினி.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirampiyadi Lane, (off Stanly Road) Jaffna. 0212228250
7ம் ஆண்டின் நிறைவை முன்னிட்டு
மாபெரும் புலமைப் பரிசில் 80% OFFER
Diploma in Microsoft office 3 Months ~~10000~~ 2000
Diploma in Desktop Publishing 3 Months ~~10000~~ 2000
Diploma in Web page Designing 3 Months ~~10000~~ 2000
Diploma in Graphic Designing 3 Months ~~10000~~ 2000
Diploma in Hardware Engineering 3 Months ~~10000~~ 2000
Diploma in Computerized Accounting 3 Months ~~15000~~ 3000
Diploma in Computer Science 4 Months ~~12500~~ 2500
Hon. Diploma in Computer Science 4 Months ~~12500~~ 2500
Hon. Diploma in Programming 3 Months ~~10000~~ 2000
AUTO CAD 3 Months 2000
Advanced Diploma Courses
Advanced Dip. in Multimedia
Advanced Dip. in Video Editing
Advanced Dip. in Networking
3000/=
A/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு
Quick Book, Acc Pac, MYOB, Tally
T.P:021 222 8250
0774907444
Ashok
Batch Time:
I) 15.10.2011 11AM
II) 16.10.2011 4 PM
III) 19.10.2011 9AM OR 3PM
IV) 21.10.2011

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே
V Care
DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்தல், ஆண்,பெண் வழுக்கை, பொடுகு, இளநரை, புழுவெட்டு, Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை, இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.
எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது வவுனியா-19,20 ஆகிய திகதிகளில் முன் பதிவுகளுக்கு-021-2220288.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.
Head Office Colombo - 011 4874854

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளம் அணுஉலையை நீக்க மக்கள் போராட்டத்தில் குதிப்பு



திருநெல்வேலி, ஒக்.14


கூடங்குளம் அணுமின் உலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப்பகுதி மக்கள் மீண்டும் போராட்டத்தில் நேற்று குதித்துள்ளனர். அணு உலை அமைக்கப்படும் பணிக்காகச் சென்ற ஊழியர்களை போராட்டக் குழுவினர் பணிக்குச் செல்ல விடாமல் தடுக்க முயற்சி செய்தனர்.

அதன் பின் பொலிஸாரின் தலையீட்டுக்கு பின்னர் ஊழியர்கள் பணிக்குச் சென்றனர். எனினும் அணு உலை வாயிலில் முற்றுகைப் போர் நடத்தப் போவதாகவும் மக்கள் அறிவித்துள்ளனர். அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு முன்பும் பலர் குவிந்திருப்பதால் பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

அதிகளவு மின்சாரம் பெறப்படும் திட்டமான அணு உலை ரஷ்ய நாட்டு ஒத்துழைப்புடன் 90 சதவீத பணிகள் முடிந்து ஆரம்பிக்கும் நிலைக்கு எட்டியுள்ளது. ஆனால் இதன் பாதுகாப்புத் தன்மையில் சந்தேகிக்கும் இந்தப் பகுதி மக்கள் அணு உலை திறக்க கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதன் காரணமாக கடந்த மாதம் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தனர். இதனை யடுத்து தமிழக முதல்வரை போராட்டக் குழுவினர் சந்தித்து மத்திய அரசை மாநில அரசும் அணு உலை பணிகளை நிறுத்தி வைக்கக் கோரும் என்ற அடிப்படையில் போராட்டம் கைவிடப்பட்டது.

தொடர்ந்து தமிழகக் குழுவினர் பிரதமரைச் சந்தித்துப் பேசினர். ஆனால் பிரதமர் அலுவலக தரப்பில் அணு உலை நிறுத்தும் விதமான எண்ணம் எதுவும் இல்லை என்ற அடிப்படையில் பாதுகாப்பு விடயத்தில் முழு அக்கறையுடன் இருக்கிறோம். இதில் பாதிப்பு எந்த அளவிற்கும் இல்லாத அளவிற்கு முன்னெச்சரிக்கைக் கட்டமைப்புகள் கையாளப்பட்டுள்ளன என்றும் பிரதமர் கூறி வருகிறார்.

பிரதமர் பேச்சு அடிப்படையில் மத்திய அரசு அணு உலை பணிகள் நிறுத்தப்படாது என்று ஊர்ஜிதம் ஆகிவிட்டதால் மீண்டும் போராட்டம் ஆரம்பித்திருக்கிறது. இனியும் இடிந்த கரையில் கடந்த ஞாயிறு முதல் பலர் உண்ணா விரதம் இருந்து வருகின்றனர். கடங்குளம் அணு உலை இருக்கும் பகுதியில் நேற்று ஆயிரக்கணக்கானோர் குவிந்தனர். இன்னும் போராட்டம் வலுப்பெறும் என்று தெரிகிறது. இந்த வீதியில் பலர் மறியலில் மக்கள் ஈடுபட் டுள்ளனர். தமிழக முதல்வர் ஜெ,, தேர்தல் பிரசாரத்திற்கு வரும் போது அவரிடம் முறையிடவும் போராட்டக் குழுவினர் முடிவு செய்துள்ளனர்.(வ)



அரசு முறை பயணமாக டில்லிக்கு வந்த வியட்நாம் அதிபர் டுவான் டான் சங்கை, பிரதமர் மன்மோகன் சிங் வரவேற்றார்.

# தெலுங்கானா விவகாரத்தில் இருதரப்புப் பேச்சில் உடன்பாடில்லை

ஆந்திரா, ஒக்.14

தெலுங்கானா கூட்டு நடவடிக்கைக் குழுவுடன் ஆந்திர அரசு நடத்திய பேச்சில் எவ்வித உடன்பாடும் ஏற்படாமல் நிறைவடைந்தது.

தெலுங்கானா கூட்டு நடவடிக்கைக் குழுவுடன் ஆந்திர அரசு நடத்திய பேச்சில் எந்த வித உடன்பாடும் ஏற்படவில்லை. இதனால் அங்கு வேலை நிறுத்தப் போராட்டம் நீடித்து வருகிறது. ஆந்திர மாநிலத்தைப் பிரித்து தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண் டும் என்று வலியுறுத்தி தெலுங்கானாப் பகுதியில் அரச ஊழியர்கள் உள்ளிட் டோர் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனால் தெலுங்கானாப் பகுதியில் அரசுப்பணிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டு மக்களுக்குக் கிடைக்கவேண்டிய அரசு நலத்திட்ட உதவிகள் கிடைக்கவில்லை. இதன்காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ளது. அரச பணிகளும் முற்றி லுமாக முடங்கியுள்ளன. இந்த நிலையில் முதன்முறையாக, தெலுங்கானா கூட்டு நடவடிக்கைக் குழுவுடன் நேற்று முன்தினம் ஆந்திர அரசு பேச்சை நடத் தியது. அப்போது அரசு ஊழியர்களுக்கு எதிராக ஆந்திர அரசு பிறப்பித்த அரசு ஆணை எண். 177, எஸ்மா சட்டம் உள்ளிட் டவற்றை ரத்து செய்ய வேண்டும், தெலுங்கானா போராட்டத்தில் கலந்து கொண்டு கைதானவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை தெலுங்கானா கூட்டு நடவடிக்கைக் குழு முன் வைத்தது.

இதனால் ஆந்திர அரசு நடத்திய பேச்சில் இழுபறி ஏற்பட்டுள்ளது. பின்னர் ஆந்திர நிதி அமைச்சர் ஆனம் ராமநாராயண ரெட்டி செய்தியாளர்களிடம் கூறுகையில்: ''தெலுங்கானா கூட்டு நடவடிக்கைக் குழுவின் கோரிக்கைகளை பரிசீலிப்பதற்கு சிறிது கால அவகாசம் தேவை'' - என்றார். (வ)

# கூடங்குளம் அணுத்திட்டம் நிறுத்தப்பட்டால் தமிழகத்தில் தொழில் வளம் பாதிக்கப்படும்

## ஜெயலலிதாவுக்கு மன்மோகன் எச்சரிக்கை

கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகள் கைவிடப்பட்டால், தமிழகத்தின் தொழில் வளம் பாதிக்கப்படும். ஏனெனில் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இருந்து 2 ஆயிரம் மெகா வோல்ற் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது. இது கிடைக்காவிட்டால் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று பிரதமர் மன் மோகன்சிங் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

எந்த விடயத்துக்காகவும் பொதுமக்களின் பாதுகாப்பை மத்திய அரசு விட்டுக்கொடுக்காது. கூடங்குளத்தில் உள்ள இரு பிரிவுகள் மூலம் 2000 மெகாவோல்ற் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இதில் 925 மெகாவோல்ற் மின்சாரம் தமிழகத்துக்கு வழங்கப்படும்.

இது கிடைக்கப் பெறாவிட்டால், எதிர்காலத் தில் தமிழகத்தின் வளர்ச்சியே பெருமளவில் பாதிக்கப்ப்டும். மேலும் தொழில் திட்டங்களும் முடங்கும். இந்தத் திட்டத்தால் ஆபத்து ஏற்படாது என்பதை மக்களுக்கு விளக்க வேண்டும் என்று அணு சக்தித் துறைக்குத் தனிப்பட்ட முறையில் உத்தரவிட்டுள்ளேன். இதற்கு மாநில அரசின் ஆதரவு தேவை என்றும் கூடங்குளம் அணுமின் திட்டத்துக்குத் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் பிரதமர் தனது கடிதத்தில் கூறியுள்ளார். (வ)

# சிறுநீரக பாதிப்பு டி.எம்.எஸ்.இற்கு தீவிர சிசிக்கை



பிரபல பின்னணிப் பாடகர் டி.எம்.சவுந்தரராஜனுக்கு சிறுநீரகத்தில் பாதிப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக இந்தியாவின் சென்னை மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மதுரையைச் சேர்ந்தவர் டி.எம்.சவுந்தரராஜன். டி.எம்.எஸ். என்று அன்போடு அழைக்கப்படும் இவர், திரையுலக ஜாம்பவான்களான எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், என பலருக்கும் பின்னணி பாடியிருக்கிறார்.

அண்மையில் அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதை யடுத்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுத் திரும்பினார். இந்தநிலையில் டி.எம்.எஸ்.இற்கு மீண்டும் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

உடனடியாக அவரது உறவினர்கள் அவரை சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் சிறுநீரகத்தில் பாதிப்பு ஏற்பட்டதாகக் கூறி அவரை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளித்து வருகின்றனர். (வ)

# தொலுங்கானா தனி மாநிலம் கோரி நாளை ரயில் மறியல் போராட்டம்

தெலுங்கானா தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி நாளை சனிக்கிழமை ரயில் மறியல்போராட்டம் நடைபெறவுள்ளது.

தெலுங்கானா அரசியல் விவகார கூட்டுக்குழுவின் நிர்வாகக் குழு கூட்டம் நேற்று முன்தினம் நடை பெற்றது. இந்தக் கூட்டத்தில் ரயில் மறியல் போராட்டத்தை 15 ஆம் திகதிக்கு பிற் போடப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தெலுங்கானாப் பகுதியில் உள்ள பன்ஸ்வாடா சட்ட சபைத் தொகுதியில் இடைத் தேர்தல் நேற்று நடந்ததாக இந்த போராட்டம் பிற்போடப்பட்டது.

இந்த மறியல் போராட்டம் காரணமாக தென் மத்திய ரயில்வே திணைக்களம் 59 எக்ஸ்பிரஸ் ரயில்களை ரத்து செய்தி ருந்தது. 40 ரயில்கள் பகுதி அளவில் ரத்து செய்யப்பட்டன. 70 ரயில்கள் திருப்பி விடப்பட்டன. 78 பாசஞ்சர் ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. 14 பாசஞ்சர் ரயில்கள் பகுதி அளவில் ரத்து செய்யப்பட்டன. மறியல் போராட்டம் தள்ளிவைக்கப்பட்டதால், ரத்து செய்யப்பட்ட பகுதி அளவில் ரத்து செய்யப்பட்ட ரயில்கள் அனைத்தும் வழக்கம் போல ஓடும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (வ)

# வலுவான லோக் பால் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேறும்

## ஹஸாரேக்கு பிரதமர் கடிதம்

டில்லி, ஒக்.14

வலுவான லோக்பால் பிரேரணையை, நாடாளுமன்றத்தில் நிறை வேற்ற, அரசு உறுதி பூண்டுள்ளது. அதே நேரத்தில், தேர்தல் சீர்திருத்தம் உள்ளிட்ட விடயங்களில் அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது,'' என்று காந்திய வாதி அன்னா ஹசாரேவுக்கு, பிரதமர் மன்மோகன் சிங் கடிதம் எழுதியுள்ளார்.

சமூக சேவகரும், காந்திய வாதியுமான அன்னா ஹசாரே, வலுவான லோக்பால் பிரேரணையைக் கொண்டு வர வலியுறுத்தி, உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். தற்போது, அரியானா ஹிசார் இடைத் தேர்தலில், காங்கிரஸுக்கு எதிராக, அன்னா ஹசாரே குழுவினர் பிரசாரம் மேற்கொண்டுள்ளனர். இதனால், காங்கிரஸ் தரப்பு அதிருப்தியடைந்துள்ளது. இந்தநிலையில், பிரதமர் மன்மோகன் சிங், ஹசாரேவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

வலுவான லோக்பால் மசோதா கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசு உறுதி கொண்டுள்ளது. அரசின் கொள்கை, லோக்பால் பிரேரணையுடன் நின்றுவிடாது. நிலம் கையகப்படுத்துதல் மற்றும் தேர்தல் சீர்திருத்தம் குறித்த சட்டங்களும் அரசின் கொள்கையாக உள்ளது. சட்டபேரவை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை நிராகரிக்கும் உரிமை, மக்களுக்கு வழங்கப் பட வேண்டும் என்று உங்கள் தரப்பில் இருந்து வலியுறுத்தப் படுகிறது. இதுபோன்ற தேர்தல் சீர்திருத்த முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசும் விரும்புகிறது. ஆனாலும், இதுபோன்ற விடயங்களில், அனைத்து அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மன்மோகன்சிங் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமையின் போது இறந்தோரின் விவரங்கள் கோரல்

வடக்குமாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள அலுவலகங்கள் பாடசாலைகளில் கடமையாற்றிய வேளையில் இறந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் பின்னுரித்துக்களுக்கு இதுவரை சம்பளம் வழங்காதவர்களின் விவரங்களை மாகாணக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்விப்பணிப்பாளர் சகல வலயக்கல்வி அலுவலகத்துக்கும் அறிவித்துள்ளார்.

சேவையின் போதுஇறந்து இதுவரை சம்பளம் பெறாத உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் பின்னுரித்தாளர்கள் உடனடியாக தத்தமது வலயக்கல்விப் பணிப்பாளரிடம் விவரங்களைக் கையளிக்குமாறும் அறிவித்துள்ளார் (ம-207)

### தேவை

கொழும்பில் நீண்ட காலமாக இயங்கும் பிரபல கைத்தொழில் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் புதிய ஆலை ஒன்றை நிறுவ உள்ளது. யாழ்.நகருக்கு அண்மித்ததாகவோ, போக்குவரத்து வசதிகள் கொண்ட சற்றுத்தொலைவான இடத்திலோ ஐந்து அல்லது இரண்டு ஏக்கர் காணி உடனடியாகத் தேவைப்படுகிறது. விவரங்களுக்கு: mollanka@gmail.com என்ற மின்னஞ்சலுக்குத் தொடர்பு கொள்ளவும்.

### போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி வகுப்புக்கள்

அஞ்சல் சேவை உத்தியோகத்தர், SLAS அபிவிருத்தி உதவியாளர், ஆராய்ச்சி உதவியாளர், மருந்துக் கலவையாளர், தொழில் நுட்பவியல் விரிவாக்கல் உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி வகுப்புக்கள்.

விரிவுரை:- இலங்கை நிர்வாக சேவை அதிகாரி
சனிக்கிழமை 15.10.2011 பி.ப. 1 மணி
முன்கூட்டியே பதிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

திசைகாட்டி
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்,
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:0214914527
(யாழ்.இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கு பின்புறமாக உள்ள ஒழுங்கை)
(8995)

### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 04 | | 08 |
| 09 | | 10 |
| 1938 | | 2006 |



## அமரர் தவமணி வன்னியசிங்கம்

ஐந்தாண்டுகள் ஆனது நீங்கள் எம்மை விட்டுச் சென்று
நீங்கள் இம் மண்ணில் வாழ்ந்த காலம் முழுவதும் உங்கள் குடும்பத்துக்காய் தன்னலமற்ற சேவையை வழங்கினீர்கள்.
உங்களிடம் பட்ட கடன் நாம் எப்போது தீர்ப்போம் அம்மா!
நித்தம் துடிக்கும் எங்கள் இதயம் உங்களை என்றும் நினைக்கத் தவறுவதில்லை. தாயே உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

555, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (8988)

மகள்,
சகோதர, சகோதரிகள்.

### மரண அறிவித்தல்



## கிருஸ்ணபிள்ளை தனபாலசிங்கம்

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை தனபாலசிங்கம் 10.10.2011 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை-இலட்சிமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னதங்கச்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சேனாதிராசா மற்றும் சின்னராசா (இலங்கை), பாலசுப்பிரமணியம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாறஞ்சினி (கலா- கனடா), பத்மினிதேவி (மனோ- கனடா), செல்வறஞ்சினி (சாந்தி - இந்தியா), ஜெகதீசன் (சிறி- சுவிஸ்), காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (செல்வம்), நாகேஸ்வரராஜா (ஜெயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஆறுமுகவேல் (கனடா) மற்றும் அரியநாயகம் (கனடா), சசிவதனி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் இரத்தினம், காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராசேந்திரம், தவமலர், தெய்வேந்திரம், பத்மாவதி,தவேந்திரம், பிரேந்திரன், விஜயலட்சுமி, ஆறுமுகசாமி ஆகியோரின் சிறிய தந்தையும், குமுதினி, சுபோதினி,ரமேஸ், கணேஸ், நாதன், சுகந்தினி, பாலினி ஆகியோரின் பெரிய தந்தையும் துரேஸ்வரன், துஸ்யந்தி,துஸ்யந்தன், துசித்தா, சன்ஜீகா, சாயிரா, சயூன் ஆகியோரின் அன்பு பேரனும் அஸ்லி, கக்ஷான், ஆஷார், அஜிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2011)வெள்ளிக்கிழமை பி.ப1.00 மணிக்கு ஆனைப்பந்தியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

94, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்

## 40 வருடங்களாக புனரமைக்கப்படாத சிறுப்பிட்டி மேற்கு வீதி

யாழ்ப்பாணம், ஒக்.14

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சிறுப்பிட்டி மேற்கு - ஞான வைரவர் வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்புச் செய்யப்படவில்லை.

மேற்படி வீதி புனரமைப்பு குறித்து பிரதேச சபையின் கவ னத்துக்கு கடந்த 5 வருடங்களாக மகஜர்கள், கடிதங்கள் வழங்கி யும் வீதிமீள்புனரமைப்பு இன்றி அழிவடைந்து வருகின்றது என்று ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள், அரசஅலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் என மேற்படி வீதியை தினமும் பயன்படுத்துகின்ற போதும் கவனிப்பாரற்று உள்ளமை கவலை தரும் விடயம் என்று அந்த ஊர் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தேர்தலின் பின் உள்ளூராட்சி சபை பொறுப்பேற்ற பின்னரும் மேற்படி வீதி புனரமைப்பு இந்த வருடத்துக்குள் முடிவுறுத்தாவிடில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வரப்படவுள்ளதாக சிறுப்பிட்டி மேற்கு பொது அமைப்புகள் விசனத்துடன் தெரிவித்துள்ளன. (வ-302)

### VACANCIES
@ Gnanams Hotel Pvt. Ltd.

**RECEPTIONIST - MALE**
*For Night Shift*
Age Between 20 – 30 Yrs

**STEWARDS – MALE**
*Full Time*
Age Between 20 – 30 Yrs

REQUIREMENTS
- Knowledge of English
- Work Efficiency

Apply Within 05 Days by Post, Fax or by e-mail.

**Gnanams Hotel Pvt. Ltd.**
299, 301 Clock Tower Road, Jaffna
T: 021 222 0630
F: 021 222 0631
E: gnanamshotel@gmail.com

### விற்பனைக்கு

சுத்தமான இன ஜேர்மன் செப்பேட் அல்சேசன் நாய்க்குட்டிகள்,டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0776687716

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1984 உத்தரம் 2ஆம் பாதம்,செவ்வாய் குற்றமில்லை கிரகபாவம் 48¾, உயரம் 5'5'' A/L வரைபடித்து இருக்கும் மெல்லிய அழகிய பெண்ணிற்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வேலை செய்யும் மணமகனை தேடுகின்றனர்.
T.P: 0212241686, 0771802928

### காணி விற்பனைக்கு

வடமராட்சி, அல்வாயில் கேயாவத்தை என்னும் (புதுக்குளம்) இடத்தில் இரண்டு பரப்புக்காணியும் அதனுள் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772305789, 0217902706

### மணமகள் தேவை

இந்து கௌரவகுடும்பம், உத்தராடம் தனுசுராசி, 05கிரகபாவம்,5'7'' AMABE(UK) பட்டதாரி BANK (AREA SALES MANAGER) 80,000/= மாதவருமானமீட்டும் மணமகனுக்கு A/L முதல் பட்டதாரி மணமகள் தேவை. பிரித்தானியா (UK) குடியுரிமையுடைய 1983 உத்தராடம் தனுசுராசி 5'5'' கிரகபாவம் 12¼, மாநிறம் Automobile Engineering FOREMAN மணமகனுக்கும் அழகான பட்டதாரி மணப்பெண் தேவை. உடன் அணுகவும்.
SK.சிவகரன் (அமைப்பாளர்)
42/11, இராமலிங்கம் வீதி (பூங்கனிச்சோலைஅருகில்)
T.P 0750741451/0750741452/0215681126

### தேவை

யாழ்ப்பாணம் நகரச் சுற்றாடலில், 4,000 சதுர அடி விஸ்தீரணம் உள்ள கட்டடம் ஒன்றோ அல்லது 2 பரப்புக் காணி உடன்தேவை.
தொடர்புகொள்ளவும்: mollanka@gmail.com

### அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



அன்று எங்கள்
ஆசானும்
இன்று யா/ மட்டுவில்
தெற்கு அமெரிக்கன்
மிசன் தமிழ்க் கலவன்
வித்தியாலய
முதல்வருமான

**திரு.வே.சுந்தரலிங்கம்**
(B.Com (Hons), Dip. in. Edu., M.Ed, SLTS Class.1)

அவர்களின் விடாமுயற்சி, நேர்மை, சமூகநேயம், விட்டுக் கொடுப்பு, சுகநலத் துக்கு அப்பாற்பட்டு பிறர் நலத்தையே தன்னல மாகக் கொண்ட சேவைக்கு வெகுமதியாக ௨௦௰ ஆம் ஆண்டு தென்மராட்சி வலயத்தில் சிறந்த அதிபர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு அதி மேதகு ஜனாதிபதியினால் ௦௬.௰.௨௦௰ அன்று "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட எங்கள் ஆசானைப் பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.

மட்டுவில்,
சாவகச்சேரி.

வாழ்த்துபவர்கள்: செ.பரணீதரன் (ஆசிரியர்),
க. முல்லைமாறன் (கிராம உத்தியோகத்தர்),
எம்.பி. ஸ்ரீதரன், சி.சுரேஷ், கே.எஸ். சுபாஸ் (ஆசிரியர்).

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## துரைசிங்கம் விஜயமனோகர்
(B.B.A)



அபிவிருத்தி உதவியாளர் - மாவட்ட திட்டமிடல் செயலகம், கிளிநொச்சி)

திதி:14.10.2011

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.05.1974 | 25.09.2010 |

ஓராண்டு கழிந்தாலும் உங்கள் பசுமையான
நினைவுகள் இன்னும் மறையவில்லை
பல ஆண்டுகள் நீண்டாலும் உங்கள் நினைவுகள்
என்றும் என் நெஞ்சில் நிறைந்திருக்கும்

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கும்,

232, திருவையாறு,
கிளிநொச்சி.

உங்கள் அன்பு மனைவி
வி.தீபாஜினி

### மரண அறிவித்தல்



## அந்தோனிப்பிள்ளை மரியதிரேஸ்

இளவாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியதிரேஸ் 09.10.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை செல்லையா-ஞானப்பு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சவிரிமுத்து-அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் லூர்துமேரி (பூமணி), காலஞ்சென்ற S.C.M.யோசவ் ஆகியோரின் சகோதரியும் இம்மனுவேல், ஆரோக்கியநாதர் ஆகியோரின் மைத்துனியும் வின்சென்ற், றாஜி (U.K.), அமிர்தா (France), மதுரநாயகம் (Canada), றாஜலிங்கம் (France), பூராசா ஆகியோரின் அன்புத் தாயும், பற்றிமா (பேபி), பிரான்சிஸ் (அத்தார்-U.K), மதுரன் (France), மலர் (Canada), குயினி (France), சுதாமதி ஆகியோரின் பாசமிகு மாமியும் றோஸன், டெமெற்றியஸ், தர்ஷன், போஜியா, போஜியன், போஜினி, ஜோயல், அந்துவான், அலன், ஜொனத்தன், ஜெனிபர், ஜோதினி, சுபாஜினி, விஜய், டெனிஷியன், எழில், டினேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக நாளை (15.10.2011) சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து இளவாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு அன்று பி.ப. 3 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
A.E.வின்சென்ற் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபியின் மகன் முடாசிம் மாட்டினார் புரட்சிப் படையிடம்

சிர்தே,ஒக்.14

லிபியாவில் அதிபர் கடாபியின் மகன் முடாசிம் கடாபியை புரட்சிப் படையினர் சிர்த் நகரில் வைத்து கைது செய்துள்ளனர்.

லிபியாவில் சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்த அதிபர் கடாபியை எதிர்த்து மக்கள் புரட்சி ஏற்பட்டது. மாற்று அரசு கவுன்சில் என்ற பெயரில் புரட்சிப்படையினர் கடாபியை எதிர்த்துப் போரிடத் தொடங்கினர். அவர்களுக்கு அமெரிக்கா உள்பட பல நாடுகள் ஆதரவு அளித்ததில் குடும்பத்து டன் கடாபி தலைமறைவானார்.

இதனையடுத்து லிபியாவின் முக்கிய நகரங்கள் புரட்சிப் படையின் கட்டுப்பாட்டுக்



குள் வந்தன. சிர்தே மற்றும் சில பகுதிகள் மட்டும் கடாபியின் ஆதரவாளர்கள் மற்றும் ராணுவத்தினரிடம் இருந்தன. அவற்றையும் கைப்பற்ற புரட்சிப் படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சிர்தேவில் பதுங்கியிருந்த கடாபியின் மகன் முடாசிம் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார். புரட்சிப்படையினர் அவரை உடனடியாக லிபியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள பெங்காசிம் பகுதிக்கு கொண்டு சென்று அங்கு ரகசிய இடத்தில் அடைத்து வைத்துள்ளனர்.

கடந்த 75ஆம் ஆண்டு பிறந்த முடாசிம், வைத்தியராகவும் ராணுவ வீரராகவும் பணி புரிந்தார். அத்துடன் லிபியாவின் தேசிய ஆலோசகர் பதவியும் வகித்தவர். கடாபிக்கு அடுத்து அதிபர் பதவிக்கு ஏறுவதில் முடாசிம்முக்கும் இவரது சகோதரர் சைப் அல் இஸ்லா முக்கும் இடையில் மோதல் நிலவி வந்தன. அதருகுள் ஆட்சி போனதால் இருவரும் தலைமறைவாக இருந்தனர். இந்நிலையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ந)

# பாகிஸ்தான் அதிபர், பிரதமர் மீது விசாரணைக்கு உத்தரவு



லாகூர்,ஒக்.14

வெளிநாடுகளில் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் குறித்து தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக பாகிஸ்தான் அதிபர் சர்தாரி, பிரதமர் கிலானி, முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப், மற்றும் இம்ரான் கான் உள்ளிட்ட முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களுக்கு 'நோட்டீஸ்' அனுப்ப லாகூர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நோட்டீசை அனுப்ப முடிவெடுத்த லாகூர் உயர் நீதி மன்றம் தலைமை நீதிபதி இஜாஸ் அகமது சவுத்ரி, அனைவரும் தங்களது சொத்துக் கணக்குகள் குறித்த விளக்கங்களுடன் வாக்குமூலங்களைத் தாக்கல் செய்ய வேண்டும் எனத் தனது உத்தரவில் கூறியுள்ளார். இந்த வழக்கு மீதான அடுத்த கட்ட விசாரணை டிசெம்பர் மாதம் முதல் வாரம் நடைபெறும் எனவும் நீதிபதி அறிவித்தார். (ந)

# மியன்மாரில் கைதிகள் விடுதலை

## பிரபல நகைச்சுவை நடிகர் வருத்தம்

பாங்காக்,ஒக்.14

மியன்மார் அரசு அறிவித்தபடி, பொது மன்னிப்பு வழங்கப்பட்ட கைதிகளை, விடுவிக்கத் தொடங்கியது. இந்த விடுதலை, அரசியல் கைதிகளுக்கும் வழங் கப்படுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மியன்மாரில் ராணுவ ஆட்சி அமுலில் இருந்த போது, அரசை எதிர்த்த அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். மியன்மார் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் விலக்கப்பட வேண்டுமானால், அரசியல் கைதிகள் விடுதலை உள்ளிட்ட விஷயங்களில் அந்நாட்டு அரசு கவனம் செலுத்த வேண்டும் என அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் தெரிவித்திருந்தன. இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை மியன்மார் அரசு, 6,300 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாகவும், விரைவில் அவர்கள் விடுவிக்கப்படுவர் எனவும் தெரிவித்தது. இதனையடுத்து இந்த விடுவிப்பு, நேற்றுமுன் தினம் முதல் தொடங்கியுள்ளது.

இதன்போது பிரபல நகைச்சுவை நடிகரான, ஜர்கனார் முதலில் விடுவிக்கப்பட்ட குழுவில் வெளியே வந்தார்.

2008 இல் மியான்மரைத் தாக்கிய சூறாவளியை அடுத்து, அரசின் நிவாரணப் பணிகள் குறித்து அவர் விமர்சனம் செய்ததால், 35 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர். நேற்று விடுதலையான அவர் இதுகுறித்துக் கூறுகையில், நான் மீண்டும் அது போல விமர்சனம் செய்தால் உள்ளே போக வேண்டியதுதான். நான் இப்போது மகிழ்ச்சியாக இல்லை. என்னைப் போல சிறையில் உள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்றார். (ந)



செர்பியா, பெல்கிரேடில் ஐரோப்பிய ஒன்றிய செயலாளர் வின்சென்ட் டிக்ரெட் தலைமையில், செர்பியாப் பிரதமர் மிர்கோ சிவெட்கோவிக்(வலது) ஐரோப்பிய ஒன்றியக் குழுமத்தில் இணைவதற்கான முதல்கட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

# கடல் பிரச்சினைகளை தீர்க்க சீனா- வியட்நாம் ஒப்பந்தம் கைச்சாத்து

பீஜிங்,ஒக்.14

தென் சீனக் கடலில் எந்தப் பகுதி யாருக்கு என்பதில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்க்க சீனாவும், வியட்நாமும் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.

தென்சீனக் கடல் முழுமையும் தனக்குத்தான் சொந்தம் என சீனா வல்லுரிமை கொண்டாடி வருகிறது. வியட்நாம் கடல் எல்லைக்குட்பட்ட பகுதியில் இந்தியா கச்சா எண்ணெய் எடுக்கும் பணியில் ஈடுபட்டு வருவதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இரு நாடுகளும் அதைப் புறக்கணித்து விட்டன.

இந்நிலையில், நேற்று முன் தினம் சீனத் தலைநகர் பீஜிங்கில் சீனாவுக்கும், வியட்நாமுக்கும் இடையில் கடல் பிரச்னைகள் தொடர்பான ஆறு அம்ச ஒப்பந்தம் கையெழுத்தானது. இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை சந்திப்பு, கடல் பிரச்சினைகள் தொடர்பாக நிரந்தர தொலைபேசித் தொடர்பு, சர்வதேச சட்டப்படி அடிப்படையான நீண்டகால கடல் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளுதல், சட்டங்களை இரு தரப்பும் மதித்தல் உள்ளிட்ட அம்சங்கள் இந்த ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளன. (ந)

# ஈராக்கில் கார்குண்டுத் தாக்குதல்; 10பேர் சாவு

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நடத்தப்பட்ட இரண்டு கார் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் ஏனைய தாக்குதல்களில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகரிலுள்ள பொலிஸாரை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த தாக்குதல்களில் 70 பேர் காயமடைந்துள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் நிலையமொன்றை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கார் குண்டுத் தாக்குதலொன்றில் நான்கு பொலிஸார் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதேவேளை பொலிஸாரின் கட்டடமொன்றை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது கார் குண்டு தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

# சீன நாணயத்துக்கு எதிரான மசோதா அமெரிக்க செனட்டில் நிறைவேற்றம்

சீன நாணயத்தின் மதிப்பை வலுக்கட்டாயமாக உயர்த்த வழிசெய்யும் பிரேரணை நேற்று முன்தினம் அமெரிக்க செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை பிரதிநிதிகள் சபையில் பிரேரணை நிறைவேற்றவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ள சீனா, இந்த மசோதாவால் இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகப் போர் உருவாகும் என எச்சரித்துள்ளது.

சீனா தனது யுவான் நாணயத்தை டொலருக்கு எதிரான மதிப்பில் தொடர்ந்து குறைத்தே வைத்துள்ளது. இதனால் சீன ஏற்றுமதியாளர்களுக்கு அளவற்ற லாபம் கிடைப்பதாகவும், அமெரிக்காவில் ஏற்கனவே நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் அதிகரிக்கும் முயற்சி இது எனவும் அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

ஆனால் அமெரிக்க வேலையில்லா திண்டாட்டத்துக்குத் தனது

## பெய்ஜிங் எச்சரிக்கை

நாணய மதிப்புக் காரணமல்ல எனவும், 2005 முதல் இதுவரை யுவானின் மதிப்பை 30 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் சீனா மறுப்புத் தெரிவித்து வருகிறது.

இந்நிலையில் டொலருக்கு எதிராக வெளிநாட்டு நாணயங்களின் மதிப்பைக் குறைப்பதற்காக தங்களின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு மானியம் வழங்கும் நாடுகளின் ஏற்றுமதிப் பொருள்கள் மீது அமெரிக்கா வரி விதிக்க வழி செய்யும் பிரேரணை செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது.

எனினும் அதிபர் ஒபாமா இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவிக்க மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மசோதாவுக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள சீனா இது போன்ற நடவடிக்கைகள் இரு நாடுகளுக்கிடையில் வர்த்தகப் போரைத்தான் உருவாக்கும் என மிரட்டியுள்ளது. (ந)

# மரண தண்டனைக்கு இத்தாலி கடும் எதிர்ப்பு

ரோம்,ஒக்.14

மனித உரிமைக்கு எதிரான மரண தண்டனையை உலக நாடுகள் நிறுத்த வேண்டும் என்று இத்தாலி கூறியுள்ளது.

மரண தண்டனைக்கு எதிரான உலக தினத்தை முன்னிட்டு இத்தாலி வெளியுறவுத் துறை அமைச்சர் பிரான்கோ பிராட்டினி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: மனிதர்களின் கௌரவம், உரிமையை உறுதிசெய்யும் வகையில் மரண தண்ட னையை இத்தாலி ரத்து செய்துள்ளது. இதற்கு வத்திக்கானும் முழு ஆதரவு அளித்துள்ளது. தவிர எதிர்க் கட்சியினரும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அதேபோல் ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும். இவ்வாறு பிரான்கோ குறிப்பிட் டுள்ளார். (ந)

# தடையையும் மீறி நடித்த நடிகைக்கு ஈரானில் சிறை

தெஹரான், ஒக்.14

தடையை மீறி ஆஸ்திரேலிய திரைப்படத்தில் நடித்த ஈரான் நடிகைக்கு அந்த நாட்டு நீதிமன்றம் ஓராண்டு சிறை தண்டனை விதித்துள்ளதுடன் 90 சவுக்கடி வழங்கவும் உத்தரவிட்டது.

மர்சே வாபமர் ஈரானை சேர்ந்த பிரபல நடிகை அந்நாட்டில் திரைப்படங்களில் நடிக்க நடிகைகளுக்கு அரசின் கட்டுப்பாடு உள்ளது. இந்தத் தடையை மீறி ஆஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரை சேர்ந்த சியான் பிலிம்ஸ் என்ற பட நிறுவனத்தின் மை டெக ரான் ஃபார் சேல் என்ற படத்தில் மர்சே நடித்தார்.

அந்தப் பட நிறுவனத்தின் படங்களுக்கு ஈரானில் ஏற்கனவே தடை உள்ள நிலை யில் மர்சே நடித்த அந்த திரைப் படம் 2010ஆம் ஆண்டில் பல சர்வதேச விருதுகளைப் பெற்றது.

எனினும் கட்டுப்பாட்டை மீறியதாக நடிகை மர்சே மீது ஈரான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்குக்கு நேற்றுமுன்தினம் அளிக்கப்பட்ட தீர்ப்பில் நடிகைக்கு ஓராண்டு சிறையும், 90 சவுக்கடியும் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (ந)

# எகிப்து நிதியமைச்சரின் ராஜினாமா நிராகரிப்பு

கெய்ரோ,ஒக்.14

எகிப்து நாட்டின் நிதியமைச்சர் ஹசம் எல்பெப்லாவி தன்னுடைய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். இருப்பினும் ஆளும் கட்சி அமைச்சரின் ராஜினாமாக் கடிதத்தை நிராகரித்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவ சமுதாயத்தை சேர்ந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்குப் பொறுப்பேற்று தன்னுடைய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். தாக்குதல் ... எவ்விதத்திலும் நேரடியான ... அவரது ராஜினாமா நிராகரிக்கப்பட்டிருப்பதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய முப்பாய்ச்சல் போட்டியில் நிந்தவூர் மாணவனுக்குத் தங்கம்

தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான 19வயதுக்குட்பட்ட முப்பாய்ச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற நிந்தவூர் அல்-அஸ்ரக் தேசிய பாடசாலை மாணவன் எம்.எஸ்.எம். நுஸ்கியை வரவேற்கும் நிகழ்வு பாடசாலை முன்றலில் நடைபெற்றது.



அல்-அஸ்ரக் தேசிய பாடசாலை அதிபர் எஸ்.ஏ.எஸ்.எம். சம்சுதீன், விளையாட்டு பிரிவுக்கான பொறுப்பாசிரியர் ஐ. எல்.எம்.இப்றாஹிம், உடற்கல்வி ஆசிரியர் எம்.ப. மஹ்றூப் மற்றும் பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மாலை அணிவித்து மாணவனை வரவேற்றனர்.

அல்-அஸ்ரக் தேசிய பாடசாலை வரலாற்றில் அகில இலங்கை ரீதியான விளையாட்டுப் போட்டி நிகழ்வு ஒன்றில் தங்கப் பதக்கம் பெற்றிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

அதேவேளை, இம்முறை கிழக்கு மாகாணத்துக்குக் கிடைத்த ஒரே ஒரு தங்கப் பதக்கமும் நுஸ்கியினுடைய பதக்கமாகும் என்று பாடசாலை அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# ஆண்களுக்கான நீளம் பாய்தலில் அட்டாளச்சேனை மாணவன் சாதனை

தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவில் 21 வயதுக் குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில், அட்டாளைச் சேனை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவன் எம்.ஐ.எம்.மிப்ரான் 7.09 மீற்றர் தூரம் பாய்ந்து மூன்றாம் இடம்பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.



புதிய சாதனை படைத்த மிப்ரானுக்கு 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும், வெற்றிக் கிண்ணமும் அத்தோடு 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டு மோட்டார் சைக்கிள் ஒன்றும் பிரதமர் டி.எம்.ஜயரத்னவால் வழங்கப் பட்டது.

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மிப்ரான் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 2011ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டியில் 21 வயதுக்கு உட்பட்ட நீளம் பாய்தலில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் சுவிகரித்திருந்தார்.

நீளம் பாய்தலில் சாதனைகள் படைத்துவரும் எம். ஐ.எம்.மிப்ரான் கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சால் நடத்தப்பட்ட 2011ஆம் ஆண்டுக்கான மாகாணப் போட்டியில் 6.90 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தை சுவிகரித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாதகல் சென்.ஜோசப் ம.வி. மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 14

சண்டிலிப்பாய் கல்வி கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையேயான 16 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயம் வெற்றிபெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

நேற்று மதியம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 16 வயது பிரிவு ஆட்டத்தில் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய அணியை எதிர்த்து சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் மாதகல் சென். ஜோசப் வித்தியாலய அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## நட்பு ரீதியான உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.14

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான 14,16,18,20 வயதுப் பிரிவினருக்கான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

***

யாழ்ப்பாணம், ஒக்.14

சென்.ஜோன்ஸ் கல்லூரி-அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆகியவற்றின் 14, 16, 18, 20 வயது பிரிவு அணிகளுக்கிடையேயான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

## குருநகர் பாடுமீன் வென்றது

யாழ்ப்பாணம், ஒக்.14

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.(ம-23)

## வதிரி டயமன்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், ஒக்.14

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வல்வெட்டித்துறை கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.14

கிளிநொச்சி உதைபந்தாட்டலீக்கின் ஆதரவுடன் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரின் இன்று வெள்ளிக்கிழமை உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

காலை 8 மணி திருநகர் விளையாட்டுக்கழகம் எதிர் பரந்தன் மத்தி விளையாட்டுக்கழகம்.

காலை 9 மணி நாச்சிக்குடா சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் முல்லைத்தீவு இளந்தென்றல் விளையாட்டுக்கழகம்.

**முற்பகல் 10 மணி**

சந்திரோதயம் விளையாட்டுக்கழகம் எதிர் இளந்தளிர் விளையாட்டுக்கழகம்.

**முற்பகல் 11 மணி**

உழைசர் ஒன்றியம் விளையாட்டுக்கழகம் எதிர் புதிய பாரதி விளையாட்டுக்கழகம்.

**நண்பகல் 12 மணி**

சென்யூட் விளையாட்டுக் கழகம் எதிர் சென் மைக்கல் விளையாட்டுக்கழகம். (ம-23)

## மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.14

சண்டிலிப்பாய் கல்வி கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 13 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று நண்பகல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து நவாலி அட்டகிரி சைவ வித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் சண்டிலிப்பாய் இந்து கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. (ம-23)



யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் கூடைப்பந்தாட்ட வீரனும் மாணவ முதல்வனுமான அமரர்.பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய மின்னல் வேக கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்ட சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் பிரசன்னனுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் விருது வழங்குகின்றார். (ம-23)

## நவோதயப் பாடசாலைகளின் விளையாட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.14

வட மாகாணங்களைச் சேர்ந்த 23 நவோதய பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## உதைபந்தாட்டச் சுற்றின் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.14

சண்டிலிப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 13,16,18 வயது பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் சண்டிலிப்பாய் கல்வி கோட்ட பணிப்பாளர் சி.சுந்தரசாமி தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஒய்வு பெற்ற வலிகாமம் வலய முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.சுகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

இறுதியாட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

**13 வயது பிரிவு**

புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலயம்.

**16 வயது பிரிவு**

மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரி


**18 வயது பிரிவு**

மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரி (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 40 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இதன்மூலம் மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடரில் 1-0 என்ற அடிப்படையில் முன்னணி வகிக்கிறது."**





# மேற்கிந்தியத்தீவுகள் அதிரடியாட்டம்; தடுமாறித் தோற்றது பங்களாதேஷ்

பங்களாதேஷ், மேற்கிந்தியத்தீவுகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 40 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சிம்மன்ஸின் அதிரடி ஆட்டத்தின் மூலம் இந்த வெற்றியை பதிவு செய்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது. மிர்பூரில் நேற்று முதலாவது ஒரு நாள் ஆட்டம் இடம்பெற்றது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு டினேஸ் ராம்டினும், பங்களாதேஷ் அணிக்கு முஷ்பகுர் ரகிமும் அணித்தலைமை தாங்கினர். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 298 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய சிம்மன்ஸ் 124 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 122 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மறுமுனையில் சாமுவேல்ஸ் 78 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 71 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதியில் அதிரடியாக ஆடிய பொலாட் 25 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர்களின் அதிரடி ஆட்டத்தின் மூலம் 4 இலக்குகளை இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பங்களாதேஷ் அணியின் சார்பில் பந்து வீச்சில் ரூபல் குசைன் 65 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை சரித்தார்.

மிகக் கடினமான இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணி சகல வீரர்களதும் பங்களிப்புடன் 50 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்கை இழந்து 258 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 40 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது. பங்களாதேஷ் சார்பில் சகிப் அல் ஹசன் 58 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம், 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களைப் பெற்றார். நமீம் இஸ்லாம் 52 ஓட்டங்களையும், இம்ரு கைல்ஸ் 42 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இறுதி வரை பங்களாதேஷ் போராடியும் 50 பந்து பரிமாற்றங்களில் 258 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் ராம் போல், ருசெல், சாமுவேல்ஸ் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக அதிரடிச் சதம் குவித்த சிம்மன்ஸ் தெரிவானார். மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடரில் 1 - 0 என்ற அடிப்படையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி முன்னிலை வகிக்கின்றது. இரண்டாவது ஆட்டம் நாளை இடம்பெறும்.

(15)



# சிங்கை கழற்றிவிட்டது இந்தியா! கிண்ணம் வென்றும் ஏமாற்றம்

அண்மையில் இடம்பெற்று முடிந்த சம்பியன் லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு தலைமை தாங்கி, அந்த அணிக்கு கிண்ணத்தை பெற்றுக் கொடுத்த ஹர்பஜன் சிங்கை இந்திய அணி, இங்கிலாந்துடனான முதலிரண்டு ஒரு நாள் ஆட்டத்தில் நீக்கியுள்ளது.

இது தொடர்பாக ஹர்பஜன் தெரிவிக்கையில், இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்ட போது என் மனம் வேதனைப் படவில்லை. மாறாக வியப்புத் தான் ஏற்பட்டது - என்றார்.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி, ஐந்து ஒரு நாள் மற்றும் ஒரே ஒரு 'ரி-20' ஆட்டம் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் ஆட்டம் இன்று ஹைதராபாத்தில் நடக்கிறது. முதலிரண்டு ஒரு நாள் ஆட்டத்துக்கான இந்திய அணியில் இருந்து அனுபவ சுழற்பந்துவீச்சாளரான ஹர்பஜன் சிங் நீக்கப்பட்டார். சமீப காலமாக இலக்கை வீழ்த்த திணறியதால்தான், தேர்வாளர்கள் இந்த முடிவை எடுக்க நேர்ந்தது.

இது குறித்து ஹர்பஜன் சிங் கூறியதாவது:

இங்கிலாந்துக்கு எதிரான முதலிரண்டு ஒரு நாள் ஆட்டத்துக்கு தேர்வு செய்யப்படாதது மனவேதனை அளிக்கவில்லை. மாறாக, வியப்பு தான் ஏற்படுத்தியது. எனது 'போர்ம்' குறித்து வீணாக விமர்சிக்கின்றனர். பொதுவாக, ஒரு நாள் ஆட்டத்தில் பந்து வீச்சாளர்களிடம் அதிகம் எதிர்பார்ப்பது தவறு. ஏனெனில்; ஒவ்வொரு ஆட்டத்திலும் 10 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகள் எடுப்பது கடினம். மாறாக, எதிரணியின் ஓட்ட வேட்டையை தடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாம். குறைந்த 'ஸ்கோர்' எடுத்த ஆட்டங்களில், பந்து வீச்சாளர்கள் அதிக இலக்குகள் வீழ்த்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

சமீபத்தில் அன்டிகுவாவில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் 10 பந்து பரிமாற்றங்களில் வெறும் 24 ஓட்டங்கள் கொடுத்து ஒரு இலக்கை கைப்பற்றினேன். இந்த ஆட்டத்தில் துடுப்பாட்டத்தில் 41 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு வித்திட்டேன். எனவே எனது 'போர்ம்' குறித்து வரும் சர்ச்சைகள் குறித்து கவலைப்படப் போவதில்லை. கடந்த 13 ஆண்டுகளாக இந்திய அணியின் வெற்றிக்கு என்னால் முடிந்த அளவு ஒத்துழைப்பு அளித்து வருகிறேன்.

இங்கிலாந்து தொடருக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இளம் வீரர்களுக்கு எனது வாழ்த்துக்கள். இளம் வீரர்களுடன், எனது அனுபவத்தை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அறிமுகமான காலகட்டத்தில், சச்சின், கங்குலி, கும்ளே உள்ளிட்ட மூத்த வீரர்கள் நிறைய ஆலோசனைகள் வழங்கினர். இவர்களது ஆலோசனைகள், போட்டியில் சாதிக்க உதவியது.

### பழிதீர்க்குமா?

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் விளையாடுகிறேன் என்பது முக்கியமல்ல. இங்கிலாந்து மண்ணில் சந்தித்த தோல்விக்கு இந்திய வீரர்கள் இந்த முறை பழிதீர்க்க வேண்டும் என்பதே எனது விருப்பம். இந்தத் தொடருக்கு திறமையான இளம் மற்றும் அனுபவ வீரர்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பதால், இங்கிலாந்து அணியை வீழ்த்தி பதிலடி கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். டெஸ்ட் அரங்கில், முதலிடத்தை அடைய, இந்திய வீரர்கள் கடுமையாக போராடினர். சமீபத்தில் இங்கிலாந்து மண்ணில் இழந்த முதலிடத்தை, மீண்டும் கைப்பற்றும் வ்ரை இந்திய வீரர்கள் ஓய்வில்லாமல் போராட வேண்டும்.

மூன்றாவது சம்பியன்ஸ் லீக் தொடரில், எனது தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. சச்சின் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இல்லாத நிலையில், கிண்ணம் வென்றிருப்பது உற்சாகமாக உள்ளது. 'ரி-20' ஆட்டங்களுக்கு அணித்தலைவராக இருப்பது சுலபமான காரியமல்ல. ஏனெனில் ஒவ்வொரு பந்தின் முடிவிலும் புதிய முடிவு எடுக்க வேண்டும் - என்றார்.

### மீண்டும் வருவார்

இங்கிலாந்திற்கு எதிரான ஒரு நாள் ஆட்டத்துக்கு ஹர்பஜன் சிங் வருவார் என்று சேவாக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு என்னை அணியிலிருந்து நீக்கியது எனக்கு நினைவுக்கு வருகிறது. அப்போது உள்நாட்டு கிரிக்கெட்டில் விளையாடி மீண்டும் உள்ளே நுழைந்தேன். அதுதான் ஒரே வழி. அதே போல் ஹர்பஜனும் மீண்டும் வருவார். நான் இப்போது தேசிய கிரிக்கெட் அக்கடமியில் காயத்திலிருந்து மீண்டு வருகிறேன். நான் அணிக்கு மீண்டும் திரும்பி வருவது பற்றி கால அளவை நிர்ணயிக்கவில்லை, ஆனால் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் விளையாடுவதற்கு தயாராகி வருகிறேன் என்று கூறினார் சேவாக்.

(15)

# வொட்சன் பொன்டிங் மோதல்

கிரிக்கெட். சுதாட்ட புகாரில் சிக்கியுள்ள பொன்டிங்கிற்கு புதிய தலைவலி ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையில் தொடர்பு இல்லை என்பதை இவர் நிரூபிக்க வேண்டும் என்று சக வீரர் வொட்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில் 'ஸ்பொட் பிக்சிங்கில்' ஈடுபட்ட பாகிஸ்தான் அணியின் சல்மான் பட், முகமது ஆசிப், முகமது ஆமிர் இவர்களுடன் பிடிபட்ட முகவர் மசார் மஜீத்திடம் லண்டன் நீதிமன்றில் விசாரணை நடந்து வருகிறது.

இதில் இந்தியாவின் ஹர்பஜன், யுவராஜ், ஆஸ்திரேலியாவின் பொன்டிங், பிரட் லீ மற்றும் மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் கிறிஸ் கெய்ல் ஆகியோருடன் தொடர்பு இருந்ததாக நீதிமன்றில் மசார் மஜீத் தெரிவித்தார். இதனை ஏற்க சம்பந்தப்பட்ட நாடுகளின் கிரிக்கெட் சபைகள் மறுத்து விட்டன. ஆனால் ஆஸ்திரேலிய வீரர்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டுள்ளது. பொன்டிங் தன் மீதான களங்கத்தை போக்க வேண்டுமென சக வீரர் வொட்சன் துணிச்சலாக கருத்து வெளியிட்டுள்ளார். இதுகுறித்து வொட்சன் கூறியது:

லண்டன் நீதிமன்றில் சுதாட்டம் தொடர்பாக வெளியான செய்திகள் மிகவும் அதிர்ச்சியாகவும், ஏமாற்றமாகவும் உள்ளது. இதில் பொன்டிங் குறித்து வெளியான சுதாட்ட செய்திகள் அவரது நேர்மை குறித்து சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எப்போது இந்த கேள்வி எழுந்து விட்டதோ, அப்போதே உங்களது நடத்தை குறித்து சந்தேகம் வந்து விட்டது என்று தான் அர்த்தம்.

ஒருவரது நேர்மை குறித்து சந்தேகம் வந்துவிட்டால், அவர் தனது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்க உடனடியாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். ஒருவேளை எனது பெயரை தெரிவித்து இருந்தால் அதை போக்குவதற்கான வேலைகளை செய்திருப்பேன். ஏனெனில் அதிகப்படியான மக்கள் கிரிக்கெட்டை தேர்வு செய்து விளையாடுகின்றனர். இந்த நிலையில் நீங்கள் விரைவில் குற்றமற்றவர் என்பதை நிரூபித்து வெளியில் வரவேண்டும். இது உங்களால் முடியும்.

கிரிக்கெட்டை நாம் எல்லோரும் நேசிக்கிறோம். இந்த நிலையில் மசார் மஜீத் வெளியிட்ட சுதாட்டம் குறித்த செய்திகள், எந்தளவுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்று எனக்குத் தெரியும். மொத்தத்தில் இவை கிரிக்கெட்டின் நேர்மைக்கு விடப்பட்ட சவால் ஆகும் - என்றார்.

(15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி செகராஜசிங்கம் பத்மாவதி (ரதி)



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்பொழுது "Florida வில் வசித்தவருமான செகராஜசிங்கம் பத்மாவதி (ரதி) கடந்த (11.10.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் மூத்தமகளும், சின்னத்தம்பி - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் (தெல்லிப்பழை தனலெட்சுமி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), காலஞ்சென்ற செகராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், பத்மநாதன் (U.K), சிவலோகநாயகி (U.S.A), ஜெயகுமாரன், ஜெயகௌரி(U.K), பிறேமகுமார் (CANADA) , குமுதினி (U.S.A), வசந்தா (U.S.A) ஆகியோரின் பாசமிகு தாயும், இந்திராணி (U.K), காலஞ்சென்ற சண்முகதாசா மற்றும் மணிவதனி, கார்த்திகேயன் (U.K), வதனி (Canada), பிரபாகரன் (U.S.A) ஆகியோரின் அன்பு மாமியும், மாணிக்கவல்லி (புஸ்பம்), காலஞ்சென்ற பத்மகோமதி (ரூபி) மற்றும் தங்கரட்ணம், காலஞ்சென்ற சோமநாதன் மற்றும் சேதுராஜன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், செகா, அமலன், அபிராமி, விஜெய், இந்து, கௌதமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
குடும்பத்தினர்.
மகன்: ஜெயகுமாரன் (ஜெயாஅண்ணை)

*48, மானிப்பாய் வீதி,*
*மருதனார்மடம்.*

## செய்யாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இறுதிச் சண்டையின்போது நாம் மனிதாபிமான நடவடிக்கைகளையே மேற்கொண்டோம். சிலர் இதையும் தவறு என்கின்றனர். இது தவறு என்றால், அதனையும் நாம் ஏற்கிறோம். சிவிலியன்கள் உயிரிழப்புகள் குறித்து எம்மீது குற்றஞ்சாட்டுவதை ஏற்க முடியாது. புலிகளுடன் இணைந்து சண்டையில் ஈடுபட்ட ரமேஷின் மனைவியே எமக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். சிவிலியன்களை நாம் கொன்றிருந்தால் ஒன்றரை இலட்சம் பேர் எமது பக்கத்துக்கு வருவார்களா?.

இது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு எமது தரப்பிலிருந்து இப்போது பதிலளிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறோம்.

இப்போதெல்லாம் ஊடகங்கள் ஊடாகத்தான் எமக்குப் பிடியாணை அனுப்புகின்றனர். எமது கையில் கொடுக்காமல் இவற்றை பத்திரிகைகளின் ஊடாக அனுப்புகின்றனர். புலிகளின் பணத்தை எடுத்துக் கொண்டு செயற்படும் பத்திரிகைகளே இவ்வாறான பிடியாணைகளை அனுப்புகின்றன - என்றார் ஜனாதிபதி.

(த-சி)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னரும் எந்தவொரு உறுப்பினரும் தமது சொத்து மற்றும் கடன் விவரங்களைத் தேர்தல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கவில்லை.

"இந்த மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் சகல உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களும் தமது சொத்து மற்றும் கடன் விவரங்களை சமர்ப்பிக்கத் தவறினால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" - என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

(உ-15)

**யாழ். மக்களுக்கு இதோ ஓர் வரப்பிரசாதம்.**
**உங்கள் கனவுக்களை நனவாக்க உங்களுடன் இணைகின்றது**



# ORIFLAME
## - SWEDEN -

சுவீடன் நாட்டு அழகுக் கலை உற்பத்திப் பொருள்க்ளை இலங்கையில் சந்தைப்படுத்துவதில் முதன்மையாக விளங்கும் ORIFLAME நிறுவனம் யாழ்ப்பாணத்தில் கால்பதித்து தனது ஒரு வருடத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.

**நீங்கள் ORIFLAME உடன் இணைவதன் மூலம்...**

- அழகு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.
- மேலதிக வரையறையற்ற வருமானம் உழைக்கலாம்.
- அழகுக்கலை பயிற்சிகளைக் கற்றுக் கொள்ளலாம்.
- வெளிநாடுகளுக்கு இலவச பயணத்தை மேற்கொள்ளலாம்.
- இன்னும் பல...

இலவச கருத்தரங்கு:-
இடம்: Oriflame யாழ். கிளை (187/30, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.)
காலம்: 16.10.2011 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மு.ப. 10 மணி

இவ்வரிய சந்தர்ப்பத்தில் ORIFLAME நிறுவனம் உங்களுக்காக ரூபா 490 முதலீட்டுடன் சுயாதீன தொழில் ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு எம்முடன் இணைபவர்களுக்கு இலவச பேசியல் செய்துவிடப்படும். அத்துடன் Bangkok இற்கு இலவச பயணத்தை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்படும்.

**முக்கிய குறிப்பு:** மாதர் சங்கத் தலைவிகள், கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனங்கள், மகளிர் எழுச்சி நிறுவனம், அழகுக்கலை நிபுணர்கள் மற்றும் பலர் எம்முடன் இணைந்து எங்கள் சேவையை மேலும் அதிகரிக்க உதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**072 7712604,**
**0777 712604**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
விஜயகுமாரி ஞானசிறி



திருமதி
வசந்தராணி சந்திரசேகரம்

கிளிநொச்சி கல்வி வலயத்தில் நல்லாசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு ஜனாதிபதியினால் **'பிரதீபா பிரபா'** விருது வழங்கி கௌரவிக்கப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களான **திருமதி விஜயகுமாரி ஞானசிறி** அவர்களையும் **திருமதி வசந்தராணி சந்திரசேகரம்** அவர்களையும் மனதார வாழ்த்துவதோடு இன்னும் பல உயர்வுகளைப் பெற்று சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**பாராட்டி வாழ்த்துவோர்:-**
ஆசிரியர் நலன்புரி சங்கம்,
கிளி/பளை மத்திய கல்லூரி, பளை.

## கண்ணீர் அஞ்சலி



ஜே/91 மற்றும் ஜே/92 பிரிவுகளின் கிராம உத்தியோகத்தரும் நலன்புரி சங்க உபசெயலாளருமான
*பு. தஜிதரன் அவர்களின் அன்புத் தாய்*

**திருமதி வரதலட்சுமி புஸ்பராஜா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
நல்லூர்.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்
நலன்புரி சங்கம்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கும் திகதி பிற்போடல்

எமது சபையால் 2011.10.04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் 2011.10.14ஆம் திகதி பி.ப. ஒரு மணி வெள்ளிக்கிழமை (இன்று) தலைமை அலுவலகத்தில் கேள்வி திறக்கப்படும் என விளம்பரம் செய்து இருந்தோம். தவிர்க்க முடியாத காரணத்தினால் அதே கேள்வி அறிவித்தல் 19.10.2011ஆம் திகதி புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு கேள்வி திறந்து பார்க்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

*தி. பிரகாஷ்,*
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

*13.10.2011*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சின்னத்துரை இராசமணி



மலர்வு: 04.09.1931
உதிர்வு: 25.09.2010
திதி: துதியை

ஆண்டொன்று போனதோ — அம்மா
ஆறவில்லை எம் இதயம்
இன்றுவரை நம்பமுடியவில்லை — நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர்கள் என்று
புன்சிரிப்போடு எம்மை வளர்த்தீரே — உம்
புன்சிரிப்பை காண ஏங்குகின்றோம்!
வாழ்ந்திடும் காலமெல்லாம் — நாம்
மறப்போமா உம் முகத்தை
வருந்தி அழைக்கின்றோம் — எம்முடன்
திரும்பவும் வந்து சேர்ந்திடுவீர்கள் — அம்மா!

அன்னாரின் ஓராண்டு நினைவாக இன்று (14.10.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]
[illegible] ஒழுங்கை,
மல்லாகம்.

*உங்கள் பிரிவால் தினமும் வருந்தும்*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போடப்பட்டது. எனினும், அந்தப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றப்பட்டால் மாத்திரம் போதாது. அப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்படவேண்டும். அப்போதே முழுமையான தேர்தல் ஒன்றை நடத்தமுடியும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி.சுமணசிறி தெரிவித்தார்.

இருந்தபோதிலும், அந்த இரண்டு பிரதேச சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பான உற்சாகத்துடன் எவரும் செயற்படுவதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

அந்த இரண்டு பிரதேச சபைகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கண்ணிவெடி அகற்றல் பணிகள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அலுவலகத்திடம் இருந்து தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிக்கை ஒன்று கிடைத்தது. இரண்டு மாதங்களான போதிலும் அங்கு தேர்தல் நடத்துவது குறித்து இதுவரை எவ்வித தீர்மானங்களோ அல்லது கலந்துரையாடல்களோ மேற்கொள்ளப்படாதுள்ளன என்றும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த இரண்டு பிரதேச சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பாக அமைச்சு மட்டத்தில் இதுவரை எவ்விதத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஊடகச் செயலாளர் வசீர் கூறினார். இந்த நிலையில், மீள்குடியேற்றப்படாமல் எஞ்சியிருக்கும் 7ஆயிரம் பேரையும் இந்த வருடத்துக்குள் மீள் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார். (த-சி)


இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்
CEYLON ELECTRICITY BOARD NOTHERN PROVINCE STAFF WELFARE AND SPORTS SOCIETY

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வடமாகாண இலங்கை மின்சார சபை ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தினால் 11.10.2011 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்:

| | அதிர்ஷ்ட சீட்டு இல. |
|---|---|
| 1ஆம் பரிசு – வர்ணத் தொலைக்காட்சிப்பெட்டி | 4450 |
| 2ஆம் பரிசு – காஸ் அடுப்பு | 5652 |
| 3ஆம் பரிசு – மின் விசிறி | 11677 |

**20 ஆறுதல் பரிசுகளின் சீட்டு இலக்கங்கள்:**

1567, 8835, 5678, 7149, 042, 6709, 5309, 1648, 3911, 2708, 8658, 992, 7087, 4121, 2464, 652, 8521, 2229, 278, 11386.

அதிர்ஷ்டசாலிகள் உரிய ஆதாரங்களைக் காட்டி பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) இலங்கை மின்சார சபை, 500, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

தலைவர்,
ப.செந்தில்செல்வன்,
மின் அத்தியட்சகர்,
ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்.

இலங்கை மின்சார சபை,
500, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூத்த உறுப்பினரும் ஆரம்பகால தலைவருமான

**அமரர் சின்னப்பு மரியரட்ணம்**

அவர்களின் திடீர் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம்

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக வேண்டுதல் செய்வதோடு, அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
52, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 . 06 . 1929



ஆண்டவன் அடியில் 27 . 10 . 2010

**திருமதி பொன்னுத்துரை சிவயோகம்**

(துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய தர்மகர்த்தாவின் மனைவி)

(திதி : சதுர்த்தி)

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தாலும் அம்மாவைப் போலாகுமா?
திக்கெல்லாம் தேடி திக்கற்றவர்களாக அலைகிறோம்
அம்மாவின் பொன்னான முகத்தை இனி எப்பிறப்பில் காண்போம்.
எம் வேதனை நீங்கிட விண்ணைத் தாண்டி வருவீர்களா?

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## காணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிழைப்பு நடத்துவதற்காகத் திசை திருப்புகின்றன. - இவ்வாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் நேற்று குற்றஞ்சாட்டினார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் காணி, இடங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்திருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையானது, தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் சூழ்ச்சியாகவே கருதுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது. அத்துடன், ஏனைய தமிழ்க் கட்சிகளும் இதனையே குறிப்பிட்டிருந்தன.

இந்த நிலையில், காணிப்பதிவு நடவடிக்கை தொடர்பாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனிடம் நாம் வினவினோம்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்களை எங்கள் சகோதரர்களாகவே நாங்கள் நினைக்கின்றோம். 30 வருட கால யுத்தத்தினால் தமிழ் மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டனர். இவ்வாறு இழப்புகளையும், அழிவுகளையும் சந்தித்து, பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளை இயன்றளவு தீர்த்துவைப்பதற்கே அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகிறது.

இந்த அடிப்படையிலேயே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவுகின்ற காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அங்கு காணி பதிவு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம்.

இந்த நடவடிக்கையை பிழையாகப் புரிந்துகொண்டுள் சில தமிழ்த் தலைமைகள் இதனைத் திசை திருப்பி குழப்பங்களை ஏற்படுத்தப் பார்க்கின்றன. உண்மையிலேயே தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க அரசு முயற்சி செய்யும் வேளையில், அதனைத் தடுப்பதற்குத் தமிழ்த் தலைமைகள் முயற்சிப்பது ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே நான் கருதுகிறேன். யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் தமிழர்களின் பிரச்சினைகளை அரசு தீர்த்துவிட்டால், இவ்வாறான பிழையான சிந்தனை கொண்ட தமிழ்த் தலைமைகளுக்குக் குறைகாண்பதற்கு வேறு வழிகள் இல்லாதுபோய்விடும்.

இதன் காரணமாக அரசின் தூய நோக்கமுடைய திட்டங்களில் தமிழ்த் தலைமைகள் குறைகாண ஆரம்பித்துள்ளன.

இந்தக் காணிப் பதிவு நடவடிக்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முடிந்தவுடன், நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் மேற்கொள்ளவுள்ளோம். இந்த நடவடிக்கையே எதிர்வரும் இரண்டு வருடங்களில் நிறைவுசெய்ய எண்ணியுள்ளோம்.

அத்துடன், யுத்தத்தால் பலரது ஆவணங்கள் காணாமற்போயுள்ளன. இந்நிலையில், அவர்களுக்கு அவற்றை மீளப் பெற்றுக்கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இதேவேளை, யுத்தத்தினால் இந்தியா உட்பட வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள மக்கள் மீண்டும் இலங்கைக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளனர். அவர்களிடம் உறுதிப் பத்திரங்களும், உரிய காணி ஆவணங்களும் இல்லாத பட்சத்தில் அவர்களது சொந்தக் காணிகளை மீள வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்படும். எனினும், அதற்கு எதிர்காலத்தில் மாற்றுவழிகளைக் கையாளவும் திட்டமிட்டு வருகிறோம் என்று கூறினார் அமைச்சர்.

(த-சி)


## தவறிவிட்டது

யோகராசா அருள்பிரதீப் செர்ணவடலி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் பெயர் முகவரியுடைய தே.அ.அ.இல. (842844096V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் T.P இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்புடைத்துதவவும்.

தொடர்புக்கு: 0778010228

## வீடு வாடகைக்கு

தட்டாதெருவை அண்மித்ததாக நல்ல சூழலில் அமைந்த வீட்டின் ஒரு பகுதி சிறிய பண்பான குடும்பத்தினருக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: 0753634032


# கல்முனையில் சுழற்சி முறையில் முதல்வரை நியமித்தது மு.கா.

## முதல் 2 வருடங்களுக்கு சிராஸ்; அடுத்து நிஸாம்

கல்முனை, ஒக்.14

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கல்முனை மாநகர சபையைக் கைப்பற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரண்டு வருட சுழற்சி அடிப்படையில் அந்தச்சபைக்கு முதல்வரை நியமித்துள்ளது.

அதன்படி விருப்பு வாக்குகள் அடிப்படையில் முதலாம் இடத்தில் உள்ள சிராஸ் மீராசாஹிப் முதல் இரண்டு வருடங்களுக்கும், இரண்டாம் இடத்தில் உள்ள சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் அடுத்த இரண்டு வருடங்களுக்கும் முதல்வர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, முதல் இரண்டு வருடங்களுக்கு நிஸாம் காரியப்பரை பிரதி முதல்வராகவும் முஸ்லிம் காங்கிரஸ் நியமித்துள்ளது.

இது தொடர்பில் கடந்த இரண்டு, மூன்று தினங்களாகக் கூடி ஆராய்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீடம் நேற்று இந்தத் திதீர்மானத்தை எடுத்தது எனக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து சிராஸை முதல்வராக நியமிக்குமாறு கோரி சாய்ந்தமருது பிரதேசத்தில் மேற்கொண்டுவந்த ஹர்த்தால் நடவடிக்கையும் முடிவுக்குவந்தது. (த-சி)

# மரண அறிவித்தல்கள்

## பஞ்சாட்சரம் இராசலட்சுமி



இன்பர்சிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் இராசலட்சுமி நேற்று (13.10.2011) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்புமூர்த்தி - செல்வம் தம்பதியரின் அன்பு மகளும் பஞ்சாட்சரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - காளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சேகர், குமுதினி, தவசேகரன், மகராஜ், தாரணி ஆகியோரின் அன்பு தாயும் இரத்தினவடிவேல், அன்னராணி, சித்திரவடிவேல், மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2011) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இன்பர்சிட்டி,*
*பருத்தித்துறை.*

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலுப்பிள்ளை தம்பிஐயா



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் துன்னாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தம்பிஐயா நேற்று (13.10.2011) வியாழக்கிழமை இரவு இறைவனடி எய்தினார்.

அன்னார் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் ராஜ்மோகன் (இத்தாலி), தபேசன், தர்சினி, துசியந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலினி, றம்பா, இலங்கேஸ்வரன் (சுவிஸ்), கௌசலா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சோதிமுத்து, சின்னமணி, கணேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகாம்பிகை, தங்கவடிவேல், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் மைத்துனரும் மதுசியா, ஜனுசியா, சாருஜா, சரண்ஜா, அபர்ணா, வர்சனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்னாலை வேருண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி தர்மலிங்கம் யோகேஸ்வரி



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் யோகேஸ்வரி நேற்று (13.10.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - கணேஸ்வரியின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் - சிவஞானபூரணத்தின் அன்பு மருமகளும், தர்மலிங்கத்தின் (அமைச்சர்) பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தனக்கிரியைக்காக பூதவுடல் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

இணுவில் கிழக்கு,
அங்களப்பாய்.

தகவல்:
இ.தர்மலிங்கம் (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை நிர்ணய விவகாரத்தை உயர் மட்டக் குழு தீர்மானிக்கும்

வலி-வடக்கு,ஒக்,14

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு, சங்கானைப் பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றுக்கிடையிலான எல்லை நிர்ணயக் கூட்டம் நேற்று முடிவுகள் எவையும் எட்டப்படாமல் முடிந்தது. பதிலாக உயர்மட்டக் குழு ஒன்று அமைத்து அதன் மூலம் முடிவு எட்டுவதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான மு.சந்திரகுமார் தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

எதிர்கால நன்மை கருதியும், அபிவிருத்தித் திட்டங்கள், புனரமைப்புப் பணிகள் ஆகியவற்றைச் சுலபமாக முன்னெடுக்க வசதியாகவும் வலி. வடக்குப் பிரதேச செயலக எல்லைக்குள் உள்ள சில கிராம அலுவலர் பிரிவுகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுடன் இணைப்பது குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டது. இவற்றை இவ்வாறு இணைப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் அதிகாரிகளால் எடுத்துரைக்கப்பட்டது. எனினும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிலர் இதனை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்து இதற்கென குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் மக்களின் கருத்துக்கள் ஆராயப்பட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி வலி.மேற்கு, வலி.தென் மேற்கு பிரதேச செயலர்கள், உரிய பகுதிகளின் கிராம அலுவலர்கள், பிரதேச சபைகளின் பிரதிநிதிகள், அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. (த-10-86)

## இந்தியாவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

தேர்தல் திணைக்களத்தினால் தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாக்காளர்களைப் பதிவு செய்யும் விசேட பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதன் மூலம் யுத்தத்தினால் இந்த இரண்டு பிரதேசங்களையும் விட்டு வெளியேறியவர்கள் இந்த விசேட திட்டத்தின் கீழ் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இதனை விட இலங்கையைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் உள்ளவர்கள் இங்கு வாக்காளராகப் பதிய விரும்பினால் தமது கடவுச்சீட்டு இலக்கத்தைக் கொடுத்துப் பதிவை மேற்கொள்ள முடியும்.

ஆனால் இந்தியாவில் உள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழ அகதிகள் இந்தப் பதிவை மேற்கொள் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் அவர்களில் பலர் இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக கப்பல் மூலமாகவே இந்தியாவுக்குச் சென்றனர். இதனால் இவர்கள் அகதி முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டனர். இவர்களுக்குக் கடவுச்சீட்டு வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக தேர்தல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட புதிய விண்ணப்பப்படிவம் மூலம் இந்தியாவில் உள்ள ஈழ அகதிகளை வாக்காளர்களாகப் பதிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் கொழும்பில் தேர்தல் திணைக்களத்தில் தமிழ்க்கட்சிகளுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் இடம் பெற்ற சந்திப்பின்போது இந்தியாவில் உள்ள ஈழ அகதிகளையும் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களையும் வாக்காளராகப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

அதேவேளை வடபகுதியை விட்டு வெளியேறியுள்ள முஸ்லிம் மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் வாக்காளராகப் பதிய வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை முன்வைத்திருந்தது.

இதனடிப்படையிலேயே தேர்தல் ஆணையாளரினால் விசேட படிவம் வெளியிடப்பட்டிருந்தது. இதன் மூலம் வெளிநாடுகளில் உள்ளவர்களும், நாட்டுக்குள் இடம் பெயர்ந்து உள்ளவர்களும் வாக்காளராகப் பதிய முடியும். ஆயினும் இந்தியாவில் உள்ள ஈழ அகதிகள் அவ்வாறு பதிவு செய்ய முடியாது. இது தொடர்பில் தேர்தல் ஆணையாளரும், தமிழ் அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள ஈழ அகதிகளும் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டால் தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த-15)

## உயர்நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தமது மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நா. மனித உரிமைகள் குழுவில் முறையிட உள்ளது. தமது தரப்பு வாதத்தைச் சொல்வதற்கு இடமளிக்கப்படாததுடன் நியாயம் பெறக் கால அவகாசம் வழங்கப்படவில்லை என்று கருதும் கூட்டமைப்பு அதற்கு எதிராகவே ஐ.நாவை நாட உள்ளது.

பொது மற்றும் அரசியல் உரிமை தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை உறுப்பு நாடுகள் பின்பற்றுகின்றனவா என்பதைக் கண்காணித்து, அதற்கு எதிராகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரிப்பதே ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் பணி.

பொது மற்றும் அரசியல் உரிமை தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக இருந்த காலத்தில் இலங்கையின் சார்பில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கையெழுத்திட்டுள்ளார். எனவே அந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டு இலங்கை நடக்கவேண்டும்.

இந்த உடன்படிக்கையானது ஐ.நாவின் அடிப்படை உரிமைகள் தொடர்பான வரையறைகளைப் பாதுகாப்பது. இதில் கையெழுத்திட்டுள்ள எந்தவொரு நாட்டின் குடிமகனோ அல்லது அரசுகளோ உடன்படிக்கையின் சரத்துக்களை மீறினால் அதற்கு எதிராக முறையிடமுடியும்.

ராவய சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனுக்கு எதிராக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்தும் நல்லரத்தினம் சிங்கராஜர் என்ற நபருக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்தும் ஏற்கனவே இந்த ஐ.நா. மனித உரிமைகள் குழுவில் முறையிடப்பட்டிருந்தது. அதனை விசாரித்த குழு உயர் நீதிமன்றம் வழங்கிய அந்தத் தீர்ப்புக்கள் தவறானவை என்று அறிவித்ததுடன் 3 மாதகாலத்துக்குள் அந்த வழக்குகளை விசாரித்து உடனடியாக சரியான தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தது.

ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் முடிவை இலங்கை செயற்படுத்தவில்லை. அதனைச் செயற்படுத்தாதமை குறித்து ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதனை விசாரித்த அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, குறித்த சர்வதேச உடன்படிக்கையில் தனிநபரான சந்திரிகா குமாரதுங்க கையெழுத்திட்டமை இலங்கை அரசைக் கட்டுப்படுத்தாது என்று அறிவித்தார். அவர் கையெழுத்திட்டதை ஏற்றுக்கொண்டு அந்த உடன்படிக்கையை இலங்கை நாடாளுமன்றம் அங்கீகரித்தால் மட்டுமே அது நாட்டுக்குள் செல்லுபடியாகும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே தமது மனு மீதான தீர்ப்பை எதிர்த்து ஐ.நா. மனித உரிமைகள் குழுவிடம் தமிழ்க் கூட்டமைப்பு முறையிட உள்ளது. (உ)

## ஐரோப்பிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றாண்டில் இப்படியும் ஒரு காட்டுமிராண்டித்தனம் உண்டா? என்று கேள்வியை எழுப்பினார்கள்.

அதே நேரத்தில் இந்த நிகழ்வில் பங்குபற்றிய இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க அந்த ஆவணப்படத்தை மறுதலித்தது மட்டுமல்லாமல், இது ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஒளிபரப்பப்படுவது அநீதி என்றும், வழமை போல் தமிழர்களின் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்றும் பயங்கரவாதிகளுக்கு இடமளிப்பதாகவும் தெரிவித்தார்.

அவரின் கூற்றுக்கு ஆதரவு தெரிவிப்பது போல் பிரிட்டன் கொன்சவேட்டிவ் கட்சியை சேர்ந்த வன் கோடன் ஆதரவாகப் பேசினார்.

அதேநேரத்தில் இந்த நிகழ்வில் பங்குபற்றிய திருமதி அனா கோம்ஸ், திருமதி லைமா அன்ட்ரிகினி, ராவுல் றோம் வைல், திரு போல் மூர்பி, திருமதி மாரி யேற்றி ஷேக்கி ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை அரசின் வாதத்தை கண்டித்தது மட்டுமல்லாமல் அவர்களின் செயல்கள் உலகச் சட்டங்களை மதிக்கவில்லை என்றும் கூறினார்கள்.

பால் மூர்பி இலங்கை அரசே ஒரு பயங்கரவாத அரசு என்றும் இலங்கை அரசு தொடர்ந்தும் பல வழிகளிலும் தமது அடக்கு முறைகளைத் தொடர்வதாகவும், சர்வதேசம் இதில் தலையிடவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் பங்குபற்றிய மனித நேய அமைப்புகள் போர் முடிந்து இரண்டு வருடங்களுக்குப் பின்பும் இலங்கை அரசு எந்த வகையிலும் ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுகோளுக்கு செவிசாய்க்கவில்லை என்றும், தொடர்ந்து வேறு வழிகளில் இலங்கை தமிழ் மக்களை அடக்கி வாழ்வதாகவும், தமிழர்களை அவர்களின் நிலங்களில் மீள்குடியேற்றம் செய்யத் தவறுவதாகவும், இலங்கையில் ஒரு சுயாதீன குழுவை உருவாக்கிவிட்டு காலம் கடத்துவதாகவும் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடாளுமன்றம் அறிக்கைகளை மட்டும் விட்டுக்கொண்டு இருப்பதை விட்டு விட்டு சிறிலங்கா அரசு மீது இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றம், மனித நேயத்துக்கு எதிரான குற்றத்துக்கு விடை தேடவேண்டும் என்றும் கூறினர்.

மன்னிப்புச் சபையின் பேச்சாளர் இலங்கையில் இந்த இனப்பிரச்சினைக்கான மூல காரணங்களையும் ஆராய்ந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று கூறினார். (த-10)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
MyWay ஆசிரியரிடம் நேரடியாக பயிற்சிபெற.... கடைசி சந்தர்ப்பம்
A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளலாம்
ஆங்கிலம் கதைக்க வேண்டுமா வேண்டாமா... தீர்மானிக்க இது கடைசி சந்தர்ப்பம்...
திங்கள், புதன், வெள்ளி பிரிவில் சேர 14.10.2011 வெள்ளிக்கிழமை இன்றும்
சனி, ஞாயிறு பிரிவில் சேர 15.10.2011 சனிக்கிழமை நாளையும் கடைசி நாளாகும்
காலம் : 1-3 மாதங்கள் கட்டணம் : 3000 மட்டும்
திங்கள்,புதன், வெள்ளி - 4 பிரிவுகள் 8-9.30, 9.30-11, 3-4.30, 4.30-6
சனி, ஞாயிறு - 4 பிரிவுகள் 8-10, 10-12, 2-4, 4-6
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சந்திரகுமார் (ஐயக்கோன் சந்திரன்)

(மினி பஸ் நேரக் காப்பாளர்)

உடுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை சந்திரகுமார் நேற்று (13.10.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (ஐயக்கோன்-சட்டத்தரனி) தவமணி தம்பதியரின் புதல்வனும் புஷ்பாவின் அன்புக் கணவரும் ஜெயம், சிவம், அனுஷா(வைத்தியர்-யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் தந்தையும், தாரணி, ஜெயந்தி, யோகநாதன் (விரிவுரையாளர்-யாழ். மருத்துவ பீடம்) ஆகியோரின் மாமனும், செல்வதேவி, செல்வலஷ்மி, செல்வகுமார் (தம்பர்) காலஞ்சென்ற தவக்குமார் மற்றும் ஆனந்தகுமார், இரட்ணகுமார், வசந்தகுமார், விஜயகுமார், செல்வரஞ்சினி, செல்வராணி, நந்தகுமார், ஆகியோரின் சகோதரனும் மைத்ரேயி, அக்ஷயன், கௌதம், கிஷான், ஆருஷன், அக்ஷயா, ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

கணக்கீடு
நி.நபாலகஜன்
H.N.Dip in Acc
A/L 2012 & DAY, A/L 2013
"வங்கி இணக்கக் கூற்று"
சனி, ஞாயிறு 3-4 p.m
ஆரம்பம்:- நாளை 3p.m
College of Commerce
(கந்தரோடை வீதி, சுன்னாகம்)

BARATHY
கல்வி நிறுவனம்
சித்தன்கேணி
A/L 2012 - 2013
விவசாயம்
ம.விஷ்ணுதேவன்
2012
திங், செவ், வெள்ளி
3.45 p.m
2013 -
திங், செவ், வெள்ளி
4.45 p.m
ஆரம்பம் -
14.10.2011

மீண்டும் யாழ்.மண்ணில்...
அரசியல் - K.சுகாஷ் (LLB)
2008 வரை யாழ்முன்னணி ஆசிரியர்
தற்போதைய கொழும்பின் பிரபல ஆசிரியர்
வகுப்புக்கள் நடைபெறுகின்றன
• D.C.M யாழ்.நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
• BITSMANS மானிப்பாய் • SUBRA சித்தன்கேணி
2012 - இலங்கை அரசியல், Paper Class
2013 - ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்

விற்பனையாகிறது
தரம் 9 மாகாண மட்டப் பரீட்சை கடந்த கால மாகாண மட்ட வினா விடைகள் விற்பனையாகிறது.
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.


புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
IELTS
GENERAL /ACADEMIC
Full Time & Part Time
British Council test registered centre.
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
DIPLOMA IN ENGLISH
Duration : 3 Month
* ஒவ்வொறு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்
* மாணவர்களின் தேவைக்கு ஏற்ப வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்
Weekend Batch-15.10.2011(Saturday)
Weekday Batch-17.10.2011(Monday)
LONDON METROPOLITAN COLLEGE
No:197,Arasady Road,Jaffna
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230, 021 753 8395



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலைகளும் அதன் மருத்துவக் குணங்களும்





### துளசி

★ ஜீரண கோளாறுகள், காய்ச்சல், இருமல், ஈரல் சம்பந்தமா[illegible]ய்கள், காதுவலி (ம[illegible])க்குச் சிறந்தது.

★ [illegible] உள்ள விஷத் தன்மையை வெளியேற்றி சுத்தம் செய்கின்றது.

### வில்வம்

★ காய்ச்சல், அனீமியா, மஞ்சள் காமாலை, சீதபேதி போன்றவற்றிற்குச் சிறந்தது.

★ காலரா தடுப்பு மருந்தாக வில்வம் செயல்படுகிறது. சிவன் கோயில்களில் வில்வ இலை பூசைப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

### அருகம்புல்

★ எல்லா நோய்களுக்கும் ஏற்ற சிறந்த மருந்து. காலையில் 9 மணிக்கு பசி ஆரம்பித்தவுடன் வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும். பசிப்பதற்கு முந்தியே சாப்பிடுவது தவறு.

★ அருகம்புல் சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்து ஒரு பழம் சாப்பிட்டால் போதும். அடுத்து மதியச் சாப்பாடு தான். இந்த மாதிரி செய்தால் எல்லா நோய்களும் குணமடையும்.

★ உடல் எடை குறைய, கொழுப்புக் குறைய, நரம்புத் தளர்ச்சி நீங்க, இரத்தப் புற்று குணமடைய அருகம்புல்



ஒரு உலகப் புகழ்வாய்ந்தது.

★ இரத்தத்தில் ஹீமோகுளோபன் அதிகாக்கச் செய்வதில் சிறந்தது அருகம் புல்தான்.

★ தோல் வியாதிகள் அனைத்தும் அருகம்புல்லில் நீங்கும்.

★ இரத்தத்தில் உள்ள விஷத் தன்மைகளை வெளியேற்றுவதில் திறமையானது.

### அரச இலை

★ ஏழைகளின் பானம் அரச இலைச் சாறு, நன்றாக மலமிளக்கி, உடலை குளிர்ச்சியடையச் செய்கிறது.

★ கர்ப்பப்பைக் கோளாறுகள் மறையும். காய்ச்சலுக்கும் நல்லது.

★ அரச மரத்தின் பழங்கள் மலட்டுத் தன்மையை நீக்கவல்லன.

### பூவரசு

★ நல்ல பானம், தீக்காயங்கள், புண்கள், தோல் வியாதிகள், தொழுநோய் எல்லாவற்றிற்கும் இந்த இலையை அரைத்துப் பூசலாம்.

★ சாறும் குடிக்க வேண்டும். பேதி, சீதபேதிக்கு சாறு மிகவும் சிறந்தது.

### கல்யாணமுருங்கை

★ அதிகமான பித்தத்தை நீக்கும். முடி நரைக்காமலிருக்க உதவுகிறது. காய்ச்சலைக் குறைக்கும்.

★ நீர் படிப்பும், மலமிளக்கி, மாதவிடாய்த் தொல்லையை நீக்கும் கிருமிகளை வெளியேற்றும். வீக்கங்களை குறைக்கும்.

★ நீரிழிவு, சீதபேதி, வாதம் குணமடையும், 17 வயது வரை வயதுக்கு வராத பெண்களுக்கு இதன் சாறு நல்ல பலன் தருகின்றது.

### கொத்தமல்லி

★ இதுவும் நல்ல பானம். பசியைத் தூண்டும், பித்தம் குறையும்.

★ காய்ச்சல், சளி, இருமல், மூலம், வாதம், நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

### கறிவேப்பிலை

★ நல்ல பானம், பேதி, சீதபேதி, காய்ச் சல், எச்சல், ஈரல் கோளாறுகள் மறையும்.

### புதினா

★ நல்ல பானம். சிறுநீர் பிரச்சினை, ஜீரணக் கோளாறு, உஷ்ண நோய்கள் மறையும். சிறந்த மலமிளக்கி.

### கற்பூர வல்லி

★ மிகச் சிறந்த இருமல் மருந்து.

★ 5 இலைகளை அப்படியே சாப்பிட்டால் உடனே மூக்கடைப்பு, தொண்டை வறட்சி, இருமல் மறையும்.

★ புகழ்பெற்ற இருமல் மருந்துகளைப் போல் விரைவாகச் செயல்புரியும்.

### வல்லாரை

★ நல்ல பானம், எல்லா நோய்களை யும் நீக்கும். மஞ்சள் காமாலை, அல்சர், தொழுநோய், யானைக்கால் வியாதி, பேதி, நரம்புத்தளர்ச்சி, ஞாபக சக்தி முதலியவற்றுக்கு சிறந்தது.

★ ஒரு நேரத்துக்கு பத்து இலைகள் போதும்.

### கண்டங்கத்தி

★ காசநோய், ஆஸ்துமா, மார்புச் சளி, காய்ச்சல், தொழுநோய், இரத்த அழுத்தம், பக்கவாதம், கல்லீரல் நோய்கள் முதலியவற்றுக்கு மிகவும் சிறந்தது. ஒரு நேரத்துக்குப் பத்து இலைகள் போதும்.

### தூதுவளை

★ நரம்புத் தளர்ச்சி மறையும், மார்புச் சளி அகற்றும், தோல் வியாதிக்கும் நல்லது.

★ குழந்தைகளுடைய மூளை வளர்ச்சிக்கும், ஞாபக சக்தியை வளர்ப்பதற்கும் இது சிறந்த பானம். ஒரு நேரத்துக்கு பத்து இலைகள் போதும்.

★ காது மந்தம், நமைச்சல், உடல் இளைப்பு முதலியவற்றிற்கும் தூதுவேளை நல்லது.

### மஞ்சள் கரிசலாங்கண்ணி

★ காமாலை, கண்கோளாறு, கல்லீரல் கோளாறு முதலியவற்றிற்கு சிறந்தது.

### செம்பருத்தி

★ மாதவிடாய்த் தொல்லைகளையும், சிறுநீர் பிரச்சனைகளையும் குணப்படுத்தும், உடலின் உள்ளே வெளியே உள்ள வீக்கங்களை குணப்படுத்தும், முக்கியமான உடலுறுப்புகளின் மேலுள்ள பாதுகாப்பான சவ்வுகளை பாதுகாக்கிறது.

★ இதன் பூக்களையும் சாப்பிடலாம் அதில் தங்கச் சத்து நிரம்பியுள்ளது. பூவிலுள்ள மகரந்தத்தை நீக்கிவிடவும்.

### மணத்தக்காளி கீரை

★ இதுவும் ஒரு சிறந்த பானம். ஜீரணக் கோளாறுகள், வாய்வுத் தொல்லைகள், புற்றுநோய், அல்சர், ஈரல் கோளாறுகள், இருமல், அனீமியா, தோல் வியாதிகள் முதலியவற்றுக்கு நல்லது.

★ உடலுக்கு உள்ளே, வெளியே உள்ள வீக்கங்களை குணப்படுத்தும், குளிர் தாங்கும் சக்தியை அதிகரிக்கிறது.

★ காயங்களுக்கும், புண்களுக்கும் இலைச்சாறு தடவலாம். அரைத்தும் கட்டலாம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுபத்தைந்து வயதைக் காணும் எழுச்சித் தந்தை ஆர்.எம்.என்.



எழுச்சித் தந்தை ஆர்.எம்.என். என மதிக்கப்படும் மாவை ஆர்.எம்.நாகலிங்கம் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தலைமைதாங்கி வளர்க்கப்பட்டு வருகின்ற மாவை சமூக எழுச்சி இயக்கத்தின் ஆறு அம்சக் கோட்பாடுகளின் ஒன்றாக இருப்பதுதான் சமயம், ஆன்மிகம், ஒழுக்கம், கலாசாரம், பண்பாடு, வாழ்வியல் சிந்தனைகளும் வழிகாட்டலும்.

ஆர்.எம்.என். தனது சொந்த வாழ்வியலில் கடைப்பிடித்துவரும் அனுபவத்தின் மூலம் பிறந்ததுதான் இக்கோட்பாடு என்றால் மிகையாகாது.

சமூக நிறுவனமொன்றின் மூலம் அதன் பயனாளி மக்கள் சமூக அந்தஸ்தால், கல்வி மேம்பாட்டால், தொழில் வளர்ச்சியால், பொருளாதார மேம்பாட்டால் எவ்வளவுதான் வளர்ச்சி பெற்றாலும் தமது வாழ்வியல் கொள்கைகளான உயரிய ஒழுக்கத்தைப் பேணுதல், தமது கலாசார பாண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்த்தல் போன்ற துறைகளில் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்ளாவிடின் ஏனைய வளர்ச்சிகள் நிலைக்காமல் பயனற்றனவாகிவிடும் என்ற உண்மையை உணர்ந்தார்.

இதன் பயனாக இந்தக் கோட்பாட்டை அனுசரிப்பதை வழிப்படுத்தி வருகின்றார்.

இவரது சமய வளர்ச்சிக்கான பங்களிப்பு, ஆன்மீக வளர்ச்சிக்கான பங்களிப்பு, கலைகலாசாரத்துக்கான பங்களிப்பு, பண்பாட்டு விழுமியங்களுக்கான பங்களிப்பு, மொழியின் வளர்ச்சிக்கான பங்களிப்பு, சமத்துவம் பேணுதலுக்கான பங்களிப்பு எனும் இவை எல்லாம் அவரது தாயாரின் வளர்ப்பின் மூலம் வளர்த்துக் கொண்ட சிந்தனைத் திறனின் விளைவு என்றே சொல்லலாம்.

தெல்லிப்பழை, மாவிட்டபுரத்தில் முருகேசு கற்பகம் தம்பதிகளின் ஏக புத்திரனாக 14.10.1936 இல் பிறந்த ஆர்.எம்.என். மாவிட்டபுரம் அமெரிக்கன் மிசன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்றவர்.

கூட்டுறவுத்துறையில் மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் நடைபெற்ற பயிற்சி நெறிகளில் பங்குபற்றி அப்பரீட்சை ஒவ்வொன்றிலும் முதன்மை பெற்றவர். அதன் பேறாகத் திருகோணமலைக் கூட்டுறவுக் கல்லூரி, யாழ்.கூட்டுறவுக் கல்லூரி, தேசிய பொல்கொல்லைக் கூட்டுறவுக் கல்லூரி என்பவற்றில் கணக்கியல், முகாமைத்துவத் துறைகளில் விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கூட்டுறவுத் துறைக்கு 1960-1980 வரை இருபது ஆண்டுகள் பணிபுரிந்தவர்.

கணக்கியல் துறையில் பெற்ற கல்வியின் பேறாகக் கணக்காளராகவும், முகாமையாளராகவும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் பிரதம உள்துறைக் கணக்காய்வாளராகவும் பணிபுரிந்து தேசிய வீடமைப்புக்குப் பெரும் பணி செய்துள்ளார்.

உத்தியோகத்தின் மூலம் தான் பெற்றுக்கொண்ட திறன்களையும் அனுபவத்தையும் சமூக எழுச்சிக்கு வித்திட்டுப் பெருவெற்றியும் கண்டுள்ளார்.

'எந்தக்குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என்ற கூற்றுக்கு முற்று முழுவதுமாகத் தன் அன்னை தன்னை உருவாக்கியதை அவரே நினைவு கூர்கின்றார்.

இவரது தாயார் 1989இல் இறையடி சேர்ந்தபோது வெளியிடப்பட்ட நினைவு மலரில் இவர் குறிப்பிட்டிருக்கும் செய்தி இங்கு கவனிக்கத்தக்கது. இதைப் படிப்போர்க்கும் பயன் தரத்தக்கது.

'விரதம் பூண்டு என்னை ஈன்றதாய், இறுதிவரையில் என்வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக இருந்து 53 ஆண்டுகளாக என்னை வளர்த்து ஆளாக்கியுள்ளார். என்னை ஆளாக்குவதில் அன்னை கையாண்ட கொள்கைகளும், செயற்பாடுகளும்தான் என்னை இந்த நிலைக்கு உயர்த்தின. ''எல்லாம்வல்ல இறைவனே எங்கும் என்றும் எமக்குத் துணை'' என்ற நம்பிக்கையூட்டி, சமயப் பணிகளில் ஈடுபடுத்தி, பக்திமார்க் கத்துக்கு வழிகாண்பித்து, என்னை நல்வழிப்படுத்தி, மாவை விநாயகர் ஆலயத்தினதும், மாவை அம்பாள் ஆலயத்தினதும் வளர்ச்சிக்கும், முதன்மைப் பங்களிப்புக்கு வகை செய்தார்.

'கண்காணிப்புடன் கூடிய தடைவிதியாக் கொள்கை' மூலம் என்னைச் சமூகப்பணிகளில் ஆழமாக ஈடுபடச் செய்து தவறுகளைக் கண்காணித்து சமூகத்துக்கு எனது பங்களிப்பைச் செய்யத் தூண்டியதன் பயனாக மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றக் கழகங்களின் தோற்றத்துக்கும் என்னை முதன்மையான பணி செய்ய வழிகாட்டியவர் என் தாயார்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகங்கள் ஐந்தாம் வகுப்புடன் கல்வியை நிறுத்திய காலகட்டத்தில் 'பட்டினிவரினும் படிக்க வைப்பேன்' எனச் சபதம் பூண்டு உறுதியோடு என் கல்வி வளர்ச்சிக்குப் பங்களித்ததன் மூலமாகவே நானும் கல்வித்துறையில் கணிசமான முன்னேற்றங்களைக் காணமுடிந்தது' என்கின்றார்.

இவர் இளைஞராயிருந்த காலத்தில் தான் வாழும் சமூகத்தில் நிலவிய சமூக உறவுகளின் பிற்போக்குகள், பிரிவினைவாதம், நேரக்கட்டுப்பாடின்மை, புனிதம் பேணாமை, கல்வியில் நாட்டமின்மை முதலான குறைபாடுகளை மனதிற் கொண்டு 1947இல் ஆலயங்களைத் தளமாகக் கொண்டு சமய சமூகப் பணிகளை ஆரம்பித்தார்.

மாவைச் சித்தி விநாயகர் ஆலயம், மாவை அம்பாள் ஆலயம் என்பவற்றில் கோயில் வழிபாடு ஒழுங்கு, பண்ணிசை வகுப்பு பஜனை செய்தல், யோகா சனப் பயிற்சி, தியானப் பயிற்சி, சிரம தானப் பணிகள் என்பவற்றினூடாகச் சிறுவர்களையும் வயதானவர்களையும், ஒன்றிணைத்து ஒரு சமூக விழிப்புணர்ச்சியாகப் பணிகளைத் தொடங்கினார். இவரது தன்னலங்கருதாத தூய்மையான சிந்தனையுடன் கூடிய இப்பணியில் பலரும் இணைந்து கொண்டனர்.

இதன்பேறாக 12.09.1955 இல் மாவை அம்பாள் ஆலயத்தில் மாவை பாரதி வாசிகசாலை என்ற நாமத்துடன் ஆர்.எம்.நாகலிங்கத்தின் தலைமையில் இந்த நிறுவனம் தோன்றியது. வேலைத்திட்டம் வகுத்து பணிகள் பன்முகவளர்ச்சி கண்டது.

வாசிகசாலை என்ற பெயர் அதனுடைய நோக்கத்துக்கும், பன்முகப்படுத்தப்பட்ட சேவைகளுக்கும், பொருத்தமானதெனக் கருதப்பட்ட காரணத்தால் 19.10.1971 இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

1955இல் ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றத்தின் வளர்ச்சியை ஆவணப்படுத்தி 1980-09-12இல் வெள்ளிவிழாவும் மலர்வெளியீடும் நடைபெற்றன. இவருடைய தலைமையிலேயே படிமுறையான வளர்ச்சிகள் ஏற்பட்டன. தலைவரின் ஆளுமைத்திறமும் ''நல்லதையே சிந்திப்போம், நல்லதையே சொல்வோம், நல்லதையே செய்வோம், நன்மை நம்மை நாடி வரும்,'' என்ற இலட்சியம் செயற்பாடு, நிறுவனப் பணிகளை மேலோங்கச் செய்தன.

இதன் பயனாக 1980 இல் மாவை சமூக எழுச்சி இயக்கம் தோற்றம் பெற்றது.

ஆறு அம்சத் திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. தொடர்ந்து மூன்றாவது கட்டமாக கிராம மட்டத்தில் தாபிக்கப்பட்ட நிறுவனரீதியான தலைமையால் 24 சமூக முன்னேற்றக் கழகங்கள் நிறுவப்பட்டு எழுச்சிக்கு வழிவகுக்கப்பட்டது. 1981இல் மாவை எழுச்சி இயக்கத்தின் தொண்டமானாறு தேசிய மாநாட்டில் ஆறு அம்சத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு 'சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்' தாபிக்கப்பட்டது.

1998ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட முகாமைக் கட்டமைப்பு முறையால் பணிகள் விஸ்தரிக்கப்பட்டு கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை, கொழும்பு மாவட்டங்களிலும் மாவட்ட ரீதியாகப் பிராந்திய முகாமைச் சபைகளும் அமைக்கப்பட்டன.

1993முதல் எடுத்துக்கொண்ட விடா முயற்சியின் பயனாக 1999.12.14இல் 1999 ஆம் ஆண்டு 52ஆம் இலக்கத்தைக் கொண்ட புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியச் சட்டமானது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் அகில இலங்கை தழுவிய மட்டத்தில் சேவை விஸ்தரிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

இந்த நிதியத்தின் நிதிவளங்களாக நன்கொடை பங்கு மூலதனம், ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் நிதி, திருமண நாள் நினைவுப் புலமைப் பரிசில் நிதி, பிறந்த தினநாள் நினைவுப் புலமைப் பரிசில் நிதி, தனி நபரின் பெயரால் புலமைப்பரிசில் நிதி, பரிசளிப்பு நிதி, காணி கட்டட நிதி முதலான பன் முகப்பட்ட நிதி வளங்கள் மூலம் கல்விப் புலமைப்பரிசில்கள் வழங்கிக் கல்வி பெறவாய்ப்பு இல்லாத மாணவர்களை உருவாக்கியது மட்டுமன்றி இப்பொழுதும் அப்பணிகள் தொடர்வதைக் காண முடிகிறது.

2008இல் வெளியிடப்பட்ட புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபை அறிக்கையும் நிதிக் கூற்றுக்களின் திரட்டும் (ஆண்டு 1993 முதல் 2008 வரை) எனும் வெளியீட்டின் மூலம் இச்சபையின் அளப்பெரும் பணியின் பரப்பையும், திட்டவட்டமான கணக்குகளின் விவரத்தையும் அறியமுடிகின்றது.

இத்தனை வளர்ச்சிக்கும், தொடர் பணிகளுக்கும் நிர்வாகக் கட்டமைப்புக்கும் காரணம் எழுச்சித் தந்தை ஆர்.எம்.என்.இன் தலைமைத்துவ ஆளுமைப்பண்புதான் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அவருடைய அறிவுத்திறனும், அனுபவமுதிர்ச்சியும் அபிவிருத்தி நோக்கிய சிந்தனையும், எதிலும் தர்ம சிந்தனையுடன் கூடிய செயற்பாட்டு வழிகாட்டலும், காலத்துக் கேற்ற வண்ணமான ஐக்கிய வளர்ச்சிக் கொள்கைகளும் இந்நிதியத்தை அதிசயிக்கத்தக்க வகையில் பயன்தரச் செய்து வருவதைக் காணமுடிகிறது.

அண்[illegible]க் காலத்தில், சுனாமி அனர்த்தம், போர் அனர்த்த[illegible]பாதிக்கப்பட்டவர்களுக்கு குறிப்பிட்ட [illegible]டங்களுக்குத் தேடிச்சென்று இந்நிதியத்தின் மூலம் செய்த உதவிகள் எண்ணில. இதன் மூலம் இந்நிதியத்தின் உறுப்பினர்களின் தர்மசிந்தனையை வளர்த்தல், தானம் வழங்கப் பயிற்றல் ஆகிய விழுமியப் பண்புகளும் விருத்தி செய்யப்படுகின்றன.

நீத்தார் பெருமை பேணுதல், அஞ்சலிகள், நினைவுநூல் வெளியிடுதல் மூலமாகப் புதியதோர் பயன்பாட்டு முறையை அறிமுகம் செய்துவைத்துள்ளமையும் பலரும் பின்பற்ற வேண்டியதொரு செயலாகும். நீத்தார் நினைவாக நினைவுநூல் நீத்தார் பெருமை பற்றியதாகவே அனேகமாக இருக்கும். ஆனால் இவர்களோ சமூகப் பயன்பாடுடைய, ஆக்கப்பாட்டுக்குரிய ஆக்கங்களைத் தாங்கியனவாகவே இதுவரை 74 நூல்களை வெளியிட்டுள்ளமை முன்மாதிரியான செயலாகும்.

தமது செயற்பாடுகளுக்குத் தக்க நல்லறிஞர்களை மதியுரைஞர்களாகக் கொண்டிருப்பதும், தங்கவேளை களில் அவர்களையும், இந்த நிதியத்தைச் சேர்ந்தவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் வழிப்படுத்தப்பட்டு வருவதும் நல்லதோர் பணியாகும். எழுச்சித் தந்தை ஆர்.எம்.என்னின் தனித்துவ ஆளுமைப் பண்பு எந்த வேளையிலும் எப் பதவிக்கும்தான் போட்டியிடாமல் ஏகோபித்த நன்நம்பிக்கையைப் பெற்றிருப்பதும், அதேபோல் தான் எந்தப் பாராட்டையும் பெறாமல், மற்றவர்களைப் பாராட்டுவதிலே நிறைவு காணுவதும் ஆகும்.

எழுச்சித் தந்தை ஆர். எம். என். எழுபத்தைந்து வயதைக் காணும் ''இந்த நன்னாளில் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய்'' வாழும் அவரை வாழ்த்துவதில் பெருமை பெறுகின்றோம். பல சமூகசேவை நிறுவனங்கள் தோன்றுவதும் சில ஆண்டுகளில் அவை நலிவடைந்து மறைந்து போவதும் நான் நேரில் கண்டு கொண்டிருக்கும் காட்சிகளாயுள்ளன.

அப்படி இருக்க, இந்த எழுச்சி இயக்கம், கடந்த அறுபத்தைந்து ஆண்டு

சைவப்புலவர்
சு.செல்லத்துரை
ஒய்வு நிலை அதிபர்,இளவாலை

காலமாகப் பணி செய்து தொடர்ந்தும் ஏறுநிலையில் மேல்நோக்கி உறுதியான கட்டமைப்புடன் வளர்ந்து வருவதும் பலருக்கும் வியப்பைத் தரும் செய்தியாகும்.

இதன் காரணம் பயனாளிகளின் குடும்பங்களின் மத்தியில் அன்று தொட்டு இன்றுவரை வளர்த்து வரப்படுகின்ற ஒழுக்க கலாசார, பண்பாட்டு விழுமியங்களின் விளைவு என்றே கூறலாம்.

நாம், தமிழர் பண்பாட்டு விழுமியங்களை இவ்வழிமுறை மூலம் பேணி வளர்க்கவும் இம்முறை எல்லோருக்கும் வழிகாட்டியாக இருக்கிறது. இடம்பெயர்வுகளால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற சூழ்நிலையால் தமிழர் கலை, கலாசார வாழ்வியல், பண்பாட்டு விழுமியங்கள் நலிவடைந்து வருகிறது என எண்ணத் தோன்றுகின்றது.

புலம்பெயர்ந்து வாழ்வோர் தாம் வாழும் சூழல்களுக்கேற்ப தம் இனத்தின் சுயமான விழுமியங்களை இழந்து அன்னியமயமாகி வருவதும் வருத்தத்துக்குரிய செய்தியாகும்.

நாம் எங்கு வாழ்ந்தாலும் தமிழர்கள்தான். எங்களுக்கென்று தனித்துவமான வாழ்வியல் பண்பாடுகள் உண்டு. அவைதாம் எங்களைத் தமிழர் என்று அடையாளப்படுத்தக் கூடிய இலட்சணங்கள் ஆகும்.

அவற்றை இழப் போமேயானால் நம் தமிழர் என்ற அடையாளமே இன்றி அன்னிய இனமாக மாறிவிடுவோம்.

இப்படியான ஒரு காலகட்டத்தில் இந்த எழுச்சி இயக்கமானது மிக உறுதியுடன் செய்துவரும் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிவளர்க்கும் செயல் யாவரும் பின்பற்றவேண்டிய வழிகாட்டலாய் அமைந்திருப்பது மனங் கொள்ளத்தக்கது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org